Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 36 | சர்வதேச மின் செய்தித்தாள் | 01 நவம்பர் 2022

15th Year veeravanakkam

## 15ஆம் ஆண்டு வீரவணக்கம்





லெப். கேணல் அலெக்ஸ்



மேஜர் செல்வம்



மேஜர் மிகுதன்



மேஜர் கலையரசன்



லெப். ஆட்சிவேல்



லெப். மாவைக்குமரன்

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர்

## பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன்

02.11.2007 அன்று கிளிநொச்சி, தமிழீழத்தில் சிறீலங்கா வான்படையின் தாக்குதலில் வீரச்சாவடைந்த தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் உட்பட ஏழு மாவீரர்களின் 15 ஆம் ஆண்டு வீரவணக்க நினைவு நாள்

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**











































**அறிவித்தல்**
Scarborough
Home Renovaiton
நிறுவனத்தில் பணிபுரிய
அனுபவம் உள்ள பணியாளர்கள்
தேவை
அழையுங்கள்: 647.218.7157


Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
சர்வதேச மின் செய்தித்தாள்

**www.sangathamil.ca**

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**எமது வீர சுதந்திர வரலாறு மாவீர்களின் இரத்தத்தாலும், வியர்வையாலும், கண்ணீராலும் எழுதப்பட்டிருக்கின்றது**





# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபோசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சி யும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# சாவுக்கு விலங்கிட்ட நெருப்பு மனிதர்கள் கடற்கரும்புலி மேஜர் கோபி, மேஜர் கணேஸ்

## கடற்கரும்புலி மேஜர் கோபி




நிலையுடன் பெயர்: கடற்கரும்பிலி மேஜர் குமணன் (கோபி)
நிலையான பெயர்: சுப்பிரமணியம் செல்வலிங்கம்
வீரப்பிறப்பு: 06.06.1973
நிலையான முகவரி: இல. 104 ஜெயபுரம், பல்லவராயன்கட்டு - மன்னார்
நிகழ்வு: 12.11.1993 பூநகரி - நாகதேவன்துறை சிறிலங்கா தரைப்படை, கடற்படை கூட்டுத்தளம் மீது மேற்கொண்ட "ஒப்ரேசன் தவளை" நடவடிக்கையின்போது பூநகரி கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் கலம் மீதான தாக்குதலில் வீரச்சாவு

ஒப்பரேஷன் தவளை"க்கு இன்னும் பத்தே நாட்கள் தான் இருக்கின்றன.

கோபி ஊருக்குப் போனான்.

தாயினதும் சேயினதும் மகிழ்ச்சிகரமான ஒரு சங்கமம். பாசம் கரை புரண்ட அன்பு முத்தங்களின் பரிமாற்றம். எப்பவோ கேட்கவேணும் போல இருந்த தனது நீண்டகால மன உளைச்சலை அம்மா, மகனிடம் இப்போது வெளிப் படுத்தினாள்.

"உனக்குக் காலும் இல்லைத் தானே தம்பி... இனியும் இயக்கத்தில இருந்து என்னப்பன் செய்யப்போறாய்...?"

அந்தத் தாயுள்ளம் ஏக்கங்களோடு ஆதங்கப்பட்டது.

"காலில்லாட்டியும் பரவாயில்லையம்மா... இயக்கம் என்னைப் பார்த்துக் கொள்ளும்... நான் கடலில் வேலை செய்வன், கடற்புலிகளில படகு ஓடுவன்..."

"கடலில நேவி வந்திட்டா என்னடா தம்பி செய்வாய்...?..!

இது அன்னையின் அச்சம். அது இயல்பானது அவன் புரிந்து கொண்டான்.

புன்னகையோடு பதில் வந்தது...

"பயப்படாதீங்கள் அம்மா... பொடியல் இருக்கிறாங்கள் என்னைக் காப்பாற்றுவார்கள்; விடமாட்டார்கள்."

அம்மாவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லைத்தான். இருப்பினும், முகத்தில் திருப்தி தெரிந்தது.

பழைய நண்பர்கள் சேர்ந்தனர் 'பிரிந்தவர் கூடினால்...!' அது ஒரு ஆரவாரமான சந்திப்பு.

"அடுத்த மாவீரர் நாளுக்கு எங்கட வீட்டுக்காரரும் துயிலுமில்லம் போவினமடாப்பா"... கோபி சொல்லி வைத்தான்.

"இவன் நல்ல பகிடிவிடுகிறான்," நண்பர்கள் ரசித்துச் சிரித்தனர்.

"எங்கட வீட்டு ஒழுங்கைக்கு 'கோபி வீதி' என்று பெயர் வைக்க வேண்டிவரும்" – கோபி இதையும் சொல்லிவைத்தான்.

நாலைந்து நாட்கள் இனிமையாகக் கழிய, எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு கோபி போய்விட்டான்.

**1989**ம் ஆண்டின் மையப்பகுதியில், அவன் தன்னை ஒரு விடுதலைப் புலி வீரனாக்கிக் கொண்டான்.

"சேரா பிறாவோ" முகாமின் 2வது தொகுதியில் பயிற்சி எடுக்கும் காலத்திலேயே, அவனது ஆற்றல்கள் வெளிப்படத் துவங்கின.

மன்னார் மாவட்டப் படையணியில் இருந்து, பல்வேறு சண்டைகளிலும் பங்காற்றித் தனது திறன்களைக் காட்டிய கோபி, சிலாபத்துறை இராணுவ முகாம் மீது நாம் தொடுத்த மிகப் பெரிய தாக்குதல் முயற்சியின் போது, பலத்த காயத்துக்குள்ளானான்.

சிகிச்சை முடிந்து – காயம் மாறி – அவன் வந்த பின்பு, "சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி"யின் உருவாக்கத்திற்கென மன்னார் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்து அனுப்பப்பட்ட புலிகளின் அணி, அவனையும் கொண்டிருந்தது.

சாள்ஸ் அன்ரனி படையணி, அவனது ஆற்றல்களுக்கும் திறமைகளுக்கும் களம் அமைத்துக் கொடுத்தது என்று சொல்லலாம்.

அந்தப் படையணி எதிரியை எதிர்கொண்ட ஒவ்வொரு சர்ந்தப்பத்திலும், அந்த வீரன் தீரத்துடன் களமாடினான்.

சாள்ஸ் அன்ரனி படையணியில், கண்ணிவெடிப் பிரிவில் தான் அவனது பணி துவங்கியது. கால அசைவில் தளபதி பால்ராஜின் பாராட்டுக்களைப் பெற்ற போராளிகளுள் ஒருவனாக அவன் வளர்ந்தான்.

சிங்களப் படையினர் விழி இமையாது காவலிருக்கும் அரண்களின் ஊடுகளுக்குள் அந்த வீரனது இரவுகள் கழியும்.

தனது பாதுகாப்பிற்கெனத் தன்னைச் சூழ எதிரி விதைத்து வைத்திருக்கும் மிதிவெடிகளையும், பொறிவெடிகளையும் அகற்றிவிட்டு, அவனது அழிவிற்கென, அவனுக்கு நடுவில் எமது வெடிகுண்டுகளையும், கண்ணிப் பொறிகளையும் நாட்டும் அபாயகராமான பணி அவனுக்குடையதாக இருந்தது.

எதிரி குடியிருந்த இடங்களுக்கெல்லாம் அவன் குண்டுகொண்டு போனான்.

கண்ணிவெடிப் பிரிவில் திறமையான முறையில செயலாற்றும் போதே துணிகரமாக அவன் பார்த்த வேவு வேலைகளும், வேவுப் பணியில் அவன் காட்டிய ஈடுபாடும், அவனை ஒரு வேவுப்படை வீரனாக்கியது.

அவனது ஆர்வத்திற்கும் ஊக்கத்திற்கும் வழி அமைத்து நெறிப்படுத்திய தளபதி பால்ராஜ், கண்ணிவெடிப் பிரிவில் செயற்படும் அதே சமயத்திலேயே இராணுவ வேவுப்பிரிவில் செயற்படவும் அவனை நியமித்தார்.

உயிராபத்து நிறைந்த சூழ்நிலைகளில், எதிரியின் உள்ளங்கையில் ஏறி அவனது கைரேகைகளை மனனஞ்செய்து மதிநுட்பம் மிக்க விதமாக கோபி செய்த வேவுப் பணிகள் அதிசயமானவை. தாக்குதல் திட்டங்களைத் தயாரிக்கின்ற போது, அவற்றின் பயன்பாடுகளின் தார்ப்பரியங்கள் உணரப்பட்டன.

ஆனையிறவுக்குக் கிழக்கே – தட்டுவன்கொட்டியில், சிங்களப் படையின் 22 காவலரண்களை வீழ்த்திய தாக்குதலின் வெற்றிக்காக, மேஜர் கிண்ணியோடு சேர்ந்து அவன் ஓய்வற்று உழைத்தான். தாக்குதல் இலக்கு தெரிவு செய்யப்பட்டதிலிருந்து சண்டை முடிந்து வெளியேறுகின்ற வரை, இடைப்பட்ட காரியங்கள் எல்லாவற்றிலும் கோபி இருந்தான்.

இதன் பின்னர் , பூநகரிக்குத் தெற்கே பள்ளிக்குடாப் பகுதியில் காவல் அரண்கள் மீதான பெரியதொரு தாக்குதலிற்கான தயாரிப்புக்கள் செய்யப்பட்டன. அங்கு கோபி, இரவு பகலின்றிப் பாடுபட்டான். தாக்கும் பிரதேசத்தின் ஒரு பகுதிக்கு வேவு பார்த்து, தாக்குதல் அணிகளுள் ஒரு தொகுதிக்குப் பாதைகாட்டி, தாக்குதல் குழுவோடு களத்திலும் இறங்கி அந்தத் தாக்குதலில் கோபி ஆற்றிய பங்கு, முக்கியத்துவம் மிக்கது. ஆனாலும், ஆற்ற முடியாத பெரும் சோகம் அவனது இதயத்தைக் கவ்விய இழப்பாக, அந்தத் தாக்குதலில் "லெப். கேணல் சுபன்" களப்பலியாக நேர்ந்துவிட்டது.

அடுத்ததுதான் பலாலி –

சிங்களை ஆட்சியாளர்களையும் படைத் தளபதிகளையும் அதிர்ச்சியில் ஆழ்த்திய மிகப்பெரிய தாக்குதல் நடவடிக்கை அது!

பலாலி கூட்டுப்படைத்தளத்தின் கிழக்குப் பகுதியில், விமான இறங்கு தளத்தின் பாதுகாப்பிற்கென இராணுவ நடவடிக்கை ஒன்றின் மூலம் அமைக்கப்பட்ட நான்கரைக் கிலோ மீற்றர் நீளமான பாதுகாப்பு வியூகத்தைப் புலிப்படை வீரர்கள் பிய்த்தெறிந்த வீரசாதனை அது.

கொரில்லாப் போர்முறையின் ஒரு புதிய பரிணாம வடிவத்தில் புலிகள் நிகழ்த்திய இந்தப் பெருமெடுப்பிலான தாக்குதலின் திட்டத்தை வரைவதற்கு உறுதுணையாக இருந்த முக்கியமானவர்களுள், கோபியும் ஒருவன்.

எதிரியின் ஒவ்வொரு அசைவையும் துல்லியமாக அவதானித்து, ஒவ்வொரு அங்குலத்தையும் துணிகரமாக வேவு

பார்த்து, தாக்குதலின் போது தாக்குதல் அணிகளுக்கு வழிகாட்டியாக சென்றதோடு மட்டும் நின்றுவிடாது…

போரிடும் வீரனாய்ச் சண்டையில் இறங்கி, இடது காலை ரவை துளைத்துச் சென்ற பின்பும் சண்டையிட்டு, காயமடைந்த, களப் பலியான தோழர்களுடன் ஆயுதங்களை அகற்றும் வரை, களமுனையிலிருந்து தான் வெளியேற மறுத்து, சோர்ந்து விழுந்து, சுய நினைவிழந்து, "இனி இயங்காது" என்ற காலை மருத்துவர்கள் இதயம் நோக அகற்றிவிட…

அந்த வெற்றியின் பிரசவிப்பிற்கா மூன்று மாதகாலமாக–படுக்கையின்றி, பட்டனி கிடந்து – ஓயாது சூழன்று – அல்லும் பகலும் கசங்கிய அந்த விடுதலைப்புலி. உடல் வேதனையோடும் ஆனால் உள நிறைவோடும் படுத்திருந்தது.

ரவையுடைத்துச் சென்ற எலும்பிற்கு கட்டுப்போட்டுக் கொண்டு, அடுத்த கட்டிலில் படுத்திருந்த நண்பனிடம் கோபி அடிக்கடி சொல்லுவான்.

"கால் போனது கவலைதான்; ஆனா அது ஒரு பிரசினை இல்லை. போராட்டத்துக்காக செய்யிறதுக்கு இன்னும் எவ்வளவோ வழியிருக்குத்தானே…"

**கோபி!**

அவன் மிகவும் மிருதுவானவன். எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் விதமாக அவன் நட்புக் கொள்ளும் முறை அபூர்வமானது.

அடுத்தவர்களை அனுசரித்து, அன்புகாட்டி அவன் பழகும் பண்பு அற்புதமானது.

தான் நிற்கும் இடம் எல்லாவற்றையுமே கும்மாளச் சிரிப்பாலும், குதுகலத்தாலும் நிறைத்துவிடும் அவனுடைய குணாம்சம் சிறப்பானது.

இலட்சிய உறுதியாலும், விடா முயற்சியாலும், செயற்திறனாலும் வளர்ந்தவன் அவன்.

வேவு வேலைகள் கொடுக்கப்படும்போது, ஒப்படைக்கப்பட்ட பணியை முழுமையாகவும், திறமையாகவும் செய்து முடிக்கும் வரை, "செய்து முடிக்க வேண்டும்" என்ற உணர்வின் உந்துதலோடு, திரும்பத் திரும்பப் போய், முயற்சி எடுக்கும் தன்மை அவனுடையது.

எப்பொழுதும் சண்டைகளைப் பற்றியே பேச்சு; தாக்குதலைப் பற்றியே எண்ணம்; போர்த் திட்டங்களைப் பற்றியே சிந்தனை. தளபதி பால்ராஜிடம் அவன் கதைக்காத நாள் கிடையாது; கதைப்பதற்கு பகலென்றும் இரவென்றும் நேரம் கிடையாது; அந்தக் கதைகளிலெல்லாம் போரின்றி வேறெதுவும் கிடையாது.

"அங்கு ஒரு நல்ல 'ராக்கற்' இருக்கு"; "இந்த இடத்தில அவன் வழமையாக வந்து போறான்"; "அந்தப் பக்கம் அடிபடக்கூடிய மாதிரி இருக்கு" என்றுதான் அந்தப் புலிவீரன் பேசிக்கொண்டிருந்தானே அல்லாமல், தனது குடும்பத்தின் கஷ்ட நிலைமையைப் பற்றி, வானமே கூரையான அவர்களின் வாழ்வைப் பற்றி, அவன் ஒரு போதுமே வாய் திறந்ததில்லை.

**அ**து மலையகத்தைச் சேர்ந்த ஒரு தமிழ்க் குடும்பம்.

கேகாலையில் உள்ள 'மாவனெல்ல'தான், சுப்பிரமணியம் ஐயாவினுடைய குடும்பத்தின் பூர்விகக் குடிநிலம்.

ஒரு அக்காவிற்கும் மூன்று தம்பிகளுக்கும் இடைப்பட்டவனாக, 1973 ஆனி 6ல் பிறந்தவனுக்கு செல்லிங்கம் எனப் பெயரிட்டு, கண்ணன் என்று செல்லமாக அழைத்தனர்.

அந்தக் குடும்பத் தின் நிறைவான பொருளாதார வாழ்வை மட்டுமல்ல, அவர் களின் மகிழ்ச்சியையும் நிம்மதியையும் சேர்த்து சிங்களப் பேரினவாதம் சிதைத்தது.

பத்து வருடங்களுக்கு முன்னர், இலங்கைத் தீவையே இரத்த களமாக்கிய, தமிழர்கள் மீது கோரமான இன வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்ட போது, விரட்டியடிக்கப்பட்ட குடும்பங்களுள் அதுவும் ஒன்று.

அல்லல்பட்டு வந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்களோடு, அந்தக் குடும்பத்தையும் தாங்கிக் கொண்டது தமிழீழம்.

மன்னாரில் பல்லவராயன்கட்டு கிராமத்தில் அவர்கள் குடியேறும்போது, கோபிக்கு பத்தே வயதுதான்.

"சிங்களவர்களோடு தமிழர்கள் ஒருகாலத்திலும் சேர்ந்து வாழ முடியாது" என்பது, ஒரு ஆழமான உண்மையாக, அந்தப் பிஞ்சு நெஞ்சில் அப்போதேயே பதிந்தது.

நன்றாகப் படிக்க வேண்டுமென்றும், நல்ல அறிவாளியாக வரவேண்டும் என்றும் அந்தச் சிறுவனுக்கு நிறைய ஆசை. அதில் ஊக்கமும் ஆக்கமும் கொண்ட பள்ளிக்கூட மாணவனாக அவன், 9ம் வகுப்பு வரை பாடசாலைக்கு போனான்.

படம் பார்க்கவென்று அம்மா கொடுக்கும் பணத்தை வாங்கிச் சென்று, படிப்பதற்குப் புத்தகங்கள் வாங்கிவந்து சேர்க்கும் அளவிற்கு இருந்தது அவனது கற்கும் ஆர்வம்.

ஆனால், உக்கி உதிரும் கூரையும் சொரிந்து சரியும் திண்ணையுமாக அந்தக் கொட்டில் வீட்டின் ஏழ்மை நிலையினால், அவனது ஆர்வத்திற்கும் முயற்சிக்கும் ஒத்துழைக்க முடியவில்லை.

இந்த வேதனை அவனது மனதைப் பாரமாக அழுதததும் வேளைகளிலெல்லாம், தாங்கள் அவலமாக ஓடிவந்த அந்த நாள், அவனது நினைவில் உறைக்கும்.
விரிவாக்கம் கண்டு வந்த விடுதலைப் போராட்டத்தில், தானுமொரு தமிழ்க் குடிமகன் என்ற வகையில், தனக்குரிய பங்கை உணர்ந்து கொள்ள அவன் தவறவில்லை.

படித்து முன்னேற வென்றும் என்ற ஆர்வத்தோடு வாங்கிய பாடப் புத்தகத்திற்க்குள், ஒளித்து வாங்கி வந்த போராட்ட நூல்களை மறைத்துப் படிக்க அவன் துவங்கினான்.

அந்தச் சிறுவன் வளரவளர அவனுள் அரும்பியிருந்த விடுதலை உணர்வும் விஸ்வரூபம் எடுத்துவந்தது. அது ஒரு கட்டாயக் கடமையாகவும் அவனுள் பரவியது.

**க**டற்புலிகள் அணி அந்த வீரனைத் தனதாக்கிக்கொண்டது 1993 இன் ஆரம்பத்தில்தான்.

எதிரியானவன் சிறந்த சண்டைப் படகுகளுடன், நவீன ஆயுதங்களுடனும் கடலில் வருகின்றான். எம்மிடமிருப்பது குலையாத ஆன்ம உறுதியும், எம் உயிரும்தான். அவற்றைக் கொண்டு நாங்கள் அவனைச் சந்தித்தேயாக வேண்டும் என்ற கருத்தைச் சுமந்து வாழ்ந்த அந்த வேங்கையின் கரும்புலிக் கனவு நனவாக, சர்ந்தப்பமும் கிடைத்தது.

கிளாலிக் கடலில் எதிரியைத் தேடியலையும் வெடி மருந்துப் படகொன்றுக்கு கோபி சொந்தக்காரனாயிருந்தான்; இன்னொன்றுக்குக் கணேஸ்.

வரதனும், மதனும் உடைத்த பின், நாகதேவன்துறையில மிஞ்சிக் கிடந்த விசைப்படகுகள் புலிகளின் கைக்கு மாறும்வரை அவைதான் அவர்களின் குறி.

இலக்குகளைத் தேடி அவர்கள் போனார்கள்; ஆனால் இலக்குகள் அவர்களை விட்டு தப்பியோடிக்கொண்டிருந்தன.

கடலலை போல காலமும் கரைய வந்து சேர்ந்தன "ஒப்பரேஷன் தவளை" யின் நாட்கள்.

கோபியின் கடைசி 48 மணிநேரங்கள் அவை–

யாழ். கடல்நீரேரியின் ஓரத்தோடு கௌதாரிமுனைக்கும் பள்ளிக் குடாவிற்கும் மேற்கே, இந்துமா சமுத்திரத்தின் ஆர்ப்பரிக்கும் அலைகளை ஊடறுத்து அவனது படகு விரையும்.

அவனைக் காணும் எதிரியின் பீரங்கிப் படகுகள் மண்டைதீவுப் பக்கமாக ஓட்டத்துக்கு விலகும்.

"உங்களை நம்பியே தரையில் எங்கள் போராளிகள் போராடுகிறார்கள். சமர் முடிந்து அவர்கள் முற்றாக வெளியேறும் வரை நேவி இறங்காமல் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு உங்களிடம் உள்ளது"

சண்டைக்கு முன்னர் தேசியத்தலைவர் சொன்னதை ஒவ்வொரு கணமும் அவன் நினைவுபடுத்திக் கொண்டான்.

நடுக்கடலில் இயந்திரம் பிசகும், படகு உடனடியாகக் கரைக்கு விரையும் அவனது "அவசரம்" அவசரப்படுத்தும் படகு மீண்டும் புறப்படும். அந்த இரண்டு நாட்களுக்குள் இது அடிக்கடி நடந்தது.

இப்படியாக வந்து வந்து போனவனை – கடைசித் தடவைக்குப் பிறகு "அதே சிரித்த முகத்தோடு" நாங்கள் காணவில்லை…

எங்கள் கோபி!

"கடலில நேவி வந்தால் பொடியல் காப்பாற்றுவார்கள்" என்று அம்மாவிடம் சொல்லிவிட்டு வந்தாயா…

எப்படியடா முடியும்?

எங்களால் நெருங்க முடியாத உயரத்தில் நீ;

எங்களால் எட்டமுடியாத உயரத்தில் உனது இலட்சிய வேட்கை!

நண்பா! அந்த இலட்சியத்தை அடையும் வரை – அதே வழிகாட்டலில் – நாம் அணிவகுப்போம்.

சென்று வா!

விடுதலைப்புலிகள் (மார்கழி, தை1994)
"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

கரும்புலி மேஜர் கணேஸ்

கரும்புலி மேஜர் கோபி

"மனித தியாகத்தின் இமயத்தைத் தொட்டுவிட்ட இந்த இனிமையானவர்களை நான் அறிவேன். அவர்களது நெஞ்சத்தின் பசுமையில் ஊற்றெடுத்த உணர்வுகளையும் நான் புரிவேன். ஏதோ ஒன்று, மனித விடிவை நோக்கி நகரும் உந்து சக்தியாக அவர்களை ஆட்கொண்டிருந்தது. அந்த விடுதலையின் தாகத்தைத் தீர்ப்பதற்கு, எதையும் செய்ய அவர்கள் தயாராக இருந்தார்கள்." – தலைவர் –



# கடற்கரும்புலி மேஜர் கணேஸ்

கிளாலிக் கடலின் அலைகள் நனைத்துச் செல்லும் கால்களின், குருதிக் கரை பிசுபிசுத்த ஒவ்வொரு காலையின் போதும் –

பிணவாடையைக் காவிவரும் கடற்காற்றின், ஒவ்வொரு வீச்சின் போதும்–

அவர்களுக்குள் இனம்புரியாத ஒரு ஆவேசம் கொதித்து எழும்.

கிளாலிக் களத்தில் தளபதி சாள்ஸ் விழ்ந்தபோது, அது அவர்களுக்குத் தாங்கமுடியாத பேரிழப்பாக ஆகிவிட்டது.

எல்லாவற்றுக்குமாக சேர்த்துப் பதிலடி கொடுக்க அவர்கள் துடிதுக்கொண்டிருந்தார்கள்.

வரதனுக்கும், மதனுக்கும் முந்திய அந்த 60 நாட்கள்–

அவர்கள் சக்கை வண்டிகளோடு பகைவனை துரத்துவதும், அவன் சண்டை பிடிக்காமலே தப்பி ஓடுவதும், பின்னர் ஏமாற்றத்தோடு இவர்கள் திரும்பிச் செல்வதுமாக கழிந்த அந்த இரவுகள்.

அவர்களில் ஒருவருக்காக தன்னை அனுப்பிப் பார்க்குமாறு நச்சரித்துக்கொண்டிருப்பான் கணேஸ்.

“டோரா”வை நெருங்குவதற்கான தாக்குதலின் திட்டம் தயாரிக்கப்பட்ட போது–

அந்தச் சாதனையின் சாதனையாளர்களுள் ஒருவனாகத் தான் போக வேண்டுமென்ற ஆதங்கம் அவனுக்கு.

பருத்தித்துறைக் கடலில் புவீந்திரனும், மணியரசனும் 15 நாட்களுக்கு மேல் காத்திருந்த காலத்திலும் நச்சரிப்பு.

ஆனாலும், கணேஸ் இல்லாமலேயே அந்த இரண்டு தாக்குதல்களும் வெற்றிகரமாக முடிந்த போதும் கூட, உற்சாகம் குன்றாமல் அடுத்த தாக்குதலுக்கான காத்திருப்புகளில், வேட்கையோடு அவனது நாட்கள் நகர்ந்தன. கூடவே கோபியும் இன்னும் சில கரும்புலிகளும்.

ஏற்கனவே இரண்டு விசைப்படகுகளை இழந்துவிட்ட எதிரி பின்வந்த நாட்களில் அதிக அவதானத்துடனேயே இயங்கினான்.

வரதன், மதனுக்குப் போல, கண்டபின் தப்பியோடும் தந்திரத்தை அல்லாமல் இவர்களின் கண்களில் தட்டுபடுவதைத் தவிர்த்து விடுவதையே தான், எதிரி தனது யுத்தியாகக் கையாண்டான்.

இப்படியாக் இலக்கை அடையாத துயரோடு இவர்கள் திரும்பி வருவது கூட, பூநகரிக்குள் “தவளைகள்” நுழையும்வரை தான் நீடித்தது.

கடலில் இரை தேடிவிட்டுக் கரையேறும் சமயங்களில், சக்கை வண்டிகளில் வரும் மற்றவர்கள், எங்கள் சண்டைப் படகுக்களினூடு லாவகமாக வளைத்துத் திருப்பி அலை கிளப்ப ஓடிக் காட்டுகிறபோது. கணேஸ் மட்டும் மெதுவாக ஓடி, ஓரமாக வந்து, அமைதியாகக் கரையேறுவான்.

“இந்த மாதிரி ஓடு உன்னால ஏலாதா?” என்று யாராவது கேட்டால் “எதிர்பாராம ஏதாவது நடந்திட்டால்…” என இழுத்து, “அந்நியாயமாக எல்லோருமே சாகாமல் ஆக்கபூர்வமாக ஏதாவது செய்யவேணும்” என்று தொடரும் அவன், “சம்பவம் ஆகக் கூடாது மச்சான்” சரித்திரம் ஆகோணும்” என்று முடிப்பான்.

இப்போது–

“ஒப்பரேஷன் தவளை” வரலாற்றுச் சமரில், நாகதேவன்துறை கடற்படைத் தளம் மீதான தாக்குதலில் முக்கிய பங்கேற்பு, அந்த வீரமகன் சரித்திரமாகிவிட்டான்!

அன்றைய காலம்–

இந்திய விஸ்தரிப்புவாதிகளின் படைகளை எதிர்த்து தமிழீழம் போர்க்கோலம் பூண்டிருந்த எழுச்சி நாட்கள்.

அப்போது அவனுக்கு வயது பதின்நான்கு தான்.

சாற மடிப்பிற்குள் சேட்டை மறைத்துக் கட்டிக்கொண்டு, அம்மாவுக்கு போக்குக் காட்டிவிட்டு வெளியேறியவனை பற்றி “தம்பி சந்தியில போஸ்ரர் ஒட்டிக்கொண்டு நிற்ப்பான்” என்றோ. “கடையில சாப்பிட்டுப் பார்சலுகள் கட்டிக்கொண்டு அந்தப் பக்கமாக போறான்” என்றோ யாராவது சொல்லுவார்கள்.

அம்மாவின் இதயம் வேகமாகத் துடிக்கும்.

அம்மாவுக்கும், நாகநாதி ஐயாவிற்கும் வாரிசாக, 21 வருடங்களுக்கு முன்னர் - பெப்ரவரி 13ம் நாளில் பிறந்தவன் ஜீவநேசன்.

இத்தனை வருடங்களாக பாசத்தைக் கொட்டி வளர்த்தெடுத்த தாயல்லவா… அவள் துடித்துப் போனாள். அவள் தான் துடித்தாளே தவிர அவன் ஓய்ந்ததில்லை.

திடீரென ஒரு காலை, அவசர அவசரமாக ஓடிவந்து அயல் வீட்டுக்காரர் ஒருவர், கடையில் சாப்பாட்டுப் பொதிகள் வாங்கிய ஜீவனை யாரோ காட்டிக் கொடுத்து, இந்தியர்கள் இழுத்துச் செல்கிறார்கள் என்ற செய்தியைச் சொன்னபோது, அம்மா இடிந்து போனாள். அந்த வீடு சாவீடு போலாகிவிட்டது. அழுகுரல்




நவரக்கிரி கிராமத்தை நிறைத்தது.

காங்கேசன்துறை இந்தியப்படைச் சிறையில் அடுத்த ஒரு வருடம் கழித்து. பார்க்கப் போகின்ற அப்பாவிடம் ஊர்ப் புதினங்களைத் தான் விசாரித்தானேயல்லாமல், வீட்டுப் புதினங்களையல்ல. மிகவும் அமைதியானவனான அந்தச் சிறுவனின் உள்ளத்தில், ஆவேசப் புயலொன்று அப்போது தான் மையங்கொண்டது.

இந்தியர்கள் வெளியேற்றப்பட்ட போது, அவர்கள் விடுவித்துவிட்டுப்போன கணேஸ், ஐந்தாறு நாட்கள் அம்மாவோடு இருந்துவிட்டு, முழுமையாகவே இயக்கத்திற்குப் போய்விட்டான்.

அம்மா துயரத்தோடு கடவுளை நேர்ந்து கொண்டிருக்க, அந்த விடுதலைப்புலி துப்பாக்கியோடு “போர் உலா” வந்தான்.

வட தமிழீழப் போர் அரங்கின் அநேகமான எல்லா முனைகளிலும், அவனுடைய துப்பாக்கி கனன்றிருக்கிறது.

கோட்டை முற்றுகையிட்டிருந்த போது, அதை முறியடிக்க வந்தவர்களை மண்டைதீவில் எதிர்கொண்டபோது, மாங்குளத்தில் படைமுகாமை அழித்தபோது, “வன்னி விக்கிரம” என்று படையெடுத்தவர்களை தோல்வியுறச் செய்த போது, தாயகத்தின் இதயத்தைப் பாதுகாத்து மணலாற்றில் “மின்னலை” தெறிக்கச் செய்தபோது, ஆனையிறவில் “பலவேகய”வில் புறப்பட்டவர்களை “ஆமை வேகய”வில் நகரச் செய்தபோது, மன்னாரில் படை எடுத்தவர்களுக்கு படையெடுத்த பதுங்கித் தாக்குதலின் போது – இப்படியாக எங்கும், எல்லாச் சமர்களிலும் கணேஸ் சுவடு பதித்தான்.

அந்தக் காலத்திலேயே, ஒரு கரும்புலித் தாக்குதலுக்கான கனவு அவனது இதயத் துடிப்போடு கலந்திருந்தத்து.

இப்படியிருக்கையில் ஒரு நாள் –

அது, கடந்த வருடத்தின் இறுதி. பலாலியிலிருந்து தெல்லிபளை நோக்கி முன்னேறிய “ஒப்பரேஷன் பூமியதிர்ச்சி”யை நிறுத்த நடந்த சண்டையின்போது – இடது முழங்காலுக்குக் கிழே துளைத்த ஒரு ரவை, முக்கிய நரம்போன்றை அறுத்துச் சென்றுவிட்டது.

சண்டைமுனையில் மருத்துவ வசதியின்மையால், பெருமளவு இரத்தம் வெளியேறிவிட, மயக்கமுற்று எடுத்துச் செல்லப்பட்ட கணேஸ்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, யாழ்பாணம் மருத்துவமனையின் கட்டிலொன்றில், வெடிபட்ட இடத்திற்க்குக் கீழே அந்தக் கால் அகற்றப்பட்டுவிட்ட நிலையில, அடக்கிக்கொள்ள முடியாத அழுகையோடு படுத்திருந்தான்.

போராட்டத்தில் காலை இழந்தமைக்காக அவன் கண்ணீரைச் சிந்தவில்லை. அருகில் நின்ற நண்பனின் கையைப் பற்றி அவன் விம்மினான்.

“இனி எப்படியடா நான் சண்டைக்குப் போறது…?”

கணேஸ் .!

எவ்வளவு மென்மையானவனாக அவன் வாழ்ந்தான்! எவரோடும் சச்சரவுக்குப் போகாமல், எல்லோரையும் சமாளித்துக் கொள்வானே! என்னதான் பிரசினையென்றாலும், விட்டுக் கொடுத்துவிட்டு விலகிக்கொண்டானே தவிர, அவன் சண்டை பிடித்துப் பெரிதாக்கியிருக்கமாட்டான். அவன் எவ்வளவோ பொறுமை சாலியாக இருந்தான் எல்லா விடயங்களிலுமே.

அவனை மேலோட்டமாக பார்க்கிற எவரும், எதுவுமே தெரியாத அப்பாவி என ஒரு கணிப்பீட்டை வைப்பார்கள்.

விசயம் தெரியாத நாலுபேரை இருத்திவிட்டு, எல்லாம் தெரிந்த மேதாவிகளைப் போல புழுகித்தள்ளும் நண்பர்களைத் தன்னிடம் வசமாகச் சிக்கவைத்து – “தேவையில்லாம வாயைக் கொடுத்து மாட்டிக்கொண்டோமே” என்று தலையைப் பிய்த்துக் கொண்டு எழுந்து போகிற அளவுக்கு அவன் கொண்டுபோய் விடுவான்.

இருப்பினும், தனக்குத் தெரியாத, அது தொடர்பான பூரண அறிவு இல்லாத, எந்த விடயங்களைப் பற்றியும் அவன் வாய் திறக்கவே மாட்டான். வெட்கப்படாமல், விஷயம் தெரிந்தவர்களிடமிருந்து விசயங்களைத் தெரிந்து கொள்வதில்த்தான் அவனுக்கு ஆர்வம் அதிகம்.

தான் செய்ய நினைக்கும் காரியங்களை செய்துமுடிக்கும் வரை முயற்சி எடுப்பதும், காலிழந்தவன் என்று கருணைகாட்டி மற்றவர்கள் உதவ முன் வந்தாலும் புன் சிரிப்போடு மறுத்துவிட்டு, தானே எல்லாவற்றையும் செய்துமுடிப்பதும், ஒரு கால் இழந்தாலும் கூட முகாமிலிருக்கும் முழு மனிதர்கள் செய்யும் வேலைகளெல்லாம் தன்னையும் ஈடுபடுத்த எத்தனிப்பதும் அவனது சிறப்பான அம்சங்கள் அவை நாங்கள் அவனிடம் படிக்க வேண்டிய பாடங்கள்.

காயம் மாறி – ஜெய்ப்பூர் காலோடு துயரத்தையும் சுமந்து – மருத்துவமனையிலிருந்து வந்தவனுக்கு, யாழ் மாவட்ட தாக்குதற் படைப்பிரிவில் நிதி வேலை கொடுக்கப்பட்டபோது, சண்டைக்குப் போக வேண்டுமென தளபதியோடு சண்டை

பிடித்து ஆனையிறவுக்கு போனதும்.

அகன்ற பாத்திரத்தில் சோறு குழைத்து, ஐந்தாறு பேர் சேர்ந்து நாங்கள் சாப்பிடும்போது - வெறுமையாகும் பாத்திரத்தை நிரப்பிவர வேறேவரையும் பாராமல் தானே தூக்கிக்கொண்டு எழுவதும்.

'ஜெயராஜ்' முகாமிலிருந்த 'அருகிருக்கை' பொருத்திய B.S.A. மோட்டார் சைக்கிளில் அவனை இருத்தி நாங்கள் தள்ளி விளையாடுகையில் - வளைத்து திருப்பி ஓட வீடு வசதி காணாதென்று முற்றத்தில் இறக்கி, பின் முற்றமும் வசதி காணாதேன்று வீதிக்கெடுத்தபோது, தளபதியைக் கண்டு நாங்கள் தடுமாற, வேலியோடு மோதி வண்டி கவிழ, தலையில் நல்ல அடிபட்ட அவன் எழுந்து பிடரியைச் சொறிந்துகொண்டு நின்றதும், தண்டனை தந்தபோது, கும்மாளமிட்ட படி அவனும் சேர்ந்து செய்ததும் .

கிளாலியில் எம்மவர்களை வேட்டையாட வரும் எதிரியை நாங்கள் வேட்டையாடும் கடற்சண்டைகளில், "நேவி"யைக் கலைத்து விரட்டும் புலிகளின் விசைப்படகுகளிற்கு அவன் ஒட்டியாய் இருந்ததும் .

ஐந்து நாள் ஒய்வு தந்து வீட்டுக்கனுப்ப 'இன்று படகுச்சேவை' என்று நாளேட்டின் செய்தியைப் பார்த்துவிட்டு, பாதுகாப்பு பணியில் ஈடுபட இரண்டாம் நாளே புறப்பட்டு அவன் கிளாலிக்கு வந்ததும் .

அப்போதெல்லாம் கரும்புலித் தாக்குதல் ஒன்று செய்ய வேண்டுமென்ற வேட்கையை, தனது மனக் குகையினுள் அவன் சுமந்துகொண்டு திரிந்ததும் .

நாங்கள் அடிக்கடி அவனைப்பற்றி பேசிக்கொள்ள எங்களுக் குள் உயிர்வாழும் அவனது நினைவுகள்.

அவனது வீரம்; அவனது தியாகம்; அவனது முயற்சி; அவனது விட்டுக்கொடுப்பு; அவனது முன்மாதிரி; ஒட்டுமொத் தமாக அவனே எப்போதும் நினைவுகொள்ளவேண்டிய எடுத்துக்காட்டுகள்.

கணேசா !

உனது வீட்டுக்குப் போய்வந்த அந்த இறுதிப் பயணம்.

அதை நினைக்கும் போதெல்லாம் உன் அம்மாவின் விழி ஓரங்களில் நீரின் கசிவு.

"பழஞ்சோறு குழைத்து தீத்தி விடணை" என்று சாப்பிட் டாயாம்.

ஒரு நாளுமில்லாதது போல, அப்பாவையும், அம்மாவையும் கொண்டு நீர் அள்ளிக் குளித்தாயாம்.

"தலையெல்லாம் காஞ்சுபோய்க் கிடக்கு தேடா... கொஞ்சம் எண்ணை வையன்ரா..." என்று ஆதரவாகக் கேட்ட அம்மா விடம், "நாளைக்கு கடல் தின்னப்போற தலைதானே யணை..." என்று சிரித்தபடி சொன்னாயாம்.

முன்னர் யாரோ சொன்னது நினைவுக்குவர, இப்போது சாது வாக சந்தேகமும் எழ, ஆச்சரியத் தோடும் அச்சத்தோடும், "நீ கரும் புலியாய் போகபோபோறியாம் தம்பி... உண்மை யாவோடா...?" என்று பரிதாபமாகக் கேட்ட அம் மாவை, சிரித்துக்கொண்டு வந்து கட்டிப்பிடித்துக் கொஞ்சி, "உன்னை விட்டுட்டுப் போவனோணை அம்மா!" என்று சொல்லிவிட்டுப் போனாயாம்.

இப்போது–

கண்ணீரோடு அந்தத் தாய், தன் வீரமகனின் படத்திற்குப் பூப்போட் டுக் கொண்டிருக்கிறாள்.

"ஒப்பரேஷன் தவளை"க்கான உற்சாகமான முன்னேற் பாடுகள்.

உறக்கமற்ற இரவுகள் ஓய்வற்ற நாட்கள்.

கடற்புலி வீரர்களின் கடுமையான கடற்பயிற்சி.

வெடிமருந்துப் படகினை எதிரியின் தளத்தோடு மோதும் செயல் முறையை, கணேஸ் சலிப்பின்றிக் களைப்பின்றி பயின்றான்.

அந்த நாள் வந்தது -

சர்வதேச செய்தி நிறுவனங்களின் அலைவரிசைகளில் புலிகள் இயக்கத்தை முதன்மைப் படுத்திய நாள் அது.

சாமம் கழிந்த நள்ளிரா வேளை.

சமர் ஆரம்பித்துவிட்டது பூநகரியில் புயல்வீசத் தொடங்கி விட்டது.

நாகதேவன்துறை கடற்படைத் தளத்தைச் சூழ்ந்த புலிகள் கடல் - தரை வழிகளிலான ஆக்ரோசமான பாய்ச்சல்.




அங்கிருந்த, "றாடர்" கோபுரமும் தகவல் பரிவர்த்தனை நிலையமும் தான் கணேசின் இலக்கு.

உரிய நேரம் வந்தது. உத்தரவுக்காகக் காத்திருந்தவன், இதுதான் உரிய தருணம் என்பதைத் தானாகவே தீர்மானித் தான்; புறப்பட்டான்.

கடலில் - தனது தளத்தைச் சுற்றி - எதிரி அமைத்திருந்த முட்கம்பி வேலிகளை எகிறிக் கடந்து பாய்ந்தது கணேசின் வெடிமருந்துப் படகு.

இலக்குப் பிசகாத தாக்குதல், தொடரும் வெடியோசைகளுக்கு நடுவே கடலதிரும் குண்டோசைச் கண்ணிமைக்கும் பொழுதில் பிரகாசித்த ஒளிப்பிழம்பு.

யாழ்ப்பாணக் கடல் நீரேரியில், தமிழர்களின் பிணங்களை மிதக்கச் செய்தவர்களை அதே கடல் நீரேரியிலேயே பிணங் களாக மிதக்கச் செய்துவிட்டு, உப்பு நீராக உருமாறிப் போனான் அந்த வீரன்!

- விடுதலைப்புலிகள் (மார்கழி, தை1994)






# நாம் 5 இலட்சம் தருகின்றோம் எங்கள் பிள்ளைகளை எமக்கு திருப்பி தருவீர்களா?

அக்டோபர் 17, 2022

வடக்கு -கிழக்கில் யுத்த காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், கொழும்பில் உள்ள ஐ.நா அலுவலகம் முன்பாக இன்று காலை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

போராட்டதின் போது யாழ் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி சிவபாதம் இளங்கோதை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் சுமார் 13 வருட காலமாக நாம் வீதிகளில் அலைந்து திரிகின்றோம். எங்களுக்காக குரல் கொடுக்க நாட்டில் யாரும் இல்லை. அதனால் தான் நாம் சர்வதேசத்தை நாடுகின்றோம். ஆனாலும் இப்போது சர்வதேசமும் எமக்கு கண் துடைப்பாகவே காணப்படுகிறது.

இப்போது எமக்கு இலஞ்சம் கொடுக்க அரசு முனைகிறது. எங்களுடைய பிள்ளைகளின் பெறுமதி உங்களுக்குத் தெரியாது. எமக்கு உங்களின் இலஞ்சம் வேண்டாம். இப்போது ஒரு உயிருக்கு 2 இலட்சம் ரூபா தருகின்றோம் என்று சொல்கிறார்கள். இந்தப் பணம் எமக்கு வேண்டாம். நாம் உங்களுக்கு 5 இலட்சம் தருகின்றோம். எங்கள் பிள்ளைகளை எமக்கு திருப்பி தருவீர்களா என்றார்.




# கொழும்பு – பௌத்தாலோக மாவத்தையில் அமைந்துள்ள ஐ.நா அலுவலகத்துக்கு முன்னால், வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் சர்வதேச நீதியை வலியுறுத்தியும் அரசின் 2லட்சம் ரூபா இழப்பீட்டையும் நிராகரித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது! – 17.10.2022

அக்டோபர் 17, 2022

வடக்கு மற்றும் கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஐ.நா அலுவலகத்திற்கு முன்பாக நீதி கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கு மற்றும் கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கான சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

காணாமல் போனோர் அலுவலகம் ஊடாக வழங்கப்படும் இழப்பீடு தமக்கு வேண்டாம் என்றும் சர்வதேச விசாரணையே தேவை என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு மேலதிகமாக ஒரு இலட்சம் ரூபாயை இழப்பீடாக வழங்குவதாக கடந்த வாரம் அரசாங்கம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு மற்றும் கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கான சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் இடம்பெற்று வருகின்றது.















# யாழில் 1,614.11 ஏக்கர் நிலத்தை சுவீகரிக்க முயற்சி!

அக்டோபர் 17, 2022

யாழ்.குடாநாட்டில் 1,614.11 ஏக்கர் நிலத்தை உயர் பாதுகாப்பு வலயத்துக்காக சுவீகரிக்கும் பணியை அரசாங்கம் தொடங்கியுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் சில இடங்களை உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்து கடந்த மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானியை இம்மாதம் ஜனாதிபதி ரணில் இரத்து செய்திருந்தார்.

இந்நிலையில் யாழில் உயர் பாதுகாப்பு வலயத்துக்காக மக்களின் காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

இதற்காக சுற்றுலா மற்றும் காணி அமைச்சு வெளியிட்ட அறிவித்தலை சுட்டிக்காட்டி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் விசனம் வெளியிட்டுள்ளார்.

1990 ஆம் ஆண்டு முதல் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் குறுக்கே எல்லைகளை இட்டு, அதன் ஊடாக இராணுவத்தினர் வீதிகளை அமைத்துள்ளனர்.

மேலும் வளமான செம்மண் நிலங்களை தங்களுக்குச் சொந்தமானதாகக் கருதி விவசாயம் செய்து வருகின்றனர் என புகைப்படத்தை வெளியிட்டு சுமந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.




MINISTRY OF TOURISM & LANDS
Land Section

My No. 4-3/17/2021/D/
Your No.
Date 2022.09.

MOD/PAC/02/L/1296/AY-VI 2022.08.22

02. ... 1614.11 ...

# மன்னார் மனித புதைகுழி அகழ்வுப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க நீதிமன்றம் உத்தரவு!

அக்டோபர் 17, 2022

மன்னார் மனித புதைகுழியின் அகழ்வுப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான திகதியை அறிவிக்க வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மன்னார் சதொச மனித புதைகுழி தொடர்பான வழக்கு மன்னார் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வாறு இன்று (17) உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கத் தேவையான நிதி குறித்து கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமென நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வழக்கு விசாரணை அடுத்த மாதம் 30ஆம் திகதி வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



# சிறீலங்கா அரசாங்கத்தின் உள்ளக ரீதியிலான பொறிமுறைகள் எதனையும் ஏற்கோம்!

அக்டோபர் 16, 2022

போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 13 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இதுவரை ஆட்சியிலிருந்த எந்தவொரு அரசாங்கமும் எமக்கான தீர்வைப் பெற்றுத்தரவில்லை. அதேபோன்று கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட எந்தவொரு ஆணைக்குழுக்களும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு தீர்வை பெற்றுத்தரும் நோக்கில் அவர்களை மனிதா



பிமானத்துடன் அணுகவில்லை.

எனவே, உண்மை மற்றும் நல்லிணக்க அலுவலகம் உள்ளடங்கலாக அரசாங்கத்தினால் உள்ளக ரீதியில் ஸ்தாபிக்கப்படக்கூடிய எந்தவொரு பொறிமுறையையும் எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது என்று வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் தலைவி யோ.கனகரஞ்சனி தெரிவித்துள்ளார்.

நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸ் தலைமையிலான ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர், அதனை அடிப்படையாகக் கொண்டு உள்ளக ரீதியில் உண்மையை கண்டறியும் பொறிமுறையொன்றை ஸ்தாபிக்கவிருப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ள நிலையில், மேற்படி ஆணைக்குழுவில் கடந்த புதன்கிழமை (ஒக் 12) முன்னிலையாகியிருந்த இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் எஸ்.ஈ.ஸ்கால்க் தென்னாபிரிக்காவில் உருவாக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் விரிவாக விளக்கமளித்தார்.

அதுமாத்திரமன்றி ஆணைக்குழுவில் கடந்த வெள்ளிக்கிழமை (ஒக் 14) ஆஜரான முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ, இலங்கையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்று ஸ்தாபிக்கப்படும் பட்சத்தில் அது எவ்விடயங்களை பூர்த்தி செய்யவேண்டும் என்பது பற்றிய பரிந்துரைகளை முன்வைத்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் நாட்டில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்று ஸ்தாபிக்கப்படும் பட்சத்தில், அதனை ஏற்பீர்களா என்று வினவிய போதே யோ.கனகரஞ்சனி மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது:

போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 13 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இதுவரை ஆட்சியிலிருந்த எந்தவொரு அரசாங்கமும் எமக்கான தீர்வை பெற்றுத்தரவில்லை. அதேபோன்று கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட எந்தவொரு ஆணைக்குழுக்களும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு தீர்வை பெற்றுத்தரும் நோக்கில் அவர்களை மனிதாபிமானத்துடன் அணுகவில்லை.

ஆகவே, அரசாங்கத்தினால் உருவாக்கப்படக்கூடிய உள்ளகப் பொறிமுறையின் ஊடாக ஒருபோதும் எமக்கான தீர்வை பெற்றுக்கொள்ளமுடியாது.

குறிப்பாக, காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகளில் போதியளவிலான வெளிப்படைத்தன்மை இல்லை என்பதுடன், இதுவரையில் அதனூடாக எந்தவொரு முன்னேற்றமும் எட்டப்படவில்லை.

தற்போது அரசாங்கம் காணாமல்போனோரின் குடும்பங்களுக்கு வழங்குவதாக கூறிய 100,000 ரூபா இழப்பீட்டுத் தொகையை 200,000 ரூபாவாக அதிகரித்திருக்கின்றது.

எமது பிள்ளைகளின் பெறுமதி அவ்வளவுதானா? பல கோடி ரூபாவை இழப்பீடாக வழங்கினாலும் நாம் அதனை பெற்றுக்கொள்ளப்போவதில்லை. மாறாக, காணாமல் போன எமது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை வெளிப்படுத்துவதும், அவர்களுக்கான நீதியை நிலைநாட்டுவதுமே எமது தேவைப்பாடாக இருக்கின்றது.

எனவே, நாம் உண்மை மற்றும் நல்லிணக்க அலுவலகம் உள்ளடங்கலாக உள்ளக ரீதியில் ஸ்தாபிக்கப்படக்கூடிய எந்தவொரு பொறிமுறையையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதுடன் சர்வதேச சமூகத்திடமிருந்து மாத்திரமே எமக்கான நீதியை எதிர்பார்க்கின்றோம் என்று குறிப்பிட்டார்.

# கிளிநொச்சி பூநகரி கிராஞ்சி இலவன்குடா மீனவர்கள் நீதிகோருகின்றனர்!

அக்டோபர் 15, 2022

இலங்கையின் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் பங்காளிகளால் சுரண்டப்படுவதாக குற்றஞ்சுமத்தும் கிளிநொச்சி பூநகரி கிராஞ்சி இலவன்குடா மீனவர்கள் நீதி கோரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலக படியேறியுள்ளனர்.

தமது பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்படும், கடலட்டை பண்ணை விவகாரம் தொடர்பில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தில் அவர்கள் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளனர்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிநடத்தலில் சட்டவிரோதமாக அமைக்கப்படும் கடலட்டை பண்ணைகளால், தமது தொழில் நடவடிக்கைகள் பெரிதும்




பாதிக்கப்பட்டு, வாழ்வாதாரத்திற்கே பெரும் துன்பங்களை எதிர்நோக்கி வருவதாகவும், தமக்கான நீதியை வழங்க வேண்டும் எனவும் கோரி, மக்கள், தொடர் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், கடந்த 4 ஆம் திகதி, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிரிந்திய அலுவலகத்தில், மக்கள், தமது முறைப்பாட்டை பதிவு செய்திருந்தனர்.

அதற்கமைய, நீரியல் வள திணைக்கள அதிகாரியையும் முறைப்பாட்டாளர்களையும் அழைத்து, மனித உரிமைகள் ஆணைக்குழு, இன்று, விசாரணைகளை நடத்தியுள்ளது.

வாழ்வாதார ரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள உள்ளூர் மீனவர்களாகிய தம்மை, எவரும் கண்டு கொள்வதில்லை என ஆதங்கம் வெளியிட்டுள்ள அவர்கள், தமக்கான நீதியை பெற்றுத்தர, அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டுமென யாழ்.ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கோரிக்கையினை முன்வைத்துள்ளனர்.

# தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குமாறு இந்திய அரசிடம் வலியுறுத்தல்! ஜனநாயக போராளிகள் கட்சி

அக்டோபர் 19, 2022

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட ஜனநாயக போராளிகள் கட்சியினர் புலிகள் மீதான தடையினை நீக்குமாறு கோரிக்கை விடுத்ததாக ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக பேச்சாளர் துளசி தெரிவித்தார்.

இன்று யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்

அண்மையில் ஜனநாயக போராளிகள் கட்சிக்கு இந்தியா செல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் கிட்டியது அந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் டெல்லியில் பாஜகவின் முக்கியஸ்தர் ஒருவரை சந்தித்தபோது பல்வேறுபட்ட கோரிக்கையினை முன்வைத்திருந்தோம் அந்த கோரிக்கைகள் அவர்களால் செவிசாய்க்கப்பட்டதோடு அதற்கு தீர்வுகள் வழங்கப்படும் என நம்புகின்றோம்

கீழ்வரும் கோரிக்கைகள் எங்களால் முன்வைக்கப்பட்டது ,



மாகாண சபை தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும் என தெரிவித்திருந்தோம் தொல்லியல் திணைக்களத்தினால் வடக்கு கிழக்கு பகுதிகளில் தொல்லியல் திணைக்களத்தின் பெயரால் தொடர்ச்சியாக பிரச்சனைகளை ஏற்படுத்தப்படுகின்றன

குறிப்பாக கிழக்கு பகுதிகளில் தமிழர்களின் காணிகளை அபகரித்து திட்டமிட்ட குடியேற்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றமை நிறுத்த வேண்டும்

குறிப்பாக தேர்தல் அரசியலுக்கு வந்திருக்கின்ற விடுதலைப்புலிகள் அவர்களது தேர்தல் ஜனநாயக வழிமுறைகளை ஏற்று அவர்கள் மீதான புலிகள் மீதான தடையினை நீக்கவேண்டும் என கோரிக்கையினை நாம் வைத்தோம், குறிப்பாக தெற்காசிய பிராந்தியத்தில் முக்கிய வல்லரசான இந்தியா புலிகளின் மீதான தடையை நீக்க வேண்டும் என நாங்கள் கோரிக்கை விடுத்திருந்தோம். அத்தோடு தமிழர்களுக்கான ஒரு சமஸ்டி அடிப்படையில் தீர்வுவழங்கப்படவேண்டும் 87 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கையிலே கொண்டுவரப்பட்ட 13 வது திருத்த சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் இந்தியா 13 ஐ நடைமுறை ப்படுத்தக் கோரி ஐநா சபையில் வலியுறுத்தியது போல இங்கே அது இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை நாங்கள் விடுத்திருக்கின்றோம்

# ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 22ம் ஆண்டு நினைவேந்தல்!

அக்டோபர் 19, 2022

யாழில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 22ம் ஆண்டு நினைவு தின நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்றைய தினம் புதன்கிழமை நடைபெற்றது.

யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில், ஊடக அமையத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

அதன் போது மலர்மாலையை மூத்த ஊடகவியலாளர்களான கு. செல்வக்குமார் மற்றும் த. வினோஜித் ஆகியோர் திருவுருவ படத்திற்கு அணிவித்தனர்.

அதனை தொடர்ந்து, குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோமகன் சுடரேற்றியதை தொடர்ந்து, ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

போர் சூழலில் யாழில் இருந்து , துணிவாக ஊடகப் பணியாற்றியவர் மயில்வாகனம் நிமலராஜன். பி.பி.சி. யின் தமிழ் மற்றும் சிங்கள சேவை , வீரகேசரி , ராவய போன்ற ஊடகங்களில் பணியாற்றி இருந்தார்.

அந்நிலையில் கடந்த 2000ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ம் திகதி யாழ். மாவட்டத்தில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த வேளை இவரது வீட்டு வளவினுள் புகுந்த ஆயுததாரிகள், வீட்டின் யன்னல் ஊடாக அவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

அதன் போது அவர் எழுதிக்கொண்டு இருந்த கட்டுரை மீது வீழ்ந்தே உயிர் துறந்தார்.




கொலையாளிகள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு நிமலராஜனை படுகொலை செய்த பின்னர், வீட்டின் மீது கைக் குண்டு தாக்குதலையும் மேற்கொண்டனர்.

அதன் போது வீட்டில் இருந்த நிலமராஜனின் தந்தை சங்கரப்பிள்ளை மயில்வாகனம், தாய் லில்லி மயில்வாகனம் மற்றும் மருமகன் ஜெகதாஸ் பிரசன்னா ஆகியோர் படுகாயமடைந்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளர் நிமலராஜனுக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் நினைவு வணக்க நிகழ்வு!

அக்டோபர் 19, 2022

சுட்டுக்கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ம.நிமலராஜனின் 22 ஆவது நினைவு தினம் இன்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் அனுஸ்டிக்கப்பட்டது.

வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் தொடர் போராட்டம் மேற்கொள்ளப்படும் வவுனியா பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார், தமிழ் பத்திரிகையாளர் நிமலராஜனின் 22 வது ஆண்டு படுகொலை நினைவு நாள் இன்று.

நிமலராஜன் படுகொலை தமிழ் ஜனநாயகத்தை கொன்றது. தமிழரின் ஜனநாயகம் தமிழ்தேசியத்தை உயிர் மூச்சாக கொண்டது. இலங்கை ஜனநாயகம் என்பது சிங்களவரின் ஜனநாயகம், அது தமிழர்களை ஒடுக்குவதற்கு மாத்திரமே.

தமிழர்களின் ஜனநாயகம் என்பது, பாதுகாப்பான, பாதுகாக்கப்பட்ட தமிழர் தாயகம் வரும் போது தான் தமிழர் ஜனநாயகத்துக்கு உயிர் வரும். நிமலராஜன் உயிருடன் இருந்திருந்தால், தமிழ் அரசியல் வாதிகளின் முடிச்சுக்களை தனது பலம் வாய்ந்த எழுத்துக்களால் அவிழ்த்து அம்பலப்படுத்தியிருப்பார்.







# ஆனந்தபுரம், முல்லைத்தீவில் மனித எச்சங்கள் மீட்பு!

அக்டோபர் 19, 2022

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரம் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் கடந்த 11.10.2022 அன்று இனம் காணப்பட்ட மனித எச்சங்கள் மீதான தடயவியல் பரிசோதனை நீதிமன்ற உத்தரவிற்கு அமைய இன்று 19.10.22 மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பொலீசாரால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டிற்கமைய முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிதி ரி.சரவணராஜா முன்னிலையில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது தடையவியல் பொலீசார், மாவட்ட மருத்துவமனை சட்டவைத்திய அதிகாரி ஆர்.றொஹான் மற்றும் பொலீசார் ஆகியோர் முன்னிலையில் குறித்த மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து விசாரித்த நீதிபதி மீட்கப்பட்ட மனித எச்சங்கள் சட்ட வைத்திய அதிகாரி தொடர்பில் பகுப்பாய்வு நடத்தி மன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்துள்ளார்.

இதேவேளை இந்த மனித எச்சம் காணப்பட்டுள்ள வளவில் 2009 இறுதிப்போர் நேரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவமனை ஒன்று இயங்கியதாகவும் அந்த மருத்துவமனை மீது விமானதாக்குதல் மேற்கொள்ளப்பட் டிருந்ததாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

மனித எச்சம் காணப்பட்டுள்ள வளவில் மருத்துவமனை ஒன்றில் பயன்படுத்தக்கூடிய பல்வேறு மருத்துவ கழிவு பொருட்கள் பல சிதறி காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.







# இந்தியா இராணுவத்தினரால் யாழ். போதனா வைத்தியசாலை படுகொலையின் 35 வது ஆண்டு நினைவேந்தல்!

அக்டோபர் 21, 2022

இந்திய அமைதிப்படை யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த 1987 ம் ஆண்டில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அரங்கேற்றப்பட்ட படுகொலை நினைவு கூரப்பட்டுள்ளது.



யாழ்.போதனாவைத்தியசாலைக்குள் அத்துமீறி உட்புகுந்த இந்தியா இராணுவத்தினரால் யாழ் போதனா வைத்தியசாலையில் படுகொலை செய்யப்பட்டோரின் 35வது ஆண்டு நினைவு நாள் இன்று நினைவு கூரப்பட்டுள்ளது.



1987 ம் ஆண்டு யாழ் போதனா வைத்தியசாலைக்குள் நுழைந்த இந்திய இராணுவத்தினரால் யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையில் இருந்தவர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

படுகொலையின் கொடூர சம்பவத்தின் நினைவு நாள் யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்களின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணியளவில் இடம்பெற்றிருந்தது.

இந்திய இராணுவத்தினரால் சுட்டு படுகொலை செய்யப்பட்டோரின் நினைவாக உயிரிழந்தோரின் உறவுகளால் பொது சுடர் ஏற்றப்பட்டு படுகொலை செய்யப்பட்டோரின் திருவுருவப் படங்களுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டிருந்தது.







# மருந்துவர் சிவரூபனுக்கு கொலை அச்சுறுத்தல்!

அக்டோபர் 21, 2022

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள நியூமகசீன் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பளை அரச வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகர் சிவரூபன் கொலை அச்சுறுத்தலிற்குள்ளாகியுள்ளார்.

இதனையடுத்து முன்னாள் சட்டமருத்துவ அதிகாரியுமான சிவரூபனின் பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்த கிளிநொச்சி நீதிமன்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்துள்ளது.

சுமார் 300 வரையிலாக கொலை, கற்பழிப்பு, காணாமல் ஆக்குதல் உள்ளிட்ட வழக்குகளது முக்கிய சாட்சியமாக முன்னாள் யாழ்.போதனாவைத்தியசாலை சட்டவைத்திய அதிகாரி சிவரூபன் உள்ளார்.

இந்நிலையில் நீதிமன்றங்களிற்கு வழக்கு விசாரணைகளிற்கான சாட்சியங்களாக தொடர்ச்சியாக மருத்துவர் சிவரூபன் அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள நியூமகசீன் சிறைச்சாலையில் இருந்து அழைத்துவரப்படுகினறார்.

எனினும் அவர் அழைத்துவரப்படுகின்ற சிறைச்சாலை வாகனங்களிலேயே அவர் சாட்சியமளிக்கின்ற கொலை, பாலியல் வல்லுறவு உள்ளிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களும் அழைத்துவரப்படுகின்றனர்.

இந்நிலையிலேயே தனது உயிருக்கான பாதுகாப்பு தொடர்பில் நீதிமன்றின் கவனத்திற்கு மருத்துவர் சிவரூபன் கொண்டு சென்றுள்ளார்.

இதனையடுத்து முன்னாள் சட்டமருத்துவ அதிகாரியுமான சிவரூபனின் பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்த கிளிநொச்சி நீதிமன்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்துள்ளது.

பளை அரச வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகரான சின்னையா சிவரூபன் 2019ம் ஆண்டின் ஒகஸ்ட் மாதம் 18ம் திகதி இலங்கை பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைதாகியிருந்தார்.

விடுதலைப்புலிகளது மீள் உருவாக்கம் மற்றும் வெடிபொருள்களை பதுக்கி வைத்திருந்தமையென கைதான வைத்தியர் சின்னையா சிவரூபனுடன் விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் எழுவரும் கைதாகியிருந்தனர்.

எனினும் இரண்டுவருடங்களிற்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் போராளிகள் குற்றச்சாட்டுக்கள் ஏதும் சுமத்தப்படாது அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் மருத்துவர் சிவரூபனின் விடுதலை சட்டமா



அதிபர் திணைக்களத்தினால் திட்டமிட்டு இழுத்தடிக்கப்படுவதாக குடும்பத்தவர்கள் தரப்பினில் தெரிவிக்கப்படுகின்றது.

மறுபுறம் வைத்தியர் சிவரூபன் சாட்சியமாக உள்ள முன்னாள் துணை ஆயுதக்குழுக்களினை சார்ந்த கொலை, கற்பழிப்பு, காணாமல் ஆக்குதல் உள்ளிட்ட வழக்குகளது சந்தேக நபர்களை காப்பாற்ற ஏதுவாக சிவரூபனை கொலை செய்ய முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

# வடக்கு கிழக்கு மக்களின் கௌரவமான அரசியல் தீர்வுக்கான கோரிக்கையை முன்வைத்து 83ஆவது நாளாகத் தொடரும் கவனயீர்ப்பு போராட்டம்!

அக்டோபர் 22, 2022

100 நாட்கள் செயல்முனைவின் 83 ஆவது நாள் மக்கள் குரல் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தில் உள்ள சிறீ நாராயணபுரம் கிராமத்தில் இன்று (22.10.2022) வடக்கு கிழக்கு மக்களின் கௌரவமான அரசியல் தீர்வுக்கான கோரிக்கையை முன்வைத்து கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.




இந்த 100 நாட்கள் செயல்முனைவின் 83 ஆம் நாள் போராட்டத்தில் மூதூர் பிரதேசத்தில் பெண்கள் ஆண்கள் விவசாயிகள் சிறுகுழுக்களின் மற்றும் சிவில் அமைப்புப் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.




‘வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்’ நாங்கள் நாட்டை துண்டாடவோ தனியரசோ கேட்கவில்லை.




இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம் ‘வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும்’ ‘13 வது திருத்தச்சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப் பரவலாக்கத்துக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது’ ‘பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம்’ எங்கள் நிலம் எமக்கு வேண்டும் நடமாடுவது எங்கள் உரிமை பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை ஒன்று கூடுவது எங்கள் உரிமை மத வழிபாடு எங்கள் சுதந்திரம் எமது மத தளங்களின் புனிதத்தினை கொச்சைப்படுத்தாதே இந்து மத ஆலயங்களின் இடங்களை திட்டமிட்டு சுபீகரிக்காதே என பல கோரிக்கைகளை முன்வைத்தனர்.

# இந்தியா இராணுவத்தினரால் யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி படுகொலை 35 வது ஆண்டு நினைவேந்தல்!

அக்டோபர் 24, 2022

கடந்த 1987 ம் ஆண்டு இதேநாளில் கொக்குவில் இந்துக்கல்லூரியில் இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட 50க்கும் மேற்பட்ட பொதுமக்களின்

நினைவேந்தல் நிகழ்வுகள் இன்றையதினம் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கு




தீபமேற்றி மலர்வணக்கம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள், படுகொலை செய்யப்பட்டோரின் உறவினர்கள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.



# வடக்கில் போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்தமைக்கு அடிப்படைக்காரணம் யார்?

அக்டோபர் 25, 2022

போதைவஸ்த்து பயன்பாடு அதிகரித்தமைக்கு அடிப்படை காரணம் இலங்கையின் முப்படையினரே வடக்கு கிழக்கு இளைஞர் யுவதிகள் மீது இந்த திட்டமிட்ட வேலைகளை அரசாங்கம் செய்துவருகிறது.

வடக்கு கிழக்கில் போதைவஸ்து பயன்பாடு தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலே சிறிதரன் எம்.பி. இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதைவஸ்து பயன்பாடு பொலிஸ், இராணுவம், கடற்படை இவர்களுடைய கைகளில் தான் இதனுடைய நாணய கயிறுகள் உள்ளது. அது மட்டுமன்றி போதைவஸ்து கடத்துபவர்களையும் பயன்படுத்துபவர்களையும் இவர்களே ஊக்குவிப்பவர்களாக இருக்கின்றார்கள்.

போதைவஸ்த்து கடத்துபவர்களை பொலிசார் கைது செய்வதில்லை. எவ்வளவோ போதைவஸ்துக்கள் இங்கே வருது என்றால் அதை தடுக்க வேண்டியது கடற்படையினர் தான் இராணுவம் இதனை தடுக்க முடியும் அவ்வாறு செய்வதில்லை.

இலங்கையில் உள்ள படைகளில் 70% வடக்கு கிழக்கிலே இருக்கிறார்கள். அவ்வாறு இருந்தும் இங்கு வருகிறது என்றால் இங்கே உள்ள இளைஞர்கள், யுவதிகளிடம் இனிமேல் வரும் காலங்களில் இனம்பற்றி நிலம்பற்றி தங்களுடைய இனக்குழுமம் பற்றி சிந்திக்க கூடாது என்பதற்காக இவர்களை கோதுகளாக்குவதற்கு அரசாங்கம் இந்த வேலைகளை செய்கிறது.

இவைதொடரபில் தாய் தந்தையர்கள், மதபெரியார்கள் விழிப்புணர்வை செய்யவேண்டும். ஒவ்வோருவரும் தங்கள் பிள்ளைகளை கவனித்து அவர்கள் நடவடிக்கைகளை அவதானித்து அவர்களை நல்வழிபடுத்த வேண்டும் என்றார்.

# மயிலிட்டி மக்களின் காணிகள் பறிபோகும் நிலையில்!

அக்டோபர் 26, 2022

பலாலி விமானத்தள விஸ்தரிப்பு என்ற போர்வையில் பூர்வீகத் தமிழ் மக்களான மயிலிட்டி மக்களுக்குச் சொந்தமான ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான காணிகளை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், காணி சுவீகரிப்புத் தொடர்பில் அண்மையில் ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட கடிதத்தில் மூவாயிரம் ஏக்கர் காணிகளை சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதால் அதன்கீழ், தங்கள் காணிகளும் பறிபோய்விடுமோ என தாம் அச்சமடைவதாகவும் மயிலிட்டி மக்கள் தெரிவித்துள்ளனர்.



யாழ்ப்பாணம் மயிலிட்டிப் பிரதேச மக்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோருக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் மாலை, மயிலிட்டி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

குறித்த பிரதேச மக்களின் கோரிக்கைக்கு அமைய நடைபெற்ற மேற்படி சந்திப்பின் போது முமையான விவரங்களோடு, காணி சுவீகரிப்பைத் தடுப்பதற்கான தொடர் நடவடிக்கைகள் குறித்தும் இக் கலந்துரையாடலின்போது ஆராயப்பட்டுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில், மயிலிட்டி மீள்குடியேற்றச் சங்கத்தினர், மயிலிட்டி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# "உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையால் இளம் விதவைகளையும், அநாதை குழந்தைகளையும் உருவாக்காதே" "மாணவ சமுதாயத்தை போதையால் சீரழிக்காதே"

## வலி. வடக்கு மாணவர்கள் 27.10.2022 விழிப்புணர்வுப் பேரணி






# போதைப்பொருள் விழிப்புணர்வு செயற்திட்டம் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள்

அக்டோபர் 28, 2022

யாழ். பல்கலைக் கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினால், தேசிய ரீதியிலான மாணவர் வழிகாட்டல் போதைப்பொருள் விழிப்புணர்வு செயற்றிட்டமானது, இன்றையதினம் யாழ். அராலி சரஸ்வதி மஹா வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.






இந்த செயற்திட்டத்தின் நோக்கம் தொடர்பாக குறித்த ஒன்றியத்தினர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், மாணவர்களை சரியான வழிப்படுத்தல் மூலம் அவர்களது இலக்குகள் மற்றும் நோக்குகளை அடைந்துகொள்ளவும், அவர்கள் போதைப்பொருள் பாவனையுள்ளவர்களாக திகழாமல் நல்லதொரு பாதையில் செல்ல வழிகாட்டுதலுமே இந்த செயற்றிட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இன்றையதினம் குறித்த பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்றிட்டம் தொடர்ந்து இலங்கை முழுவதும் செயற்படுத்தப்படவுள்ளது. பாடசாலை மாணவர்களை இலக்குவைத்தே எமது இந்த செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது – என்றனர்.

# முல்லைத்தீவில் தொடரும் காடழிப்பு...! ஊடகவியலாளரை பொலீசார் விசாரனைக்கு அழைப்பு!

அக்டோபர் 28, 2022

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் காடழிப்பு, மற்றும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் தொடர்ச்சியாக, இடம்பெற்று வருவதாகவும் அதனை கட்டுப்படுத்த பிரதேச செயலகம் மற்றும் பொலீசார் தவறியுள்ளதாக மக்கள் தெரிவித்த கருத்து செய்தியாக ஊடகங்களில் வெளியானதை தொடர்ந்து மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் செல்வி நிறஞ்சனா அவர்களினால் பாண்டியன் குளம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்ற கடந்த 26.10.22 அன்று முறையிடப்பட்டுள்ளது.

போர் நிறைவடைந்து 10 ஆண்டுகளைத் தாண்டி விட்ட இன்றைய காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இயற்கை வளங்கள் பாரியளவில் அழிக்கப்பட்டுக் கொண்டிருப்பதை அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் யாரும் கண்டுகொள்ளாமல், இருப்பது வேதனையளிக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்த வரை கருங்கல் அகழ்வு, கிரவல் அகழ்வு, காடழிப்பு, மரவியாபாரம் என பல்வேறு வழிகளில், இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன.

மணல் அகழ்வின் மூலமும் பாரிய அளவில், இயற்கை வளங்களும் வனப்பகுதிகளும் அழிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையில் அதிகளவான வனப்பரப்பினை கொண்ட மாவட்டங்களில் முதன்மையாக முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகின்றது, இந்த நிலையில் வனவளம் அழிக்கப்படுவதற்கு யார் பொறுப்பு என மக்கள் கருத்து தெரிவித்து வருகின்றார்கள்.

அரச நிர்வாகத்தினருக்கு தெரிந்தும் தெரியாமலும், இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதுடன் பணம் படைத்தவர்களின் கைகளிலேயே காணிபிடிப்பும் செல்கின்றமை கவலையளிக்கின்ற விடையம் என மக்கள் தெரிவித்து வருகின்றார்கள்.

இன்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய செய்கைக்காக ஒரு துண்டு காணிகூட, இல்லாத மக்கள் பலர் வாழ்ந்து வருகின்றார்கள் அவ்வாறான மக்கள் அரசாங்கத்திடம் காணிகோரி கோரிக்கை விடுக்கப்பட்டும், இது வரை அவர்களுக்கான காணித்துண்டுகளை அரச அதிகாரிகள் வழுங்கமால் பணம் படைத்தவர்களுக்கு வழுங்கிவருகின்றமை கவலையளிக்கின்றது.

அரசாங்கத்தின் காணி வழுங்கல் முறையின் பல்வேறுபட்ட படிமுறைகளான குத்தகை அடிப்படை, மற்றும் அபிவிருத்தி திட்ட அடிப்படை என திட்டங்கள் ஊடாக காணி உள்ளவர்களுக்கே தொடர்ச்சியாக காணிகள் வழுங்கப்



பட்டு வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்து வருகின்றார்கள்

பாமர மக்களுக்கும் மிகவும் வறிய மக்களுக்கும், இவ்வாறான திட்டங்கள், இருப்பதும் தெரியாத விடையமாகவே காணப்படுகின்றது அவ்வாறு தெரிந்து கோரிக்கை வைத்தாலும் அவர்களுக்கு காணித்துண்டுகள் வழுங்கப்படுவது மிக மிக குறைவு.

இந்த நிலையில் கடந்த 07.10.22 அன்று மாந்தை கிழக்கின் மாபியாக்கள் என மக்களால் அறியப்பட்ட நபர்கள் பொலீசாரின் பாதுகாப்புடனும் அரச அதிகாரிகள் உத்தியோகத்தர்களின் துணையுடன் சட்டவிரோ காடழிப்புக்கு உதவி செய்து வருகின்றார்கள் என மக்கள் தெரிவித்ததை செய்தியாக பிரசுரிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பாண்டியன் குளம் பிரதேசத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடக வியலாளர் ஒருவர் பொலீசாரின் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

27.10.2022 வியாழக்கிழமை மாலை வேளை மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் மற்றும் ஊடக வியலாளர் பொலீஸ் நிலையம் அழைக்கப்பட்டு பத்திரிகையில் வெளியிட்டுள்ள செய்தி தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள செய்தியாளரின் பெயரிற்கு தொடர்புபடாத பிரதேச ஊடக வியலாளரை விசாரனை செய்துள்ளார்கள்.

பாண்டியன் குளம் பொலீசாரால் பத்திரிகை நிறுவனத்திற்கும் தொடர்பு கொண்டு கடந்த 07.10.22 அன்று வெளியிடப்பட்டுள்ள செய்தி தொடர்பில் செய்தியாளரை அடையாளப்படுத்துமாறு கோரியுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த தவறும் அரச நிர்வாக அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் சரியான முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றார்கள்.

இவ்வாறான சம்பவங்களை வெளிப்படுத்தும் நோக்கில் மக்கள் ஊடகங்ளுக்கு கருத்து தெரிவித்து அதனை செய்தியாக்கம் செய்யும் ஊடகவியலாளர்களுக்கு ஊடக பணியினை முழுமையாக மேற்கொள்ளமுடியாது, இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றமை கவலையளிக்கின்றது.

வெளிமாவட்ட ஊடக வியலாளர்களை தொடர்புகொள்ளும் அரச அதிகாரிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில், இவ்வாறான செய்திகளை வெளியிட்ட ஊடகவியலாளரின் புனைபெயர், இலக்கம் கொண்ட செய்தியாளரை, இனம் காட்டுமாறும் தெரிவித்து வருகின்றார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 12.10.2020 அன்று முறிப்பு பகுதியில் சட்டவிரோத தேக்கு மரங்கள் அறுக்கப்படுவது தொடர்பில் செய்தி சேகரிக்க சென்ற , இரண்டு ஊடக வியலாளர்கள் தாக்கப்பட்டு அவர்களது ஒளிப்பட கருவிகள் சேதமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், இன்றுவரை வழக்கு விசாரணை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் தொடர்ந்து வரும் நிலையில் மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை செய்தி அறிக்கையிடும் ஊடகவியலாளர்கள் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்களும் மேலும் அதிகரித்துக்கொண்டு செல்கின்றமையினால் மன உளைச்சலுக்கு உள்ளாகிவருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

# OMP (The Office on Missing Persons) என்பது ஒரு இனவெறி அமைப்பு!

அக்டோபர் 28, 2022

நீதி மற்றும் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி, வவுனியாவில் 2075 நாட்களை கடந்தும் தொடர் கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தி வரும் காணாமல் ஆக்கப்பட்டோரை தேடிக்கண்டறியும் தமிழர் தாயக சங்கத்தினரால், OMP அலுவலகம் மற்றும் அதன் பொறிமுறையைக் எதிர்த்து 27.10.2022 வியாழன் அன்று கண்டனம் தெரிவித்து OMP அலுவலகத்தால் தாய்மாருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த கடிதங்களும் போராட்ட பந்தலில் தீ வைத்து எரிக்கப்பட்டன.
இதன் போது வெளியிடப்பட்ட கண்டன அறிக்கையின் விவரம்:

OMP என்பது ஒரு இனவெறி அமைப்பு. OMP, தொல்பொருள், வனவள திணைக்களம் அனைத்தும் ஒன்று தான்

காணாமல் ஆக்கப்பட்ட எமது தமிழ் பிள்ளைகளை கண்டறியவும், எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களை காப்பாற்றும் தமிழ் இறையாண்மைக்காகவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகளை பெறுவதற்கான எமது தொடர்ச்சியான போராட்டத்தின் 2078வது நாள் இன்று.

இனப்படுகொலை எதுவும் நடக்கவில்லை என்றும் சரணடைந்த தமிழர்கள் அனைவரும் காணாமல் ஆக்கப்படவில்லை என்றும் OMP நேற்று தெரிவித்தது.

முதலில் மன்னாரில் OMP உருவானபோது நாங்கள் நிராகரித்து ஆர்ப்பாட்டம் செய்தோம். நிமல்கா பெர்னாண்டோ இதனை உருவாக்குவதற்கு தலைமை தாங்கினார். சிங்கள அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்காகவே OMP உருவாக்கப்பட்டது.

சுமந்திரன் OMP க்கு மிகவும் ஆதரவாக இருந்தார் மற்றும் OMPஐ உருவாக்குவதற்கு, ஜெனீவாவில் ICC விசாரணையை கைவிட்டார் என்பதை நாம் தமிழர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

இந்த சுமந்திரனை தமிழ் அரசியலில் இருந்து தூக்கி வீசப்பட வேண்டும். அவரை மீண்டும் கொழும்புக்கு அனுப்ப வேண்டும்.

பல தமிழர்களைக் கடத்திச் சென்றும், குண்டுகள் போட்டும், தமிழரை கொன்றதும் இலங்கை இராணுவம்தான் என்று 2011 ஐநா குழு அறிக்கை கூறுகிறது.

2011 இல்.ஐ.நா குழு "நம்பகமான குற்றச்சாட்டுகளை" கண்டறிந்தது, அது நிரூபிக்கப்பட்டால், போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் இலங்கை இராணுவத்தால் இழைக்கப்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டது.

காணாமல் போனோர் அலுவலகம் என்பது தொல்பொருள், வனவள திணைக்களம் மகாவலி அபிவிருத்தி போன்ற பிற அரசுத் துறைகளுடன் இணைந்து தமிழர்களை ஒடுக்குவதற்கான மற்றொரு சிங்கள சிறீலங்காவின் கருவியாகும்.

இந்த பொருளாதார நெருக்கடியின் கீழ், சிறீலங்கா இன்னும் அதன் அடக்குமுறையை தொடர்கிறது. IMF மற்றும் பிற பணக்கார நாடுகள் சிறீலங்காவிற்கு பணம் கொடுத்து அவர்களின் கஷ்டத்தை தீர்த்தால், அது அவர்களின் இன




அழிப்புக்கு ஒட்சிசன் கொடுப்பதாகும்

OMP அறிக்கையை நாங்கள் நிராகரிக்கிறோம். நீதி மற்றும் பொறுப்புக்கூறல் பற்றி பேசுவது பயனற்றது மற்றும் நேரத்தை வீணடிப்பது என்று அமெரிக்காவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் தெரிவிக்க விரும்புகிறோம்.

தமிழர்களுக்கு உதவக்கூடிய ஒரே நாடு அமெரிக்கா என்று நாங்கள் இன்னும் உறுதியாக நம்புகிறோம்.

நன்றி

கோ.ராஜ்குமார்

செயலாளர் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம்

அக்டோபர் 27, 2022

# காணாமல் போனோருக்கான அலுவலக தலைவரின் கருத்து கண்மூடித்தனமானது!

அக்டோபர் 28, 2022

முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை இடம்பெறவில்லை என்றும், காணாமற்போனோர், சரணடைந்தோர் என எவரும் இங்கில்லை என்றும் காணாமல்போனோருக்கான அலுவலகத்தின் தலைவர் மகேஷ் கட்டுண்டல கூறியுள்ள கருத்து கண்மூடித்தனமானது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

27 ஆம் திகதி, வியாழக்கிழமை வன்னேரிக்குளம் ஐயனார் சனசமூக நிலையைத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னேரிக்குளம் வட்டாரக் கிளைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அறவழிப் போராட்டம் ஒன்றின் எல்லா நியாயங்களையும் அடியோடு ஒதுக்கிவிட்டு, இந்த நாட்டின் சுதேசிய இனமொன்றின் மீது சிங்கள பேரினவாதம் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களுக்கும் ஆக்கிரமிப்புக்களுக்கும் நேரடியாக முகம்கொடுத்து, கொடிய போரொன்



றின் முழுமையான தாக்கங்களை எதிர்கொண்ட எங்கள் மக்களுக்குத்தான் அந்தப் போரின் வலியும், அது தந்த இழப்புக்களின் வலியும் தெரியும்.

குண்டுத் தாக்குதல்களுக்கு இலக்காகி மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்தவர்களைக்கூட பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் என்ற எந்தப் பாகுபாடுமற்று பாதுகாப்பு வலயம் என்ற போர்வைக்குள் கோயில்களில் தஞ்சமடைய வைத்து கொத்துக்குண்டுகளும் பொஸ்பரஸ் குண்டுகளும் வீசி எங்கள் மக்களை கொத்தாகக் கொன்றொழித்ததை இனப்படுகொலை என்று சொல்லாமல் வேறெப்படிச் சொல்லமுடியும்? என்றும் சிறீதரன் எம்.பி கேள்வி எழுப்பியுள்ளார்.

இறுதிப்போரின்போது எவரும் காணாமற்போகவில்லை என்று சொல்லியிருக்கும் ஓ.எம்.பியின் தலைவர், தங்கள் கைகளால் இராணுவத்திடம் ஒப்படைத்த பிள்ளைகளை மீட்டுத்தரக்கூறி இன்றைக்கு இரண்டாயிரம் நாட்களைக் கடந்தும், தெருத்தெருவாக நின்று போராடும் தாய்மாருக்கும், அவர்களின் கண்ணீருக்கும் என்ன பதில் சொல்லப் போகிறார் என்றும், தனது அரசதரப்பு விசுவாசத்தைக் காட்டுவதற்காக, ஒடுக்கப்பட்ட இனமொன்றின் உணர்வுகளோடு விளையாடுவதை மகேஷ் கட்டுண்டல போன்ற இனவாதிகள் நிறுத்த வேண்டும் என்றும் இதே பொய்யைத்தான் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையும், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையும் சொல்லியிருந்தன என்பதை இனியாவது சர்வதேச சமூகம் உணரத் தலைப்பட வேண்டும் என்றும் சிறீதரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

# விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதான பணிகள் ஆரம்பம்!

அக்டோபர் 30, 2022

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தினுடைய சிரமதான பணிகள் இன்று காலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் எதிர்வரும் நவம்பர் 27ஆம் தேதி இடம்பெற உள்ள நிலையில் விசுவமடு தேராவில் மாவீரர் துயிலுமில்ல பணி குழுவினரால் துயிலும் இல்ல வளாகம் சிரமதானம் செய்கின்ற வேலைகள் இன்று ஆரம்பிக்கப்பட்டது

இன்று காலை ஒன்பது முப்பது மணி அளவில் தேராவில் துயிலும் இல்ல வளாகத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்திய



பின்னர் மக்கள் சிரமதான பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தேராவில் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழு மற்றும் மாவீரர்களுடைய பெற்றோர் நலம் விரும்பிகள் சமூக செயற்பாட்டாளர்கள் சிவில் சமூக அமைப்பு பிரதிநிதிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் இணைந்து கொண்டு இந்த சிரமதான பணியை முன்னெடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது






# கனடாவில் உணவுப் பொருள் விலை அதிகரித்து செல்கிறது!

அக்டோபர் 19, 2022

கனடாவில் உணவுப் பொருட்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த செப்டம்பர் மாதம் நாட்டில் பணவீக்கம் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வருடாந்த பணவீக்க வீதம் 6.9 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது என கனேடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் பணவீக்கம் 7.0 வீதமாக காணப்பட்டதுடன் செப்டம்பர் மாதம் அது சற்றே குறைவடைந்துள்ளது.



எரிபொருட்களின் விலைகள் குறைவடைந்தாலும் பணவீக்கம் வெகுவாக குறைவடையவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டில் மளிகைப் பொருட்களின் விலைகள் 11.4 வீதமாக உயர்வடைந்துள்ளது.

இது கடந்த 1981ம் ஆண்டின் பின்னர் பதிவான மிக அதிகளவான மளிகைப் பொருள் விலை அதிகரிப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த பத்து மாதங்களாக தொடர்ச்சியாக கனடாவில் உணவுப் பொருட்களின் விலைகள் உயர்வடைந்து செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஒன்ராரியோவில் மாணவர்களுக்கான கல்வி உக்குவிப்பு தொகை வழங்கும் திட்டம் அறிவிப்பு!

அக்டோபர் 21, 2022

கனடாவின் ஒன்ராரியோ மாகாண அரசாங்கம் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதற்கு பெற்றோருக்கு பணம் கொடுப்பதாக அறிவித்துள்ளது

இரண்டு ஆண்டுகளாக பாடசாலைகள் கிரமமான முறையில் நடைபெறாத நிலையில் ஒவ்வொரு பிள்ளைக்கும் 200 முதல் 250 டொலர்கள் வரையில் கொடுப்பனவு வழங்கப்பட உள்ளது என மாகாண கல்வி அமைச்சர் ஸ்டீபன் லீஸ் தெரிவித்துள்ளார்.

பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதற்கு ஏற்படும் செலவுகளை ஈடு செய்யும் வகையில் இவ்வாறு மாகாண அரசாங்கம் ஒரு தொகை கொடுப்பவை வழங்குகின்றது.

18 வயதிற்கும் குறைந்த பாடசாலை செல்லும் பிள்ளைகள் அது பெற்றோருக்கு தலா ஒவ்வொரு பிள்ளைக்கும் 200 டாலர்களும்



விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு தலா 250 டாலர்களும் வழங்கப்படுகின்றது.

எவ்வித இடையூறும் இன்றி பாடசாலை பிள்ளைகள் பாடசாலைக்கு சமூகம் அளிப்பதனை உறுதி செய்ய வேண்டும் எனவும் அதுவே தமது தெளிவான திட்டம் எனவும் மகன கல்வி அமைச்சர் ஸ்டீபன் லீஸ் தெரிவித்துள்ளார்.

கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக பாடசாலை கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டமையை ஈடு செய்யும் நோக்கில் இவ்வாறு அரசாங்கம் பெற்றோருக்கு ஊக்கத் தொகையை வழங்குகிறது.

இந்த கொடுப்பனவிற்காக 365 மில்லியன் டாலர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டிலும் மாகாண அரசாங்கம் இவ்வாறான ஒரு கொடுப்பனவுத் தொகையை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது

# கனடாவில் கைத்துப்பாக்கிகளின் விற்பனை, வாங்குதல் மற்றும் பரிமாற்றம் செய்வதற்கு தடை விதிப்பு!

அக்டோபர் 21, 2022

கனடாவில் கைத்துப்பாக்கிகளின் விற்பனை, வாங்குதல் மற்றும் பரிமாற்றம் செய்வதற்கு நாடுமுழுவதும் தடைவிதிக்கப்படுவதாகவும், இது உடனடியாக அமல் படுத்தப்படும் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கனடா நாடாளுமன்றத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் கடந்த மே மாதம் அறிமுகப்படுத்தப்பட்ட மசோதாவை நிறைவேற்றுவது தொடர்பாக விவாதித்து வருகின்றனர்.

புதிய கைத்துப்பாக்கி முடக்கம் ஒரு உடனடி நடவடிக்கை என்று ட்ரூடோ நிர்வாகம் கூறிவந்தது. இந்த மசோதா தொடர்பான விவாதங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நேற்று



வெளியிட்ட அறிவிப்பில்,

மக்கள் கொல்லப்படும்போது, மக்கள் பாதிக்கப்படும்போது, பொறுப்பான தலைமை நாம் சிறப்பாக செயல்பட வேண்டும். துப்பாக்கிகள் சம்பந்தமாக மீண்டும் பல கொடூரமான சம்பவங்களை உதாரணங்களாக நாங்கள் பார்த்திருக்கிறோம்.

மக்கள் இனி கனடாவிற்குள் கைத்துப்பாக்கிகளை வாங்கவோ, விற்கவோ அல்லது மாற்றவோ முடியாது. மேலும் அவர்கள் புதிதாக வாங்கிய கைத்துப்பாக்கிகளை நாட்டுக்குள் கொண்டு வர முடியாது என்று அவர் கூறினார்.

அதேவேளை துப்பாக்கிகள் மீது கடுமையான சட்டங்களை வைப்பது, துப்பாக்கி வன்முறையை குறைக்காது என்று துப்பாக்கி உரிமைகளுக்கான கனடா கூட்டணி குழுவினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

# ஒன்ராறியோ உள்ளக தேர்தலில் 4 தமிழர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள்

அக்டோபர் 25, 2022

ஒன்ராறியோ மாநகர, நகர, உள்ளூராட்சி, கல்விச்சபை உறுப்பினர்களுக்கான தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதில் நான்கு தமிழர்கள் வெற்றி பெற்றுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதில் இரண்டு தமிழர்கள் இரண்டாவது தடவையாக மீண்டும் வெற்றி பெற்றுள்ளனர்.

ஸ்காபுறோ வடக்கு (Scarborough North) தொகுதியில் கல்வி சபை உறுப்பினர்பதவிக்கு மீண்டும் போட்டியிட்ட யாழினி ராஜகுலசிங்கம்(Yashini Rajakulasingham ) வெற்றி பெற்றார்.

ஸ்காபுறோரூச் பார்க் (Scarborough-Rouge Park) தொகுதியில் கல்வி சபை உறுப்பினர் பதவிக்கு மீண்டும் போட்டியிட்ட அனு சிறீஸ்கந்தராஜா (Anu Sriskandaraja ) வெற்றி பெற்றார்.

ஸ்காபுறோ மத்தி (Scarborough Center) தொகுதியில் கல்வி சபை உறுப்பினர் பதவிக்கு போட்டியிட்ட நீதன் சாண் (Neethan Chan) வெற்றி பெற்றார்.

மார்கம் நகரில் வோட் - 7 (WARD 7 COUNCILLOR) கவுன்சிலர் பதவிக்கு போட்டியிட்ட யுவனீற்ரா நாதன் (Yuvaneetra Nathan ) அவர்கள் வெற்றி பெற்றார்.

# கனேடிய மத்திய வங்கி தனது வட்டி வீதத்தை அதிகரித்துள்ளது!

அக்டோபர் 26, 2022

கனேடிய மத்திய வங்கி தனது வட்டி வீதத்தினை அரை வீதத்தினால் உயர்த்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பல தசாப்தங்களில் இல்லாத அளவிற்கு உயர்வடைந்துள்ள பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் மத்திய வங்கி பல் வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

எதிர்வரும் 2023ம் ஆண்டில் பணவீக்கம் மூன்று வீதமாக குறைவடையும் எனவும் 2024ம் ஆண்டில் பணவீக்கம் 2




வீதமாக பேணப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவின் வருடாந்த பணவீக்க வீதம் கடந்த செப்டம்பர் மாதத் தில் 6.9 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

எவ்வாறெனினும் மளிகைப் பொருட்களுக்கான விலைகள் தொடர்ச்சியாக அதிகரிப்பினை பதிவு செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கனடாவில் வேகமாக பரவி வரும் RSVவைரஸ் தொற்று !

அக்டோபர் 26, 2022

கனடாவில் சிறுபிள்ளைகளைத் தாக்கும் வைரஸ் ஒன்று வேக மாக பரவி வருகிறது.

அது Respiratory syncytial virus (RSV) என அழைக்கப் படுகிறது.

கனடாவில் சிறுபிள்ளைகளைத் தாக்கும் Respiratory syncytial virus (RSV) என்னும் வைரஸ் பரவி வருவதால், கனடாவில் குழந்தைகள் நல மருத்துவமனைகள் திணறி வருகின்றன.

இந்த RSV வைரஸ் ஒரு சாதாரண சுவாசக்கோளாறை உண் டாக்கும் வைரஸ்தான் என்றாலும், அது கைக்குழந்தைகளை கடுமையாக பாதிக்கக்கூடும்.

இந்த RSV வைரஸ், நுரையீரல் மற்றும் சுவாசப்பாதையில்



தொற்றை உருவாக்கும். இரண்டு வயதுக்குக் கீழுள்ள குழந் தைகள், மற்றும் ஏற்கனவே வேறு உடல் நலப் பிரச்சினைகள் உள்ள பெரியவர்களுக்கு இந்த வைரஸ் மோசமான பாதிப்பை ஏற்படுத்தலாம்.

முன்னர் இந்த வைரஸ் தொற்றுக்கு குழந்தைகள் மற்றும் அவர்களுடைய தாய்மார்கள் ஆளாகாததால், அவர்களுக்கு இந்த வைரஸுக்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தி இல்லை. ஆகவேதான் இந்த வைரஸ் எளிதாக வேகமாக பரவிவருகிறது.

இந்த RSV வைரஸ், தும்மல் மற்றும் இருமல் மூலமாக பரவும் என்பதால், தும்மும்போதும் இருமும்போதும் மூக்கை கைக் குட்டை கொண்டு மூடிக்கொள்வது மற்றவர்களுக்கு உதவியாக இருக்கும்.

அத்துடன், தொடுவதன் மூலமாகவும் இந்த வைரஸ் பரவும். அதாவது, பாதிக்கப்பட்ட ஒருவர் தொட்ட இடத்தை மற்றவர்கள் தொட்டு, கண் அல்லது மூக்கைத் தேய்த்தாலும் இந்த வைரஸ் அவர்களைத் தொற்றிக்கொள்ளலாம்.

ஆகவே, கைகளை அவ்வப்போது கழுவிக்கொள்வது பயனளிக் கலாம் என்கிறார்கள் மருத்துவர்கள்.

# கனடாவில் உணவு வங்கிகளில் உதவியை நாடும் மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

அக்டோபர் 27, 2022

கனடாவில் உணவு வங்கிகளில் குவியும் மக்களின் எண் ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், உணவு வங்கி பயன்பாடு அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னொரு போதும் இல்லாத அளவிற்கு அதிக எண்ணிக் கையிலான நபர்கள் உணவு வங்கிகளின் உதவியை நாடுவ தாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக பணவீக்க அதிகரிப்பு குறைந்த அளவான சமூக உதவிகள் ஆகிய காரணிகளினால் இவ்வாறு உணவு வங் கிகளில் தங்கி வாழ்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.



கனடிய உணவு வங்கி குறித்த நிறுவனத்தினால் வெளியிடப் பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் 1.5 மில்லியன் பேர் உணவு வங்கிகளில் உதவியை நாடியுள்ளனர்.

இது கடந்த ஆண்டு இதே மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது 35 வீத அதிகரிப்பினை பதிவு செய்துள்ளது.

நிலையான வருமானம் பெறும் சிரேஸ்ட பிரஜைகள், குறைந்த வருமானம் ஈட்டும் மாணவர்கள் போன்றவர்கள் அதிகளவில் பணவீக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உணவு வங்கிகளில் பயன் பெற்றுக் கொண்டவர்களில் மூன் றில் ஒரு வீதமானவர்கள் அதாவது 500,000 பேர் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடா முழுவதும் காணப்படும் 4750உணவு வங்கிகள் தொடர்பில் இந்த தகவல்கள் திரட்டப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது

# Mr. Pierre Polievre - Opposition Leader (Conservative Party of Canada) அவர்கள் இரு தமிழ் சிறுவர்களின் எதிர்காலம் சிறக்க ஆசி!



அக்டோபர் 30, 2022

பிரன்டன் நகரில் நடைபெற்ற தமிழ் மக்கள் ஒன்று கூடலில் கலந்து கொண்ட கனடாவின் Opposition Leader of the Pierre Poilievre (Conservativu Party of Canada) அவர்கள் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் கொண்ட Kupanan Joanna மற்றும் Matheeson Akshvitha ஆகிய இருவரையும் மதிப்புக்கும், மரியாதைக்குமுரிய Mr. Pierre Polievre அவர்கள் இரு சிரர்களின் எதிர்கால அரசயில் பணயத்தை ஊக்குவித்தும் சிறந்து கல்வி அறிவும் பெற்று நல்ல கனடிய குடிமக்களாக எதிர்கால அரசயிலிலும் சிறக்க ஆசி வழங்கினார்.




# 'மாவீரர் நாள்' என்னும் பெயரை நினைவெழுச்சி நாள் என்று கனடாவில் அடம்பிடிப்பது வரலாற்று அழிப்பு!

மாவீரர் நாள் என்பது தாய் நாட்டின் விடுதலைக்காகப் போராடி தமது இன் உயிரை ஈந்த வீரர்களை நினைவு கூர்ந்து வீர வணக்கம் செலுத்தும் ஒரு நாள் ஆகம்.

"மாவீரர் நாள்" என்பதை நினைவெழுச்சி நாள் என்று இருட் டடிப்பு செய்வதன் காரணம் யாது? மாவீரருக்குரிய நாளை "மாவீரர் நாள்" என்பது சரியானதும், தெளிவானதும்.

தொடர்ச்சியாக மாவீரர் நாளை நினைவெழுச்சி நாள் என்று கனடாவில் அடம்பிடிப்பது வரலாற்று தவறும் வரலாற்று அழிப்பும். உரியவர்கள் திருத்துவது நல்ல விடையம், அடுத்த தலைமுறைக்கு தெளிவான வரலாற்றையே விட்டு செல்ல வேண்டியது காலத்தின் கட்டாயம்.

"வெற்றி தோல்வி முக்கியமில்லை. அடுத்த தலைமுறைக்கு தெளிவான வரலாற்றையே விட்டு செல்ல வேண்டும்."

– தமிழீழத் தேசிய தலைவர்–




# தமிழக மீனவர்கள் மீது சிங்கள மீனவர்கள் தாக்குதல்!

அக்டோபர் 16, 2022

கடந்த 12ஆம் திகதி தமிழக கடற்பகுதியில் இருந்து 20 கடல் மைல் தொலைவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது ஒரு கும்பல் தாக்குதல் நடத்தியதாக இந்தியா டுடே இணையதளம் செய்தி வெளியிட்டுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான தமிழக மீனவர்கள், இலங்கை சிங்கள மீனவர்கள்தான் தாக்குதலை நடத்தினார்கள் என்று குற்றம் சாட்டுவதாக இந்தியா டுடே இணையதளம் தெரிவித்துள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான இலங்கை மீனவர்கள் தங்களுடைய மீன்பிடி சாதனங்கள் மற்றும் மீன்பிடி கப்பலை சேதப்படுத்தியதாகவும், தாங்கள் பிடித்த மீன்களை எடுத்துச் சென்றதாகவும் தமிழக மீனவர்கள் கூறியதாகவும் தாக்குதலுக்கு உள்ளான மீனவர்கள் சிகிச்சை பெற்று வருவதாகவும், கடலோர காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளதாகவும் இந்தியா டுடே இணையதளம் தெரிவித்துள்ளது.

வடக்கு கடற்பரப்பில் நாள் கணக்கில் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபடும் சிங்கள மீனவர்களே தாக்குதல்களினை முன்னெடுத்துள்ளமை அம்பலமாகியுள்ளது.



# செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார் – 150, மகாகவி பாரதி நினைவு – 100 விழா தஞ்சை முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நடைபெற்றது!

அக்டோபர் 16, 2022

01.10.2022 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு தஞ்சை முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150ஆவது பிறந்தநாள், மகாகவி பாரதி நினைவு நூற்றாண்டு மற்றும் நூல் அறிமுக விழா நடைபெற்றது.

முள்ளிவாய்க்கால் இலக்கிய முற்றத்தின் தலைவரான பேரா. வி. பாரி அனைவரையும் வரவேற்றார். வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தின் வேந்தர் கல்விக்கோ முனைவர் கோ. விசுவநாதன் விழாவிற்குத் தலைமை தாங்கினார். சி. முருகேசன், சா. இராமன், எம்.ஜி.கே. நிஜாமுதீன், து. குபேந்திரன், சு. பழநிராசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். "செக்கடியில் நொந்த நூலோன் சிதம்பரனார்" என்னும் தலைப்பில் முனைவர் இரா. காமராசு அவர்களும், "புதுநெறி காட்டிய புலவன் பாரதி" என்னும் தலைப்பில் தோழர் சி. மகேந்திரன் அவர்களும் சிறப்பாக உரையாற்றினர்.

வ.உ.சிதம்பரனார் அவர்கள் கவிதை நடையில் எழுதிய தன் வரலாற்றினை உரை நடை வடிவிலான நூலாக புதுவை ந.மு. தமிழ்மணி அவர்கள் இயற்றியுள்ளார். அந்த நூலின் அறிமுகவுரையை பேரா. இரா. முரளிதரன் ஆற்றினார். சீனு. மோகனதாசு, மரு. இரா. பாரதிசெல்வன், ந. சிவகுரு, ஜோ. ஜான்கென்னடி ஆகியோர் இந்நூலினைப் பெற்றுக்கொண்டனர். நூலாசிரியர் ந.மு. தமிழ்மணி ஏற்புரை நிகழ்த்தினார். பழ. நெடுமாறன் நிறைவுரையாற்றினார். பேரா. சோம. கண்ணதாசன் நன்றியுரை கூறினார்.

திரளான மக்கள் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.




# தமிழகம் சென்ற ஈழத்தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 181!

அக்டோபர் 04, 2022

தொடரும் பொருளாதார நெருக்கடியால் மேலும் 6 இலங்கை தமிழர்கள் இன்று திங்கட்கிழமை (17) காலை தனுஷ்கோடி அடுத்த ஒன்றாம் மணல் திட்டில் சென்று இறங்கியுள்ளனர்.

இலங்கை தமிழர்களை மணல் திட்டில் இருந்து பத்திரமாக மீட்ட இந்திய கடலோர காவல்படையினர் இராமேஸ்வரம் மரைன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக அங்குள்ள மக்கள் உணவு பொருட்கள், அத்தியாவசிய தேவைகளுக்காக கடும் சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர்.

இதனால் கடந்த மார்ச் மாதத்திலிருந்து இலங்கையில் இருந்து இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடி வழியாக தமிழகத்திற்குள் அகதிகளாக சென்ற வண்ணம் உள்ளனர்.



இந்நிலையில் இலங்கை மன்னார் மாவட்டம் பேசாலையை சேர்ந்த அந்தோணி மரிய கொரட்டி, புலக்ஷன், கஹுவியா, சசிக்குமார், சனுஜன், அந்தோணி பெர்னான்டோ உள்ளிட்ட ஒரே குடும்பத்தை சேர்ந்த 6 பேர் இலங்கை யாழ்ப்பாணத்தில் இருந்து படகில் புறப்பட்டு இன்று (17) காலை தனுஷ்கோடி அருகே உள்ள முதல் மணல் திட்டில் வந்திறங்கினர்.

தகவலறிந்து மண்டபம் கடலோர காவல் படையினர் முதல் மணல் தீடை இலிருந்து இலங்கைத் தமிழர்களை ஹோவர் கிராஃப்ட் படகு மூலம் மீட்டு தனுஷ்கோடி அரிச்சல்முனை கரைக்கு கொண்டு வந்து ராமேஸ்வரம் மரைன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

விசாரணைக்கு பிறகு 6 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட உள்ளனர்.

இதனால் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகம் வந்தவர்களின் எண்ணிக்கை 181 ஆக உயர்ந்துள்ளது.

# உயர்நீதிமன்ற மொழியாகத் தமிழ்! முட்டுக்கட்டையாக இந்திய அரசின் கொள்கை!

அக்டோபர் 17, 2022

“இந்தியாவெங்கும் உள்ள நீதிமன்ற நடவடிக்கைகளில் அந்தந்த மாநில மொழிகளிலே நடைபெறவேண்டும்” என தலைமையமைச்சர் மோடி அவர்கள் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், அவரின் இந்த விருப்பத்திற்கு மாறாக இந்திய அரசின் போக்கு அமைந்திருக்கிறது. மாநில உயர்நீதிமன்றங்களின் தலைமை நீதிபதியாக வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்தான் நியமிக்கப்படவேண்டும், அந்த உயர் நீதிமன்றத்தின் மொத்த நீதிபதிகளில் மூன்றில் ஒரு பங்கினர் வெளிமாநிலங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும் என்ற திட்டம் இப்போதும் நடைமுறையில் உள்ளது. அந்தந்த மாநில உயர்நீதிமன்றங்களில் அந்த



மாநிலத்தின் மொழியை தாய்மொழியாகக் கொண்டவர்கள் மட்டுமே தலைமை நீதிபதியாகவும் மற்றுமுள்ள நீதிபதிகளாகவும் இருக்கவேண்டும் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டால்தான் மாநில மொழிகள் உயர்நீதிமன்றம் வரை நீதிமொழியாக விளங்க முடியும்.

ஏற்கெனவே தமிழ்நாட்டில் மாவட்ட நீதிமன்றம் வரை தமிழ் நீதிமொழியாகத் திகழ்ந்து வருகிறது. உயர்நீதிமனறத்தில் தமிழ் நீதிமொழியாக வர முடியாமல் இருப்பதற்கு இந்திய அரசின் மேற்கண்ட கொள்கையே காரணமாகும். எனவே அந்த கொள்கையை அறவே கைவிட்டால்தான் மாநில மொழிகள் உயர்நீதிமன்ற மொழிகளாக ஆக முடியும். அதற்கான நடவடிக்கைகளை தலைமையமைச்சர் மோடி மேற்கொள்ளவேண்டும் என வலியுறுத்துகிறேன். என தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ. நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# தமிழ்நாட்டு மீனவர் மீது இந்தியக் கடற்படையினர் துப்பாக்கிச்சூடு!

## சீமான் கண்டனம்

அக்டோபர் 22, 2022

மன்னார் வளைகுடா பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழ்நாட்டு மீனவர்கள் மீது இந்தியக் கடற்படை நடத்திய துப்பாக்கிச்சூட்டில் மயிலாடுதுறையைச் சேர்ந்த மீனவர் அன்புத்தம்பி வீரகுமார் படுகாயமடைந்த செய்தியறிந்து கடும் அதிர்ச்சியும், மன வேதனையும் அடைந்தேன். இலங்கை கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டுக் கைது செய்யப்படும் சூழலில், இந்தியக் கடற்படையும் தற்போது தமிழ்நாட்டு மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவது கொடுங்கோன்மையின் உச்சமாகும்.

புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்த விசைப்படகு மீனவர்கள் கடந்த 20 ஆம் தேதியன்று நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது எல்லைத் தாண்டி மீன்பிடித்தாகக்கூறி அருள், ஐயப்பன், சுந்தரம் ஆகிய 3 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்திருப்பது கடும் ஆத்திரத்தை ஏற்படுத்துகிறது. கடந்த மாதம் கைது செய்யப்பட்ட ஜெகதாப்பபட்டினம் மீனவர்கள் 8 பேர் நேற்று முன்தினம்தான் விடுவிக்கப்பட்டு தாயகம் திரும்பிய நிலையில், நேற்று மேலும் 3 தமிழ்நாடு மீனவர்களைக் கைது செய்துள்ளது, தமிழர்கள் மீதான இலங்கை கடற்படையின் இனவெறி மனப்பான்மையை உறுதிப்படுத்துவதோடு, இக்கைதுகள் யாவும் திட்டமிட்டு அரங்கேற்றப்படும் வன்மத்தின் வெளிப்பாடுகள்தான் என்பதையும் நிறுவுகிறது.

இலங்கை கடற்படையின் தாக்குதலுக்கு எதிராக தமிழக மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தைத் தொலைத்து ஒவ்வொரு நாளும் போராடிக்கொண்டிருக்க, தற்போது இந்தியக் கடற்படையும் தமிழ்நாட்டு மீனவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்துவது அவர்களை வாழவே முடியாத அளவிற்கு அழித்தொழிக்கும் கொடுஞ்செயலாகும். இதுவரை இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படும்போது ஒரே ஒரு முறை கூடத் தடுத்துக் காப்பாற்ற வக்கற்ற உலகின் நான்காவது மிக வலிமையான இராணுவமான இந்தியக் கடற்படை, சொந்த நாட்டு மீனவர்களை மட்டும் குறி தவறாமல் சுடுவதென்பது தமிழர்கள் இந்த நாட்டின் குடிமக்களா? இல்லையா? என்ற கேள்வியை ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலும் எழுப்புகிறது. உலகிலேயே சொந்த நாட்டு மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தும் ஒரே கடற்படை இந்தியக் கடற்படையாகத்தான் இருக்க முடியும்.

தமிழர்களின் மொழி உரிமை, கல்வி உரிமை, பொருளாதார உரிமை உள்ளிட்ட அனைத்து உரிமைகளையும் பறித்துச் சொந்த நாட்டிலேயே அதிகாரமற்ற அகதிகளாக மாற்ற முயல்வது, அரசமைப்பு வழங்கியுள்ள அடிப்படை மனித உரிமைகளைக்கூடச் சட்டத்தின் துணைகொண்டு தரமறுப்பது, அவர்களின் நிலவளம், கடல் வளம், கனிம வளம் ஆகியவற்றைக் கொள்ளையடிப்பது, தமிழர்களைக் கிள்ளுக்கீரையாக எண்ணி



அதிகார அடக்குமுறைகளின் மூலம் அவர்களின் உயிர்களைப் பறிப்பது என இந்திய ஒன்றிய அரசின் செயல்பாடுகள் யாவும்



வளர்ந்து வரும் தலைமுறையினருக்கு இந்நாட்டின் மீது அணுவளவும் பற்று ஏற்படாதவாறு மிகப்பெரும் வெறுப்பையும், கோவத்தையுமே ஏற்படுத்தி வருகின்றது என்பதே எதார்த்த உண்மையாகும். இதே நிலை நீடித்தால் மிகப்பெரிய விலையை இந்த நாடு கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை இந்திய ஆட்சியாளர்கள் உணர்ந்து, இனியேனும் தமிழர்களும் இந்த நாட்டின் குடிமக்கள்தான் என்பதை நினைவில் கொண்டு மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும்.

எனவே, தமிழக மீனவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ள இந்தியக் கடற்படையினர் மீது கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்து உடனடியாகக் கைது செய்ய இந்திய ஒன்றிய மற்றும் தமிழ்நாடு அரசுகள் நடவடிக்கை எடுப்பதோடு, சுடப்பட்ட அன்புத்தம்பி வீரகுமார் குடும்பத்திற்கு 50 இலட்ச ரூபாய் துயர் துடைப்பு நிதியாக வழங்க வேண்டும். மேலும், இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாடு மீனவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நாளுக்கு நாள் அதிகரித்துவரும் இலங்கை கடற்படையினரின் அட்டூழியங்கள் இனியும் தொடராது தடுத்து நிறுத்த, இந்திய ஒன்றிய அரசின் மூலம் நிரந்தரத் தீர்வுகாண திமுக அரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனவும் நாம் தமிழர் கட்சி சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# தமிழக மீனவர் மீது இந்தியக் கடற்படை துப்பாக்கி சூடு!

## பழ நெடுமாறன் கடும் கண்டனம்

அக்டோபர் 22, 2022

வேலியே பயிரை மேய்வதா? தமிழக மீனவர் மீது இந்தியக் கடற்படை சுட்டதற்கு தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ. நெடுமாறன் கடும் கண்டனம்.

மன்னார் வளைகுடா பகுதியில் மீன் பிடித்துவிட்டுக் கரை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த தமிழக மீனவர் படையின் மீது இந்தியக் கடற்படை சுட்டதின் விளைவாக வீரவேல் என்னும் மீனவரின் உடலில் குண்டு பாய்ந்து அபாயகரமான நிலைமையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

சிங்கள கடற்படையின் தாக்குதலிலிருந்து தமிழக மீனவர்களைக் காக்க வேண்டிய கடமைப் படைத்த இந்தியக் கடற்படையே நமது மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியிருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

‘வேலியே பயிரை மேய்ந்தது’ போன்ற இந்தக் கொடூர நிகழ்ச்சிக்குக் காரணமான கடற்படையினர் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு இந்திய அரசை வலியுறுத்துகிறேன்.

அன்புள்ள,<br>(பழ.நெடுமாறன்)<br>தலைவர்.

# ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பேர் ஈழத்தமிழர் தமிழ்நாட்டில் தஞ்சம்!

அக்டோபர் 24, 2022



அண்மைக்காலமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையை பூர்வீகமாக கொண்ட பலநூற்றுக்கணக்கானோர் படகுமூலம் சென்று இந்தியாவில் தமிழ்நாட்டுக்கு ஏதிலிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

அந்தவகையில் இன்று திங்கட்கிழமை காலை திருகோணமலையைச் சேர்ந்த குடும்பம் ஒன்று படகு மூலம் இந்தியா சென்று தமிழ்நாட்டில் தஞ்சமடைந்துள்ளது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் ஆகியோரே இவ்வாறு ஏதிலிகளாகச் சென்றுள்ளனர்.

தமிழக காவல்துறையினர் அவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழ் நாடக உலகின் மறுமலர்ச்சித் தந்தையான சங்கரதாசு சுவாமிகளின் பெயரை மாற்றுவதா?

அக்டோபர் 27, 2022



மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமானதும், தமுக்கம் திடலில் அமைந்திருப்பதுமான கலை அரங்கத்திற்குத் தமிழ் நாடக உலகின் மறுமலர்ச்சித் தந்தையான சங்கரதாசு சுவாமிகளின் பெயர் சூட்டப்பட்டிருந்தது.

அந்தக் கலை அரங்கைப் புதுப்பித்துக் கட்டிய பிறகு சங்கரதாசு சுவாமிகளின் பெயர் விளம்பரப் பலகையில் காணப்படவில்லை. இதைப் பயன்படுத்திக்கொண்டு அதற்கு ராணி மங்கம்மாளின் பெயரைச் சூட்டவேண்டும் என்று தெலுங்கு சங்கத்தினரின் சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் மதுரையில் நடத்தப்பட்டுள்ளதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

மதுரை நகராட்சியாக இருந்தபோது இந்தக் கலை அரங்கம் கட்டப்பட்டு அதற்கு முன்பாக சங்கரதாசு சுவாமிகளின் சிலையும் வைக்கப்பட்டுள்ளது. அதை மாற்றுவதற்கு நடைபெறும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்தி அக்கலை அரங்கத்திற்கு சங்கரதாசு சுவாமிகளின் பெயரையே சூட்டும்படி முதலமைச்சரை வேண்டிக்கொள்கிறேன். என தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ. நெடுமாறன் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு பிறந்தநாளைச் சிறப்பாகக் கொண்டாடுக!

**தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ. நெடுமாறன் வேண்டுகோள்**

அக்டோபர் 30, 2022







சங்க காலத்திலிருந்து மன்னர்கள் ஆட்சியில் பல்வேறு நாடுகளாகப் பிரிந்து கிடந்த தமிழகம், ஆங்கிலேயர் ஆட்சியில் ஒன்றுபட்ட சென்னை மாகாணம் என்னும் சிறைக்குள் அடைப்பட்டுக் கிடந்தது.

1956ஆம் ஆண்டு நவம்பர் முதல்நாள் தமிழ்நாடு முதன் முதலாக அமைந்தது. அந்த நாளை மிகச் சிறப்பாகக் கொண்டாட வேண்டியது தமிழர்களின் கடமையாகும். தமிழ்நாடு உருவாகவும், நமது எல்லைப் பகுதிகளை மீட்பதற்காகவும் உயிர் ஈகம் செய்தவர்களுக்கு வீர வணக்கம் செலுத்துவோமாக.

சாதி - சமய வேறுபாடுகளுக்கப்பால் அனைவரும் தமிழர்களே என்ற ஒற்றுமை உணர்வை ஒன்றுபட்டு நின்று மேலும் வளர்ப்போமாக.






# உலக செய்திகள்

## தாய்வானை கைப்பற்றுவோம் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்!

அக்டோபர் 16, 2022

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ஜி ஜின்பிங், தாய்வானை தங்களுடன் இணைத்துக்கொள்ள தேவைப்பட்டால் பலத்தைப் பயன்படுத்த தயங்க மாட்டோம் என சூளுரைத்துள்ளார்.

ஐந்தாண்டுக்கு ஒரு முறை நடைபெறும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாடு பீஜிங் கிரேட் ஹாலில் முனனெடுக்கப்பட்டது. 2300 உறுப்பினர்கள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜி ஜின்பிங்,

ஹொங்ஹொங்கில் நிலைமை முற்றிலுமாக மாறிவிட்டது. குழப்பம் சூழ்ந்து காணப்பட்ட ஹொங்ஹொங் தற்போது பெரும் மாறுதலை சந்தித்துள்ளது. தற்போது அது சீன அரசின் ஒரு பகுதியாக உள்ளது.



அதேபோல், தாய்வான் பிரச்சினையில் பிரிவினைவாதிகளை முறியடித்து நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு எதிரான நிலைப்பாட்டை வீழ்த்துவதில் சீனா உறுதியாக இருக்கிறது. தைவான் பிரச்சினையில் சீன மக்கள் தான் தீர்வு காண வேண்டும். சீன அரசு ஒருபோதும் பலத்தைப் பிரயோகப்படுத்த தயங்காது.

தைவானை சீனாவுடன் ஒருங்கிணைப்பதில் நாங்கள் அமைதியான வழியில் செல்வோம். அதீத முயற்சிகளுடன் உண்மையான வழியில் இணைப்பை சாத்தியப்படுத்துவோம். இருப்பினும் தேவைப்பட்டால் பலத்தைப் பயன்படுத்தாமல் இருக்க மாட்டோம் என்றார் ஜி ஜின்பிங்.

ஒரு வாரத்திற்கு முன்னெடுக்கப்படும் இந்தக் கூட்டத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக மீண்டும் ஜி ஜின்பிங் தெரிவு செய்யப்படுவார். அதுமட்டுமல்லாமல் கட்சியின் பொலிட் பீரோவுக்கு 25 உறுப்பினர்களும், மத்திய குழுவுக்கு 200 பேர்களும் தெரிவு

சீனாவில் ஜனாதிபதி பொறுப்பை விடவும் கட்சியின் பொதுச் செயலர் பொறுப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரித்தானியப் பிரதமர் பதவியேற்று 45 நாளில் பதவி விலகினார்!

அக்டோபர் 20, 2022

பிரதமர் லிஸ் டிரஸ் இன்று தனது பதவியை திடீரென பதவி விலகியுள்ளார். என்னை தேர்வு செய்ததற்கான இலக்கை அடைய முடியாததால் பதவி விலகுகிறேன் என லிஸ் டிரஸ் கூறியிருக்கிறார்.

பதவியேற்ற 45 நாட்களில் தனது பதவியை ராஜினாமா செய்ததால், இங்கிலாந்தின் வரலாற்றில் மிகக்குறுகிய காலம் பதவியில் இருந்த பிரதமர் என்ற பெயரை லிஸ் டிரஸ் பெற்றுள்ளார்.

இன்னும் ஒரு வாரத்தில் அடுத்த பிரதமர் தேர்வு செய்யப்படுவார் என லிஸ் டிரஸ் தெரிவித்துள்ளார். இன்னும் ஒரு வாரத்தில் பிரதமர் பதவிக்கான தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஏற்கனவே தேர்தலில் போட்டியிட்ட ரிஷி சுனக்கிற்கு தற்போது 55மூ வெற்றி வாய்ப்பு இருப்பதாக அரசியல் வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.

அதே சமயம் இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் போரிஸ்



ஜான்சனும் தேர்தலில் போட்டியிடலாம் என்று கூறப்படுகிறது. கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த ஜெரேமி ஹண்ட், தான் தேர்தலில் போடியிடப் போவதில்லை என தெரிவித்துள்ளார்.

இவர்கள் தவிர கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த பென்னி மார்டண்ட், இங்கிலாந்தின் பாதுகாப்புத்துறை செயலாளர் பென் வாலேஸ் ஆகியோரும் பிரதமர் தேர்தலில் போட்டியிட வாய்ப்புள்ளது. எனவே வேட்பாளர்கள் தொடர்பான அறிவிப்பு வெளியான பிறகே, வெற்றி வாய்ப்புகளை கணிக்கும் சாத்தியங்கள் ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

லிஸ் டிரஸ் கடந்த செப்டம்பர் 6 ஆம் திகதி பிரதமராகப் பதவியேற்றார். இதன் பிறகு நடைபெற்ற மினி பட்ஜெட் கூட்டத்தொடரில், லிஸ் டிரஸ் பல்வேறு வரி குறைப்பு திட்டங்களை வெளியிட்டார். ஆனால் அந்த திட்டங்களுக்கு அவரது சொந்தக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அதிருப்தி தெரிவித்தனர்.

இதையடுத்து நிதி அமைச்சர் (சான்ஸ்சிலர்) குவாஸி குவார்டங்கை பிரதமர் லிஸ் டிரஸ் அதிரடியாக பதவிநீக்கம் செய்தார். அவருக்கு பதிலாக ஜெரேமி ஹன்ட் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டார்.

இதையடுத்து இந்திய வம்சாவளி பெண்ணான சுவெல்லா பிரேவர்மென் உள்துறைச் செயலர் பதவியில் நேற்று முன்தினம் பதவி விலகினார். இதனால் இங்கிலாந்து அமைச்சரவையில் பெரும் சலசலப்பு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து பிரதமர் லிஸ் பதவி விலகினார்.

## ஐக்கிய இராச்சியத்தை வழிநடத்த இந்திய வம்சாவளியை சேர்ந்த ரிஷீ பிரதமர் பொறுப்பில்!

அக்டோபர் 25, 2022

ஐக்கிய இராச்சியத்தின் வரலாற்றில் முதன்முறையாக, வெள்ளையர் அல்லாத ஒருவர் பிரதமராக நாட்டை வழிநடத்துகிறார்.

பிரதமர் பதவிக்கான போட்டியில் இந்திய வம்சாவளியை சேர்ந்த ரிஷி சுனக்கிற்கு ஆதரவு அதிகமாக இருந்தது. கன்சர்வேட்டிவ் கட்சி எம்.பிக்கள் 134 க்கும் மேற்பட்டோர் ரிஷி சுனக்கிற்கு ஆதரவு அளித்தனர். ஆனால், ரிஷி சுனக்கிற்கு எதிராக போட்டியிட திட்டமிட்டு இருந்த போரிஸ் ஜான்சன் மற்றும் பென்னி மொர்டண்ட் போதிய ஆதரவை



பெற முடியாததால் போட்டியில் இருந்து விலகினர்.

இதனால், பிரித்தானியாவின் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவராக ரிஷி சுனக் போட்டியின்றி தேர்வு ஆனார். இதையடுத்து, பிரித்தானியாவில் புதிய ஆட்சியை அமைக்குமாறு ரிஷி சுனக்கிற்கு மன்னர் 3 ஆம் சர்லஸ் இன்று அழைப்பு விடுத்தார்.

இந்த அழைப்பை ஏற்று இங்கிலாந்து நாட்டின் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட ரிஷி சுனக், அரசர் மூன்றாம் சார்லசை இன்று சந்தித்து பேசினார். அப்போது, அரசர் 3ஆம் சார்லஸ், முறைப்படி புதிய பிரதமராக சுனக்கை அறிவித்தார்.

### முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.**

**தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.**

**எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# 50 ஆண்டுகள் குளிக்காத மனிதர் 94 வயதில் உயிரிழந்தார்

அகட்டோபர் 26 2022

உலகிலேயே அழுக்கு மனிதர் என்று ஊடகங்களால் அடைப்பட்ட ஈரான் நாட்டின் தெற்கு மாகாணமான ஃபார்ஸில் வாழ்ந்த அமு ஹாஜி என்ற மனிதன் தனது 94 வயதில் உயிரிழந்தார்.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக தண்ணீர் மற்றும் சவர்க்காரம் படமால் அவர் குளிக்காமல் இருந்தார். குளித்தால் நோய் வாய்பட்டு விடுவோம் என்ற அச்சத்தில் 50 ஆண்டுகளாக குளிக்காமல் இருந்தார்.

அவரைச் சுத்தம் செய்ய கிராமவாசிகளின் முயற்சிகள் எடுத்தபோதும் அவர் அதனைத் முயற்சிகளைத் தவிர்த்தார்.

இருந்த போதும் அமு ஹாஜி அழுத்தத்திற்கு அடிபணிந்து சில மாதங்களுக்கு முன்பு குளிக்க வார்க்கப்பட்டார் என்று உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் அவர் சிறிது காலம் நோய்வாய்பபட்டு இருந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இறந்தார் என்று ரானின் ஐஆர்என்ஏ செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

2014 இல் தெஹ்ரான் டைம்ஸூக்கு வழங்கிய நேர் காணலில், அவர் தனக்குப் பிடித்த உணவு முள்ளம்பன்றி என்றும், டெஜ்கா கிராமத்தில் கட்டப்பட்ட செல்கல் குடிசைக் கும் இடையில் வாழ்ந்ததாகவும் தெரிவித்தார்.

அவரது உணவில் அழுகிய இறைச்சி மற்றும் பழைய எண்ணெய் கொள்கலனில் இருந்து குடித்த சுகாதாரமற்ற தண்ணீர் இருந்தது. அவர் புகைபிடிப்பதை விரும்பினார்.

குறைந்தது ஒரு நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வெண் சுருட்டுகளை (சிகரெட்டுகளை) புகைப் பிடிப்பவர்.

அவரைக் குளிப்பாட்டவோ, அல்லது குடிக்க சுத்தமான தண்ணீரைக் கொடுக்கவோ செய்த முயற்சிகள் அவரை வருத்தமடையச் செய்ததாக செய்தி நிறுவனம் கூறியது.

இருப்பினும், அதிக நேரம் குளிக்காமல் சென்றவர் என்ற சாதனையை அவர் படைத்தாரா என்பது விவாதத்திற்குரிய விஷயமாக உள்ளது.



திருமணம் செய்யாமல் தனித்து வாழ்ந்து வந்த அவர், காலமாகி விட்டதாக ஈரான் அரசு தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

அமோ ஹாஜியின் வாழ்க்கையை மையமாக கொண்டு, The Strange Life of Amou Haji என்ற பெயரில் 2013ம் ஆண்டு ஆவணப் படமும் எடுக்கப்பட்டது.

# சிறீலங்கா அரச கைக்கூலிகளின் தாக்குதலில் பிரான்சில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப். கேணல் நாதன், கப்டன் கஜன் ஆகியோரின் 26ஆம் ஆண்டு வீரவணக்க நிகழ்வு!

அக்டோபர் 26, 2022

பிரான்ஸ் தலைநகர் பரிசில் வைத்து 26.10.1996 அன்று சிறீலங்கா அரச கைக்கூலிகளின் தாக்குதலில் வீரச் சாவைத் தழுவிக்கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக நிதிப்பொறுப்பாளர் லெப்.கேணல் நாதன் மற்றும் ஊடகப்போராளியும் ஈழமுரசின் நிறுவன ஆசிரியருமான கப்டன் கஜன் ஆகியோரின் 26ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று (26.10.2022) புதன்கிழமை பிரான்சில் இம் மாவீரர்களின் கல்லறை அமைந்துள்ள பந்தன் துயிலும் இல்லத்தில் இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரினை பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு மாவீரர் பணிமனைப் பொறுப பாளர் திரு.நிதர்சன் அவர்கள் ஏற்றிவைத்தார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து குறித்த மாவீரர்களின் கல்லறைகள் மீது தமிழீழத் தேசியக் கொடி போர்த்தப்பட்டு மதிப்பளிக்கப்பட்டது.

லெப்.கேணல் நாதன், கப்டன் கஜன் ஆகிய மாவீரர்களின் கல்லறைகளுக்கு லெப்.கேணல் நாதன் அவர்களின் சகோதரனும் கப்டன் கஜன் அவர்களின் சகோதரனும் ஈகைச்சுடரினை ஏற்றி மலர்மாலை அணிவித்தனர். தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் சுடர் ஏற்றி மலர்வணக்கம் செலுத்தினர்.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு செயற்பாட்டாளர் திரு.பாலசுந்தரம், நினைவுரை ஆற்றியிருந்தார்..

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற தாரக மந்திரத்துடன் நிகழ்வு நிறைவுகண்டது.








# சோமாலியாவில் இரட்டை மகிழுந்துக் குண்டு வெடிப்பு 100 பேர் பலி! 300 பேர் காயம்!

அக்டோபர் 30, 2022

சோமாலியாவின் தலைநகர் மொகடிஷுவில் இன்று நடந்தப்பட்ட இரு மகிழுந்து குண்டு வெடிப்பில் குறைந்தது 100 பேர் கொல்லப்பட்டனர் மேலும் 300 பேர் காயமடைந் துள்ளனர் என சோமாலிய ஜனாதிபதி ஹசன் ஷேக் முகமது தெரிவித்தார்.

இத்தாக்குதலை அல்-ஷபாப் ஆயுதக் குழுவைக் நடத்திய தாக குற்றம் சாட்டினார் முகமது. இக்குண்டு வெடிப்பில் உயிரிழப்புகள் மேலும் அதிகமாகலாம் என எதிர்ப்பார்ப் பதாக அவர் குறிப்பிட்டார்.

உயிரிழந்தவர்களில் குழந்தைகளுடன் தாய்மார்கள், தந்தையர்கள், படிக்க அனுப்பப்பட்ட மாணவர்கள் மற்றும் வணிகர்கள் உள்ளடங்குவதாக அவர் தெரிவித்தார்.

இரண்டாவது குண்டுவெடிப்பு நடந்தபோது நான் 100 மீட்டர் தொலைவில் இருந்தேன். என்னால் தரையில் உள்ள உடல்களை எண்ண முடியவில்லை.

முதல் குண்டுவெடிப்பு கல்வி அமைச்சின் சுற்றுச்சுவரில் தாக்கியது. ங்கு தெருவோர வியாபாரிகள் மற்றும் பணம் மாற்றுபவர்கள் தங்கள் வியாபாரத்தை வியாபாரம் செய்தனர் என்றார்.



# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4




# எமது தாயகத்து உண்மை நிலைகளை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைக்கவேண்டும்!

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



கடந்த பல தசாப்தங்களாகச் தமிழருக்கெதிராக இழைக்கப்படும் அநீதிகளும் அட்டூழியங்களும் அத்தாட்சிப் பத்திரங்களோடும், புள்ளிவிபரச் சான்றுகளோடும் சர்வதேச உலகிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அத் தோடு ஈழத்தமிழர்களின் மீது இனவழிப்புப் பரிமாணத்தில் ஒடுக்குமுறை நிகழ்ந்து வருகின்றது என்பதை உலக மனித உரிமை நிறுவனங்கள் எடுத்துக் கூறி வந்திருக்கின்றன. காலம் காலமாக தமிழ் மண்ணில் சிங்களப் பேரினவாம் நிகழ்த்திவரும் ஊழிக்கூத்தினால் அறுபதினாயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் அழிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் சர்வதேச உலகம் அறியாததல்ல. அத்தோடு, நீண்ட காலமாக எமது தேசத்தில் நிகழ்ந்து வரும் போரின் போக்குப்பற்றியும், இருதரப்பினரும் கையாண்டுவரும் போரியல் தந்திரோபாயங்கள், உத்திகள் பற்றியும் உலக இராணுவ நிபுணர்கள் உன்னிப்பாகக் பவனித்து வருகிறார்கள் என்பதும் எமக்கு தெரியும். எல்லாவற்றிற்குளம் மேலாக, தமிழருக்கு எதிராக இழைக்கப்படும், கொடுமைகளின் கண்கண்ட சாட்சிகளாக எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்த தமிழர்கள் உலக நாடுகள் எங்கும் தஞ்சம் புகுந்து வாழ்கின்றார்கள். இந்த உண்மையை உலக சமூகம் அறியும். அப்படியிருந்தும் தமிழீழ மக்கள் அனுபவித்து வரும் பேரவலம் உலகத்தின் புருவத்தை உயர்த்தவில்லை என்பது எமக்கு ஒருபுறம் ஆச்சரியமாகவும், மறுபுறம் வேதனையாகவும் இருக்கிறது.

இன்றைய உலக ஒழுங்கில் ஒவ்வொரு நாடும் தனது சொந்த தேசிய அபிலாஷைகளிலும் வர்த்தக நலனினும் அக்கறை கொண்ட செயற்படுகிறது என்பது எமக்குத் தெரியாததல்ல. எனினும் மனித உரிமை, மனித சுதந்திரம் என்ற பொதுமையான விழுமியங்களுக்கு நாகரீக உலகம் முதன்மை கொடுக்கத் தவறவில்லை. இந்த நாகரீக உலகத்திற்கு தலைமை தாங்கும் நாடுகள் சிறீலங்காவில் தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்படும் அநாகரீகமான ஒடுக்குமுறைக்கு எதிராக குரலெழுப்பத் தயங்குவது எமக்கு துயரத்தைத் தருகின்றது. எனினும் நாம் மனம் தளர்ந்து போகவில்லை. என்றோ ஒரு நாள், தமிழீழத்தின் புதைகுழிகளுக்குள் மூடப்பட்டு உறங்கும் உண்மைகள் வெளிவரத்தான் செய்யும். அவ்வேளை சிங்களப் பேரினவாதத்தின் முகமூடி கிழியும். அப்போது எமது மக்களின் சோகக் கதை உலகத்தின் இதயத்தை உலுப்பும். அதுவரை அனைத்துலகமெங்கும் வாழும் ஈழத்தமிழர்கள் உலகத்தின் மனச்சாட்சியை உறுத்தும் வகையில், தாயகத்து உண்மை நிலைகளை சர்வதேச சமூகத்துக்கு இடித்துரைத்து வரவேண்டும்

(1998 மாவீரர் நாள் உரையிலிருந்து)



மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லஷ்சுமி பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6




சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com




HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
Furnance, Air Conditioner, Hot Water Tank
Tankless Water Heater, HRV, Fireplace, Attic Insulation,
Duct Work, Gas Line For BBQ, Stove, Dryer
up to
$5000
REBATE
0 Down, Rental
Rent - to - Own
10 Years Warranty
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE
ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
geansam@yahoo.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000




PEEL TAE KWON-DO
PEEL TAE KWON DO
Family Martial Arts
Trusted Local Taekwon - Do
Training School
* Over 20+ Years Taekwon-Do
Training Experience
* For All Your Taekwon-Do, Martial
Arts, Kickboking, Self Defense and
Yoga Needs
2016 READERS' CHOICE AWARDS
* Top Quality Training for Kids, Teens and Adults
Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571
Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268




# பூநகரி வெற்றிக்கு வித்திட்ட வேங்கைகள்




பூநகரி வெற்றி விடுதலைப் போரின் பரிமாணத்தை முற்றிலும் மாற்றியமைத்த வெற்றி.

"தனது பூநகரி முகாமை நாம் தாக்க எண்ணியது எதிரிக்குத் தெரிந்து விட்டது."

"எமது எண்ணம் எதிரிக்குத் தெரிந்து விட்டதென்பதும் எமக்குத் தெரியும்"

"தனக்குத் தெரிந்தது தெரிந்ததும், நாம் ஏற்பாடுகளைத் தொடர்வதைக் கண்ட எதிரி, தனது நிலைகளை மேலும் பலப்படுத்திய போதும், நாம் எம் திட்டத்தில் சிறு மாற்றங்கள் செய்தோமே தவிர கைவிட்டு விடவில்லை.

எல்லாக் கவசமும் அணிந்த "கோலியாத்" ஆக பூநகரி முகாம் போர்க்கோலம் பூண்டு நின்ற போதும், இறுமாந்திருந்த அரக்கனும் சிறுவனும் போலான போதும் எம்மைக் "குறிதவறாத தாவீதாய்" ஆக்கினர் எம் வேவு வீரர்கள்.

வேவு வீரர்களாகப் பணியாற்ற எல்லோராலும் முடியாது. விடுதலைப் புலிகளிலும் எல்லோராலும் முடியாது. வேவு வீரனின் ஒவ்வொரு நாள் வாழ்வும், வாழ்வுக்கும் - சாவுக்கும் இடையேயான போராட்டம்" அந்தப் போராட்டத்தின் ஒவ்வொரு நகர்வும் - ஒவ்வொரு அசைவும் அவனது உயிர் வாழ்விற்கான சாத்தியத்தையும் அசாத்தியத்தையும் மட்டுமல்ல, எம் போராட்டத்தின் புத்துயிர்ப்பையும், எம் மக்களின் புது வாழ்வையும் தீர்மானிப்பதாய் அமைந்தன.

வேவுப் பணியில் ஈடுபடுபவர்களின் கடமை தனித்துவமான பல பண்புகளைக் கொண்டது. கடும் உழைப்புக்கு ஈடு கொடுக்கக்கூடிய உடல்வலு உள்ளவர்களாகவும், தொடர்ச்சியான - கடுமையான வாழ்க்கை முறைக்கு நின்றுபிடிக்கத்தக்க சகிப்புத் தன்மை கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

நிலவில்லாத முழு இரவில், நட்சத்திரங்களின் வெளிச்சத்தில் இடங்களை அடையாளம் கண்டு, மைல்க் கணக்கான தூரத் தைப் பாதைகளற்ற, பாதுகாப்பானது எனத் தீர்மானிக்கும் பகுதியால், நடந்து கடக்க வேண்டும்.

குறைந்தளவிலான நேரத்தில், முழு இருட்டில் பார்ப்பவற்றை சரியானபடி விளங்கிக் கொள்ளத்தக்க அவதானிப்புத்திறன் வேண்டும்.

அரைகுறையாகத் தெரிபவற்றை வைத்து முழு முகாம் அமைப்பையும் மதிப்பிடக் கூடியளவிலான இராணுவ அறிவுடன், திட்டமிடலுக்கான ஆலோசனை வழங்கக் கூடியவாறும், திட்டத்தின் பாதகமான அம்சங்களை வெளிப்படுத்தும் அளவிற் குமான இராணுவ வல்லமை வேண்டும்.

இவ்வளவுடனும் இலட்சியத்திற்காக உயிரைத் துச்சமெனச் செயற்படுத்தும் மனப்பக்குவம் வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக அடுத்த நாள் வாழ்வுக்கான, அடுத்த மணிநேர வாழ்வுக்கான, அடுத்த கண வாழ்வுக்கான உத்தரவாதம் ஏதுமில்லாது தொடர்ச்சியான மன இறுக்கத்துடனான வாழ்வை, ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு கொள்கைப் பிடிப்புடன், மன உறுதி கொண்டவர்களாயிருத்தல் வேண்டும்.

என்னதான் கடுமையான வாழ்க்கை எனினும், அதனை இயல்பானதாக எடுத்துக் கொள்ளும் மனப்பக்குவமும், இலட்சியப் பற்றும்தான் அவர்களை இயக்கிக் கொண்டிருந்தன. உயிர் வாழ்வின் கடைசி அத்தியாயத்தை எட்டிப் பார்த்துவிட்டு வந்த அவர்களின் பேச்சில் தொனிக்கும் நம்பிக்கை மட்டுமல்ல - நகைச்சுவையும் அலாதியானது!

இப்படித்தான் ஒருமுறை எதிரி முகாமின் ஒரு பகுதியில் வேவு வேலையில் ஈடுபட்டிருந்தான் ஒரு போராளி. ஒரு பகுதியில் எதிரிகண்டுவிட்டு அடிக்கத் தொடங்க, அதில் சுட்டுத்தப்பி வேறொரு பகுதிக்குப் போய்ச் சேர, அங்கும் எதிரிகள் கண்டு சுடத்தொடங்க... அவற்றுக்குள்ளால் மீண்டுவந்து அடுத்தநாள் அதைப் பற்றிக் கதைக்கும் போது:

"அப்பா அடிக்கிறார் என்று அம்மாட்டை ஓடினால், அம்மாவும் அடிச்சா எப்படி இருக்கும்? அப்படி இருந்தது" என்றவன், பல தடவை எதிரி முகாமுள்ளே அடிபட்டுத் தப்பி வந்து சேர்ந்தவன், ஒருமுறை வர முடியவில்லை வரவில்லை.

அவ் வேவு வீரர்களிடம் இருந்த பொறுப்புணர்வு அற்புதமானது. குறிப்பிட்ட இராணுவ நிலை மீதான தாக்குதலைச் செய்வதற்கான அணியினரை அழைத்துச் செல்லும் பொறுப்பு, தெரிந்தெடுத்த ஓரிரு வேவுக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டுவிடும்.

அதன் பின்னர் அவனது சிந்தனை எல்லாம் குறிப்பிட்ட அணியினரின் வெற்றி, மற்றும் வெற்றிக்கான பாதை திறப்பு என்ற வட்டத்தினுள் வந்துவிடும்.

'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காகத்தான் முதன் முதலில் எமது மகளிர் அணியினர் வேவு வேலையில் ஈடுபட்டனர்.

ஆரம்பத்தில் அனுபவம்மிக்க ஆண் போராளிகளின் வழிகாட்டலில் செயற்பட்ட அவர்கள், ஒரு கட்டத்தில் "ஏன் நாம் தனித்துச் செயற்படக்கூடாது" என்று குரலெழுப்பி, "மௌனமாய்ச் சிரித்த தலைவருடன் சண்டை போட்டு தனியான வேவு அணியினராக செயற்பட்டதுடன், ஈடுபட்ட ஆண் போராளி அணிகளுக்கான வழி காட்டிச் செல்லும் பொறுப்பையும் திறம்படச் செய்தனர்.

"அந்தப் பிள்ளையள் இல்லை எண்டா அங்கால் பக்கத்தாலை சரியாகக் கஸ்டப்பட்டிருப்பம்" என்று, அவ்வணியின் தளபதி மனமாரச் சொல்லும் வண்ணம் திறம்படச் செயற்பட்டனர்.

பூநகரிச் சமரில் எமது மகளிர் அணியினின் வேவுப் பிரிவினர் நால்வர் வீரச்சாவடைந்தனர்.

சம நேரத்தில் பலமுனைகளில் தாக்குதல் திட்டமிடப்பட்டதால், எல்லா முனைகளி லிருந்தும் ஒரேயடியாக வேவு நடை பெற்றுக் கொண்டிருக்கும்.

ஏதாவது ஒரு பகுதியில் அனுபவக் குறை வினாலோ, திறமைக் குறைவினாலோ வேலைகள் அரைகுறையாக இருக்கும் அல்லது வேலைகளைப் பூரணப்படுத் தவென உள்ளே சென்ற வேவு வீரன் திரும்பி வராமலே மடிந்து விட்டிருப்பான்.

அந்த வேளையில் தனது வேலையைத் திறமையாக நிறைவு செய்து காத்திருப் பவனிடம் பொறுப்புக் கைமாறும்.

தான் பார்த்த எல்லா நிலைமையையும் புதிதாய் ஒருவனுக்கு ஒவ்வொன்றாய்க் காட்டிவிட்டு தனது புதியபகுதி நோக்கி நடப்பான் அந்தப் புலிவீரன்.

சில அணிகள் ஓரிரு வேவு வழிகாட் டலிலேயே நீண்டதூர நகர்வினை மேற்கொள்ள வேண்டியிருக்கும் போது தான், அவன் தனது பாதுகாப்பைப் பற்றிக் கவும், புதிதாய் பார்க்க வேண்டியவை எவை எனவும் கேட்டு முடித்துவிட்டுப் புறப் படும் போது, அநேகமாய்ச் சூரியன் பூநகரிக்குப் பின்னால் மண்டைதீவுக் குள்ளே மறைந்து கொண்டிருப்பான்.

மெதுவாகச் சத்தமின்றி நகர வேண்டும். நிலையாய் நிற்பதற்கும் நகர்வதற்கும் இடையே வித்தியாசம் காணமுடியாத படியான மெதுவான நகர்வு சிறுதவறும் அவனையும் தோழர்களையும் ஆபத்துக் குள்ளாக்கும்இ அழித்துவிடும்.

முகாமின் வெளிக் காவலரண் வேலியை ஊடறுத்துச் செல்வதென்பது மிகவும் கடினமான பணி. ஒன்றன்பின் ஒன்றாக முட்கம்பிச் சுருள்களும் - நிலத்தின் மேல் அரையடி உயரமாய் முட்கம்பி வலைப் பின்னலும் காலை வைத்தால் எடுக்க முடியாது.

இதைவிட ஒவ்வொரு அடி வைக்கும் போதும் - அந்த இடமும் கண்ணி வெடியாய் இருக்கலாம் - படுத்திருந்து அங்குலம் அங்குலமாகக் கண்ணி மாய் அனுப்பிவிட்டு, குப்பி கடித்தான் ஒரு போராளி.

இருளின் கவசத்தில் நகரும் புலியின் முன்னே, எதிரி. ரவையை மழைபோல் பொழியத் தயாரான இயந்திரத் துப்பாக் கியுடன்... பளீரெனக் கண்களைப் பறிக் கும் ஒளியைப் பாய்ச்சித் தேடுவான்.

எதிரியின் ஒவ்வொரு காவலரணிலும் பிரகாசமான சிறு சிறு, 'லைற்'கள் இருந்தபோதும், முழு முகாமையும் சுற்றி இடையிடையே பெரியதும் பிரகாசமானது மான லைற்களால் அடிக்கடி சுற்றி சல்லடை போட்டுத் தேடி அவதானிப்பான் எதிரி. அவற்றைவிடத் தனியாக 'ஓரிடத்தில் இருந்து மறு இடத்திற்கு' நகர்ந்துகொண் டிருக்கும் 'சத்துச் சென்றிக்காரன்' தனது பங்குக்கும் எல்லா லைற்களாலும் தேடிய படி போவான்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக நாக தேவன்துறையில் ஒன்றும், ஆலடிச்சந் தியில் மற்றதுமாய், "பெரிய அரக்கனின் சூரியக் கண்கள் போல்" சுழலும் இரண்டு தையும், மண்ணையும், புல்லையும் அடையாளப்படுத்தி நடக்க அதீதத் திறமை வேண்டும்.

எதிரி எங்கும் நிற்கலாம் - இரவின் முழு இருட்டை ஊடறுத்து நகர்பவனைக் காட் டும் 'நைற்விசன்' என்னும் இரவுப் பார் வைச் சாதனங்களுடன், ஆங்காங்கே சிறு குழுவாக எம்மவரை எதிர்கொண்டு காத் திருப்பான் - எதிரி.

இருட்டுக் கவசத்தில் செல்லும் புலிவீரனை நோக்கி எதிரியின் துப்பாக்கி அதிரும்.

எதிர்பாராத வேளையில் எதிர் பாராத திசையிலிருந்து ரவை மழையாய்ப் பொழி யும் படுத்திருந்த அரக்கன் எழுந்துவிட்டது போல் தூங்கிக் கிடந்த எதிரி முகாம் உயிர் பெறும்.

எல்லாப் பொயின்ற்றுகளிலிருந்தும் துப் பாக்கிகள் இயங்கத் தொடங்கும் போது, ஆள் இல்லையென நினைத்திருந்த பொயின்ற்றில் இருந்தும் எல்.எம்.ஜி. சட சடக்கும்.




கவலைப்பட ஆரம்பிப்பான்.

வேவு வீரன் ஒருவனுக்கு மைன்ஸ் வெடித் துக் கால் இல்லையென்றால்? என்ற கேள்விக்கு, "துண்டுபட்ட காலை இறுக்கிக் கட்டிவிட்டு என்னைத் தூக்கினால் நான் காட்டிச் செல்வேன்" என உறுதியாகப் பதிலளித்தனர் எமது வேவு வீரர்கள்.

மிகக் குறைந்த ஓய்வுடன் தொடர்ச்சியான பணியில் ஈடுபடும் வாழ்வில், தொடர்ந்து பல நாட்களுக்கு நல்ல உணவோ ஆறுத லான தூக்கமோ அவர்களுக்கு வாய்ப் பதில்லை.

கையையும், காலையும் எறிந்துவிட்டு அவர்கள் படுத்திருப்பதைப் பார்த்தால் பாவமாய்த்தான் இருக்கும்!

இராத்திரி வேலை முடிந்து திரும்பி வந்து 'மைப்' வேலை எல்லாம் முடிந்து படுக்க நேரம் எப்படியும் பதினொரு மணியாகிப் போயிருக்கும்.

எழுப்பத்தான் வேண்டும், இப்ப எழுப் பினாத்தான் நேரம் சரியா வரும். எழும்பி எல்லா வேலையும் முடிந்து முதல் பார்த் ததில் உள்ள சந்தேகங்கள் எவை என வெடியைப் பரீட்சித்தபடி நகர வேண்டும்.

இராணுவ முகாமைச் சுற்றிய எல்லாப் பகுதியும் கண்ணிவெடிகளால் சூழப்பட் டிருக்குமென்பது சாதாரண விடயம்தான். ஆனால் நிலவில்லாத முழு இரவில், சத் தம் ஏதும் இன்றி இரகசியமாய், கண்ணி களின் ஊடே ஊர்ந்து செல்வது என்பது, அதுவும் இயந்திரத் துப்பாக்கியுடனும், பளீரென மின்னும் ஒளி விளக்குடனும் காத்திருக்கும் எதிரிக்கு முன்னே நகர்ந்து செல்வது என்பது சாதாரண விடயமல்ல.

படுத்திருந்து மெதுமெதுவாய் கையால் தொட்டுணர்ந்து, கண்ணிவெடி என நினைத்தெடுப்பது கல்லாய் இருக்கும் கல்லென நினைத்து கவனமின்றி எடுக்க அது கண்ணியாய் இருந்து தொலைக்கும்.

வேவு வீரர்களுக்கு கண்ணிவெடி வெடிப் பது காலில் மட்டுமல்ல.

இப்படித்தான் ஒருமுறை கம்பிச் சுருள் களுக்கிடையில் எதிரியின் மைன்ஸ் ஒன்று வெடிக்கிறது. வெளிச்சத்தில் தேடிய எதிரி முன்னேற முற்பட்ட போது, அழைத் துச் சென்ற பெண் போராளியை பத்திர பெரும் தேடொளிகள்.

யாழ். குடாவின் மற்றக் கரையில் இரவுப் பயிற்சியில் கள்ளமடிக்கும் பெடியளை றெயினிங் மாஸ்ரரிடம் பிடித்துக் கொடுக் கவல்ல பிரகாசமான - அந்தச் சூரியக் கண்கள் திறக்கும்போது, அங்குள்ள முழு நிலவும் பகலாகும்.

இருளின் கவசம் அகன்று பறக்கும்.

ஒரு சாதகமான பாதையைக் கண்டுபிடிக்க வாரக்கணக்காகப் போராட வேண்டும். நகரும் பாதையில் மனித நடமாட்டத்திற் கான எந்தத் தடயத்தையும் விட்டுவிடக் கூடாது. வாரக் கணக்கில் போராடிக் கண்டுபிடித்த பாதையில் ஒரு சிறு தடயத் தை விட்டாலும் எதிரி உஷாராகி விடுவான் அந்தப் பாதை அடைபட்டுவிடும். அங்கே ஒரு எல்.எம். ஜீயோ ஜீ.பி.எம். ஜீயோ புதிதாக முளைத்துவிடும்.

கும்மென்ற இருட்டில், அவர்களுக்கு மட்டும் தெரிந்த குறிப்புக்களைப் பார்த்து, மணிக்கணக்காக நடக்க வேண்டும். வெளிப்படையாகத் தெரியத்தக்க எந்த அடையாளத்தையும் வைக்காது, மரத் "நல்லவேளை டம்மிப்பொயின்ற் என்று - குறுப்பை கொண்டு போயிருந்தா, நல்ல குடவை குடுத்திருப்பான்" என நினைத் தபடி ஒழிக்கொண்டிருக்கையில், பராலைற் வெளிச்சம் போதாதென்று போகஸ் லைற் றும் அடிக்கத் தொடங்கியிருப்பான்.

க்கியூ, க்கியூ என்று தலைக்கு மேலாலும், பக்கத்தாலும் காற்றைக் கிழித்துச் செல்லும் ரவைகளுக்கிடையே ஓடிவந்து பார்த்தால், சகதோழனைக் காணவில்லை.

பயிற்சி முகாமில் கண்டது முதல் இன்று வரை - இதோ இப்போது வரை - ஒன்றாய் வாழ்ந்த நண்பன், ஒரு கோப்பையில் உண்டு, பாயில்லாமல் ஒரு பற்றையில் உறங்கி ஒன்றாய் வாழ்ந்த நண்பனைக் காணவில்லை...

இது எம் நிலந்தான். ஆனால், எதிரி முகா மின் உள்ளேயே... "உனக்கு காயம்பட்டு விட்டதா? எங்கேயடா நிக்குறாயென் தோழனே..." என்று குரல் வைத்துக் கூப்பிட முடியாது, காத்திருந்து பார்த்திருக் கும் வேளை கொடுமையானது.

இன்னொரு வேளை "நீங்கள் இதில் நில்

லுங்கள் நான் உள்ளே போய் கிளியர் பண்ணிக் கூப்பிடுகிறேன்" என்று சொல் லிப் போவான் ஒரு தோழன்.

மரத்துடன் மரமாய், பற்றையுடன் பற்றை யாய், புல்லுடன் புல்லாய், நிலத்துடன் நில மாய், நீருடன் நீராகக் கலந்து மணிக் கணக்காக, நாட்கணக்காக - காத்திருந்து பார்த்திருந்து மீளும் வேவு வீரனை எண் ணித் தோழர்கள் காத்திருப்பர் - வெளியே.

'என்ன இன்னும் காணவில்லை' என நினைத்திருக்கும் வேளை, உள்ளே போனவன் வந்ததும் உண்டு வராமலே விட்டதும் உண்டு.

தனிமையில் தன்னையும், கையில் உள்ள ஆயுதத்தையும், கழுத்தில் உள்ள குப்பியையும் நம்பி ஆயிரம் பகைவன் உள்ள எதிரிப் பாசறைக்குள் தன்னந் தனி யாய் நுழையும் வேவு வீரனின் எண் ணங்கள் எங்கெங்கோ ஓடும். நீரில் மூழ்கி, மழையில் தோய்ந்து, ஈரத்தில் ஊறி எல்லாம் ஈரமாய் நடக்கும் வேளை, அரப்புவைத்து முழுகவிட்டு, ஈரம் துடைத்து, தலைக்குப் பவுடரும் போட்டுத் தேய்த்துக் காயவிட்டு "சாப்பிடடா மோனை" என்று கொஞ்சும் அம்மா... நினைவுக்கு வராமலா போவாள்!

உடலெங்கும் நுளம்பு மொய்த்து கண், காது, மூக்கு என எங்கும் கடித்துத் தின்ன, கலைக்கவும் மாட்டாது குளிரில் நடுநடுங்கி வாடும்வேளை, சும்மா படுத்ததைக் கண்டு போர்வையால் மெல்லப் போர்த்து அன்பாய்த் தடவிப் போகும் அப்பா... நினைவுக்கு வராமலா போவார்?

அதற்கும் மேலாய், எல்லாவற்றிற்கும் மேலாய் இது எங்களின் நாடு, எம்மக் களின் பூமி என்ற நினைவு மேலோங்கும்.

கடுமையான பயிற்சியும், கடினமான முயற்சியுமே வெற்றிக்கு அடிப்படை என அடிக்கடி உரைக்கும் தலைவனின் நினை வும் மேலோங்கும்.

"நீ இதில் நில், நான் உள்ளே போகிறேன் வெடிச்சத்தம் கேட்டால் நீ திரும்பிப் போ - நான் வருவேன்" என்று கூறிவிட்டுச் சென்று, வராமலே போய்விட்ட உயிர்த் தோழன் நினைவுக்கு வருவான்.

மெல்ல நகர்கையில் தடக்கி விழுத்திய வயலின் வரம்பு, 'இப்ப முதல் உழவு உழு திருக்க வேணும்...' என்ற நினைப்பில் அவனை ஆழ்த்தும்.

சுதந்திரமாய் நீந்திக் குளித்த குளமும், ஏறிக் குதித்த மாமரமும் இன்று பகை வனின் பாசறையாய் ஆனதை எண்ணி நெஞ்சு கனக்கும்.

எங்களது தாய் மண்ணைப் போலவே அழகான யாழ்ப்பாணக் கடலேரி! அழ கான அந்தக் கடலேரியின் உள்ளேதான் எத்தனை கொடுமையும், துயரமும்?

நேரம் நீண்டு செல்லும். தண்ணீரில் நடந் தும், மிதந்தும், வலித்தும் செல்லும் வேவு வீரனின் எண்ணங்கள் எங்கெங்கோ சுற்றும்.

கத்தியுடன் வந்த பகைவனைப் பார்த்துக் கும்பிட்ட அந்த அம்மா "என் அம்மாவைப் போலொரு அம்மா" - வெட்டுண்ட தலை யுடன் இந்தத் தண்ணீரில் தானே மிதந் தாள்?

முத்தமிட்டு 'டாட்டா' காட்டிய சின்னவள் சொன்ன பொம்மையுடன் வந்த அப்பா - "என் அப்பாவைப் போலொரு அப்பா" - இந்தத் தண்ணீரில்தானே மிதந்தார்? "அப்பா எப்ப பொம்மையுடன் வருவார்?" என்ற பிள்ளையுடன் அம்மா கண்ணீரில் குளித்திருந்த போது, அப்பா இந்தத் தண் ணீரில்தானே கரைந்தார்?

எங்களது சொந்தங்களும் உறவுகளும் கலந்து கரைந்த உப்புநீர், எம்மக்களின் குருதி கலந்த நீர் குருதியுடன் உயிரும் கலந்த நீர். எம் மக்களின் குருதியும் உயிரும் கலந்ததாலோ அந்தத் தண் ணீரில் நனைகையில் புதிய உணர்வு பிறக்கிறது!

"மேனியைத் தழுவும் தண்ணீரைத் தடவி, வாயில் எடுத்து மெதுவாய் உமிழும் போது... உப்புக் கரிக்காது"

யாழ். நீரேரிக்கும் எம் வேவு வீரர்களுக் கும் இடையேயான உறவு ஆழமானது. அன்பு கொள்வதும் கோபப்படுவதுமாய் அவர்களின் நட்பில் பல கதைகள்...

மாலை மென்னிருட்டில், தூரத்தே தெரியும் வெளிச்சத்தை பார்த்தபடி இடுப்பளவு தண்ணீரில் நடக்கத் தொடங்கும் போது, அந்தக் கடல் மகள்... எங்கள் யாழ்ப்பாண நீர்நங்கை அற்புதமான அழகிதான்!

கூட்டமாய்த் துள்ளும் திரளியும், வரிசை யாய்ப் பறக்கும் கொக்குகளுமாய் அழகை ரசித்தபடி நடக்கையில், வழிமாறி வந்த பெரிய மீன் ஒன்று காலில் இடற, என் னவோ ஏதோவென்று பாய்ந்து விழு பவனை எல்லோரமாய்ச் சேர்ந்து தாட்டு மிதத்தி...

'றெக்கி' வேலை முடிந்து பசியும் களைப்பு மாய் உடல் சோர்ந்து, அதிகாலையில் பிறை நிலவைப் பார்த்தபடி திரும் புகையில், அவன் பேசாமல்தான் வரு வான்.

என்னில் என்ன கோபமோ என்று, கடல் மகள் மெல்லக்குமுறி ஆர்ப்பரிக்க, இடுப் பளவாய் இருந்த நீர்மட்டம் மேலேறி, மேலே மேலே ஏறி, நுனிக்காலுக்கும் எட் டாத் தண்ணீராய் மேலெழுந்து நிற்கை யில், கடல் மகளின் காதல் போய் எம்வீரர் தத்தளிக்கத் தொடங்குவர்.

முகாம் வேவுப்பணியை வெற்றிகரமாக நிறைவு செய்துகொண்டு திரும்பி வந்த எம் வேவு அணியினர், கடலில் தம் தோழனை இழந்த சோகத்துடன், கடல் மகள் மேல் கோபத்துடன் மீண்டதும் உண்டு.

பௌர்ணமியும் அமாவாசையும், நிலவின் உதயமும் மறைவும் கடல் நீரேரியில் நிகழ்த்தும் மாற்றம் அற்புதமானது.

நிலவின் உதயத்தில் அமைதியாய் இருக் கும் கடலேரி. நேரம் செல்லச் செல்ல, பெருங்கடலில் இருந்து மெதுவாக உள்ளே வரத் தொடங்கும் நீரோட்டம்.

ஆளை இழுக்கும் வேகம் பெற்று - உச்ச வேகம் பெற்று, நீர்மட்டம் உயர்ந்து மெது வாய்த் தணியும்.

பின்னர் நிலவு மறையத் தொடங்க கொஞ் சம் கொஞ்சமாய் கடலுக்குத் திரும்பும் தண்ணீர் வேகம் பெற்று, உச்ச வேகம் பெற்றுத் தணிந்து, நிலவின் அடுத்த உதயத்தைப் பார்த்துத் தணித்திருக்கும் நீரோட்டம்.

பூமிக்கும் சந்திரனுக்கும் இடையேயான ஈர்ப்பு விசையானது, நீர்மட்டத்திலும், நீரோட்டத்திலும் ஏற்படுத்தும் ஜாலத்தைத் துல்லியமாய் ரசிக்கலாம் யாழ். கட லேரியில்.

இந் நீரேரி புலிவீரர்களுடன் மட்டுமல்ல, எம் தாயகத்தின் நிலத்துடன் மட்டுமல்ல, எம்மினத்தின் நீண்ட வரலாற்றுடனும் பின்னிப் பிணைந்தது.

நீண்ட வரலாற்றின் பல்வேறு காலங் களில், அந்நிய ஆக்கிரமிப்பை எதிர் கொண்டது எமது மண். போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் ஆக்கிர மித்ததும், பின்னர் அதிகார மாற்றம் ஏற் பட்டு ஈழத்தமிழர் சிங்களவர்களின் அடிமைகளாய் கைமாற்றமானதும், தொடர்ந்தும் தமிழர்கள் அடிமைகளாய் இருக்க மறுத்துப் போராடியதால் சிங் களவர்கள் தமது அதிகாரத்தை இந்தியர் களிடம் கைமாற்றிக் கொடுத்ததும், இந் தியர் சிங்களவர்களிடமே அதிகாரத்தைக் கொடுத்துவிட்டுப் போய்ச் சேர்ந்ததும் என, தமிழீழ மக்கள் மீதான ஆக்கிரமிப்பு நீண்ட பெரும் தொடர் வரலாறு.

போர்த்துக்கீசர் கையில் யாழ்ப்பாணமும், ஒல்லாந்தர் கையில் கொழும்புடன் பிற பகுதிகளுமாகப் பிடிபட்டிருந்ததாம். போர்த்துக்கீசர் கையிலிருந்த யாழ்ப் பாணத்தைப் பிடிக்க வந்து மன்னாரில் தரித்திருந்த ஒல்லாந்துப்படை, அடம்பன் வழியாக பூநகரி வந்து, பூநகரியில் இருந்து இந்த 'யாழ் நீரேரி'யூடாகச் சாவகச்சேரி வந்து, பின்பக்கத்தால் போர்த்துக்கீசரை மோதி அழித்து, யாழ்ப்பாணத்தைப் பிடித்து தமிழர் மீதான அடிமைக் கை மாற்றம் நிகழ்ந்ததாம்.

எம்மை அடிமைகொள்ள வந்த அந்நியப் படை நடந்த அதே நீரேரியில், எம்மக் களை விடுவிக்க இன்று எம் வேவு வீரர் கள் நடக்கிறார்கள்.

எம்மை அடிமைகொள்ள வந்த பகைவன் நடந்த பாதையில், எம் நாடு எமக்கே சொந் தம் என்ற இறுமாப்புடன் எம் வீரர்கள் நடப்பது கண்டு, யாழ். நீர்நங்கை சிரிக் கிறாள்.

அன்று பகைவனைப் பார்த்து அஞ்சி ஒடுங்கி, அழுது நடுநடுங்கி வாழ்ந்த எம் பெண்டிரின் பேத்தியின் பேத்திகள், இன்று நிமிர்ந்த நெஞ்சுடன் வேவுப் புலி வீரராய்ப் பகைவனைத் தேடிப் புறப்படும் காட்சி கண்டு, யாழ். நீர்நங்கை சிரிக்கிறாளோ!

அந்த யாழ். நீர்நங்கை எல்லாம் அறிந் தவள். பகைவனின் கரையில் ஏறிய புலி களில் எதிரியின் துப்பாக்கி தீ உமிழ்ந் ததும், பக்கம் ஒருவராய் நீரில் வீழ்ந்து சரிந்த எம் வீரரில் ஒருவனுடல் பகைவன் கையில் வீழ்ந்ததும்.

"அது எது" வென நெருங்கிய எம் மீனவர், "ஐயோ எம்பிள்ளை" எனத் துடித்துத் தூக் கியதும் இந்தக் கடல்மகள் அறிவாள்.

தூரத்தே எதிரி சுடும் சத்தம் கேட்டு, அது எதற்கோ...? எம்மவரைக் கண்டு சுட் டானோ...? போன எம் தோழன் வீழ்ந்து விட்டானோ...? எனக் கலங்கிக் காத் திருந்து, காலைவரைக் காத்திருந்து...

மிதந்து வந்த தோழனை அள்ளி எடுத் தழுததும், மீண்டு வந்த தோழனை அணைத்து ஆடி மகிழ்ந்ததும், இந்தக் கடல்மகள் அறிவாள்.

வெற்றிலைக்கேணி, வளலாய், மண் கிண்டிமலை, பூநகரி என எம் ஒவ்வொரு வெற்றிக்கும் வித்திட்டவர்கள் எம் வேவு வீரர்கள்.

எம் தாயகத்தைச் சிதைத்தழிப்போம் எனச் சபதமிட்டு, யாழ் நகரைப் பிடிக்கவெனத் திட்டமிட்டுச் செயற்படுத்த முனைந்த வட பகுதியின் படைத்துறைத் தலைமையை, அராலியில் வைத்து அழித்தொழித் தவர்கள் எம் வேவு வீரர்களே.

குறிப்பாக தமிழீழ நாட்டின் பெருவெற் றியாய் அமைந்த 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கையில் வேவு வீரர்களின் பங்கு மகத்தானது.

வெற்றிலைக்கேணி வெற்றிக்கு வித்திட்ட சிவாஜி.

மண்கிண்டிமலையின் வரலாற்றுக்கு வழி காட்டிய றொகான், ரமணன், பனம்பாரன்.

பதவியா கொங்கேவேயவின் வெற்றிச் சிற்பிகள் மழலேஸ், நித்தி.

பூநகரி கேணல் மீதான கண்ணிவெடிக்கு தர்மேந்திராவுடன் கண்ணிவெடி சுமந்த குருவேல் என்று, பூநகரி வெற்றியில் வித்தான வேங்கைகள் பற்பலர்.

அவர்களது முயற்சியால், அர்ப்பணிப்பால் இன்று எம் தாயகம் வெற்றிக்களிப்பில் மிதக்கிறது.

வீழ்ந்த வேங்கைகளின் தோழர்கள் தம் புதிய இலக்குகளை நோக்கி, அதே இருளின் கவசத்தில், அதே தேடொளிக்கு மறைந்து நகர்கின்றார்கள். இலக்கு புதியது, கையில் உள்ள ஆயுதம் புதியது, அவர்களது அனுபவமும் புதியது.

ஆனால் நினைவில் மட்டும் அவர்களது அதே தோழர்களும், அதே இலட்சியமும் தான்!

**கப்டன் ராமன்**



ஏரம்பமூர்த்தி டேவிட்
கன்னங்குடா, மட்டக்களப்பு
25.03.1974 - 05.01.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, கல்முனைப் பகுதியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது வீரச்சாவு.

**லெப்டினன்ட் தமிழ்மறவன் / வீரபாண்டியன்**



மேகவண்ணன் பூசங்கர்
ஒலுமடு, வவுனியா
27.05.1975 - 24.08.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, ஞானிமடக் கடற்படை முகாமை வேவு பார்க்கச் சென்றபோது வீரச்சாவு.

**லெப்டினன்ட் மழலேஸ்வரன் / மழலேஸ்**



செல்லத்தம்பி விநாயகர்
நெடுங்கேணி, முல்லைத்தீவு
12.06.1972 - 24.08.1993

வன்னியில் நடாத்தப்பட்ட கோன்கோவேய மினிமுகாம் தகர்ப்பிற்கு சிறப்பாக வேவு பார்த்தமைக்காகத் தமிழீழ தேசியத் தலைவரிடம் பரிசு பெற்றவர்.

மண்கிண்டிமலை முகாம் மீதான "இதயபூமி 01" தாக்குதலுக்காக சிறப்பாக வேவு பார்த்து, வழிகாட்டியாகவும் செயற் பட்டவர்.

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, ஞானிமடப் பகுதிக்கு வேவு பார்க்கச் சென்றபோது வீரச்சாவு.

**லெப்டினன்ட் ரட்ணேஸ் / ரட்ணம்**



சிறிதர் உமாச்சந்திரன்
பிரதான வீதி, மன்னார்.
07.03.1973 - 17.08.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, கல்முனைப் பகுதியிலுள்ள பந்தலடி முகாமில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது வீரச்சாவு.

**லெப்டினன்ட் கெங்காதரன் / கங்கா**



கண்ணையா முத்துக்குமார்
பாரதிபுடம், மட்டக்களப்பு
03.07.1970 - 22.02.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, பள்ளிக்குடாப் பகுதியை வேவு பார்க்கச் சென்றபோது வீரச்சாவு.

**லெப்டினன்ட் ரவிக்குமார்**



சிவகுரு யுவராஜா
கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு
19.09.1970 - 30.05.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, ஞானிமடப் பகுதி வேவு வேலையை திறம்படச் செய்தவர். பின்னர் வேவுக்காக சென்றபோது மைன்ஸ் வெடித்ததால் குப்பி கடித்து வீரச்சாவு.

**லெப்டினன்ட் பத்மசீலன்**



அழகையா காந்தரட்ணம்
ஏறாவூர், மட்டக்களப்பு
09.03.1973 - 15.06.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, ஞானிமடப் பகுதியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது வீரச்சாவு.

**லெப்டினன்ட் இளந்தேவன் / இளங்கோ**



தர்மலிங்கம் சிறிதரன்
பூநகரி, மன்னார்
15.07.1970 - 07.091993

இவர் 1992ம் ஆண்டு இடம்பெற்ற சங்குப்பிட்டி - பூநகரி பாதையிலுள்ள "றவுண்டபோட்" பகுதியிலான தாக்குதலுக்காக சிறப்பாக வேவு பார்த்தவர்.

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி பல பகுதிகளையும் திறமையாக வேவு பார்த்தவர். பூநகரி முகாமினுள் ஊடுருவி வேவு பார்த்துவிட்டு திரும்பும்போது வீரச்சாவு.

**லெப்டினன்ட் செல்வன் / ஆனந்தன்**



முருகேசுப்பிள்ளை சரவணபவன்
கலட்டி, யாழ்ப்பாணம் (காரைநகர்)
29.09.1975 - 09.091993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, வாடியடி சந்தியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, எதிரியின் யுத்த டாங்கித் தாக்குதலில் வீரச்சாவு.

**கப்டன் கதிரவன் / றொகான்**



வீரப்பு சந்திரன்
சேமமடு, வவுனியா
31.07.1973 - 10.09.1993

லெப். கேணல் சுபன் தலைமையிலான பள்ளிக்குடாப் பகுதி 62 காவலரண்களின் தகர்ப்பில் சிறப்பாக வேவு பார்த்தமைக்காக தமிழீழத் தேசியத் தலைவரிடம் பரிசு பெற்றவர்.

மண்கிண்டிமலை மீதான "இதயபூமி 01" நடவடிக்கைக்காக திறமையாக வேவு பார்த்து, வெற்றிக்காகப் பெரும் பங்காற்றியவர்.

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, கௌதாரிமுனைப் பகுதியில் வேவு பார்க்கச் சென்றபோது வீரச்சாவு.

**2ம் லெப்டினன்ட் பனம்பாரன்**



தங்கராசா சதீஸ்வரன்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
20.04.1976 - 09.09.1993

மண்கிண்டிமலை மீதான "இதயபூமி 01" தாக்குதலுக்காக வேவு பார்த்தவர்.

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, வாடியடி சந்தியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, எதிரியின் யுத்த டாங்கி தாக்குதலில் வீரச்சாவு.

**லெப்டினன்ட் சிவம்**



சின்னையா கமலேஸ்வரன்
கோப்பாய், யாழ்ப்பாணம் (வளலாய்)
17.05.1969 - 09.09.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, வாடியடி சந்தியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, எதிரியின் யுத்த டாங்கி தாக்குதலில் வீரச்சாவு.

**கப்டன் ஆராமுதன் / நிரேஸ்**



குலவீரசிங்கம் தேவபாலன்
மீசாலை, யாழ்ப்பாணம்
16.09.1972 - 23.09.1993

வளலாய் இராணுவ வேலியைத் தாக்கியழித்தமைக்கான வேவு, மாதகலில் இடம்பெற்ற பதுங்கித் தாக்குதலுக்கான வேவு.

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி முகாமை வேவு பார்த்துவிட்டுத் திரும்புகையில் சங்குப்பிட்டி - கேரதீவு கடலில் வீரச்சாவு.

**கப்டன் அருளரசன்**



கணேசன் கருணாநிதி
களுதாவளை, மட்டக்களப்பு
10.09.1974 - 13.10.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, பள்ளிக்குடா முகாமையும், கடற்கரை பகுதியையும் சிறப்பாக வேவு பார்த்து பூரணப்படுத்தியவர். பள்ளிக்குடா பகுதிக்குள் வேவுக்காக ஊடுருவிச் செல்லும்போது வீரச்சாவு.

**லெப்டினன்ட் செங்கண்ணன் / சத்தியராஜ்**



முருகேசு திராவிடமுத்து
15ம் கிராமம், அம்பாறை
09.11.1973 - 24.10.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, கௌதாரிமுனைப் பகுதியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது வீரச்சாவு.

**லெப்டினன்ட் நிலவேந்தன் / நடேஸ்வரன்**



சுப்பிரமணியம் கண்ணன்
புலோலி, யாழ்ப்பாணம்
26.05.1974 - 11.11.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, ஞானிமடம் முன்னணிக் காவலரண்களை வேவு பாத்ததுடன், தாக்கல் அணிக்கான வழிகாட்டியாக்க வீரச்சாவு.

**கப்டன் நிரஞ்சன்**



பாபு இராஜசிங்கம்
வற்றாப்பளை, முல்லைத்தீவு
25.07.1972 - 12.11.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக கறுக்காய் பகுதியிலும், நாகதேவன்துறையிலும் வேவு நடவடிக்கையிலும், தாக்குதல் அணிக்கான வழிகாட்டியாக செயற்பட்டவர்.

**கப்டன் துளசிராம்**



சின்னமணி தாமரைச்செல்வி
கிளிநொச்சி (பருத்தித்துறை)
17.08.1974 - 11.11.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி முன்னணிக் காவலரண் பகுதியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன், ஆண்களின் தாக்குதல் அணிக்கு வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்களில் இருவரும் ஒருவர்.

**லெப்டினன்ட் திண்ணியன் / ரங்கா**



கணபதிப்பிள்ளை கருணாநிதி
களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு
13.08.1971 - 24.10.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, கௌதாரிமுனைப் பகுதியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது வீரச்சாவு.

**லெப்டினன்ட் நித்தி**



துரைராஜசிங்கம் சுந்தரேஸ்வரன்
நெடுங்கேணி, முல்லைத்தீவு
25.02.1975 - 30.10.1993

மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீதான "இதயபூமி 01" நடவடிக்கைக்கான வேவு.

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக்காக பூநகரி, கௌதாரிமுனைப் பகுதி இராணுவ முகாம் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது வீரச்சாவு.

**கப்டன் குருவேல்**



சற்குருநாதன் செல்வநேசன்
பாரியாரிகண்டல், மன்னர்
16.12.1970 - 11.11.1993

பூநகரி பகுதியில் ஊடுருவி கேணல் சித்திரப் புஞ்சிகேவா மீது நடாத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலுக்காக தமிழீழத் தேசியத் தலைவரிடம் பரிசு பெற்றவர். லெப். கேணல் சுபன் தலைமையில் நடாத்தப்பட்ட பள்ளிக் குடா காவலரண்கள் 62 மீதான வேவு.

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக் காக பூநகரி, வில்லடி முகாம் மீதான வேவுடன் வழிகாட்டியாகவும் சென் றவர்.

**லெப்டினன்ட் மகிழினி**



அருள்வாசகம் சகாயபாமா
செபஸ்ரியார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
30.04.1974 - 11.11.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக் காக பூநகரி, வில்லடி முகாம் முன்னணிக் காவலரண் பகுதியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன், தாக்குதல் அணிக்கு வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்.

**லெப்டினன்ட் மைனா / மணி**



செல்லையா வசந்தி
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு
09.10.1976 - 11.11.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக் காக பூநகரி, வில்லடி முகாம் முன் னணிக் காவலரண்கள் மீதான வேவிலும், தாக்குதல் அணிக்கான வழி காட்டியாகவும் செயற்பட்டவர்.

**லெப்டினன்ட் இளவரசி**



செல்லையா கலாநிதி
ஜெயந்திநகர், கிளிநொச்சி
24.08.1968 - 11.11.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக் காக பூநகரி, வில்லடி முகாம் முன் னணிக் காவலரண்கள் மீதான வேவிலும், தாக்குதல் அணிக்கான வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்.

**லெப்டினன்ட் அழகநம்பி / ரோமியோ**



கந்தசாமி செந்தில்நாதன்
கொக்குவில், யாழ்ப்பாணம்
17.09.1976 - 13.11.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக் காக பூநகரி, ஞானிமடம் பகுதியில் வேவு பார்த்ததுடன், தாக்குதல் உதவி அணிக்கான வழிகாட்டியாகவும் செயற் பட்டவர்.

**லெப்டினன்ட் செய்யவன் / நேரு**
கணபதிப்பிள்ளை தங்கரூபன்
பெரியப்பளை, யாழ்ப்பாணம்
13.11.1993

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக் காக பூநகரி முகாம் வேவு நடவடிக் கையிலும், தாக்குதல் அணிக்கான வழிகாட்டியாகவும்



**லெப்டினன்ட் ரமணன்**



சிவஞானம் சிவபாலன்
பன்னாலை, யாழ்ப்பாணம்
01.04.1975 - 13.11.1993

மண்கிண்டிமலை முகாம் மீதான தகர்ப்பிற்கான "இதயபூமி 01" நடவடிக்கைக்கான வேவு நடவடிக்கையில் ஈடுபட்டவர்.

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக் காக வேவு நடவடிக்கையில் ஈடுபட்டு, தாக்குதல் அணிக்கு வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்.

**மேஜர் செம்பியன் / சிவாஜி**



சின்னத்தம்பி குமரலிங்கம்
செம்பியன்பற்று, யாழ்ப்பாணம்
25.02.1974 - 13.11.1993

கட்டைக்காடு மினிமுகாம் தகர்ப்பிற் கான வேவிற்காக தமிழீழத் தேசியத் தலைவரிடம் சிறப்புப்பரிசு பெற்றவர். வளலாய்ப் பகுதியில் இராணுவ வேலி யைத் தாக்கி அழிப்பதற்கான வேவு.

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக் காக பூநகரி, பள்ளிக்குடாப் பகுதி வேவு பின்னர் வில்லடி பிரதான கட்டளை முகாம் மீதான வேவுடன் பிரதான வழிகாட்டியாகவும் சென்றவர்.

**கப்டன் முகுந்தன் / கிருமானி**



பிரான்சிஸ் றொபேட் வின்சன்
குருநகர், யாழ்ப்பாணம்
29.08.1973 - 30.11.1992

"ஒப்பரேசன் தவளை" நடவடிக்கைக் காக பூநகரி, கல்முனைப் பகுதியை வேவு பார்த்துவிட்டுத் திரும்பும்போது வீரச்சாவு.

"கெரில்லாப் போர் முறையில் சிறிய அளவிலான தாக்குதல்களை நடத்தி வந்த நாம், இன்று பாரிய படைத்தளங் களைத் தாக்கி அழிக்கும் சக்தி பெற் றவர்களாக வளர்ச்சி கண்டுள்ளோம். இந்த அபாரமான முன்னேற்றத் திற்கு வேவுப்பிரிவினரின் பங்கு முக்கிய மானது. மிகவும் கஸ்டமானதும், மிகவும் சாதுரியமானதும், மிகவும் ஆபத்து







நிறைந்ததுமான வேவுப் பணியில் ஈடுபடும் போராளிகள் தரும் தகவல்களைக் கொண்டே தாக்குதல் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன் தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்த முடிகின்றது. வேவு வீரர்களின் துணிகர சாதனைகள் மூலமே, நாம் பூநகரியில் பெரும் சமர் புரிந்து வெற்றி யீட்ட முடிந்தது.

வேவுப்பணியில் ஈடுபடும் போராளி களின் ஒவ்வொரு நிமிடமும் ஆபத்து நிறைந்தது உயிருக்கு உத்தரவாதமில் லாதது. இந்தப் பணியின் போது எத் தனையோ அற்புதமான போராளி களை நாம் பறிகொடுத்துவிட்டோம். இந்த அர்ப்பணிப்புக்களின் பய னாகவே நாம் போர்முனைகளில் பெரும் வெற்றிகளை ஈட்டிக்கொள்ள முடிகின்றது." - தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்.

நினைவுப்பகிர்வு:
ச.பொட்டு
புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

நன்றி: விடுதலைப்புலிகள் இதழ் (தை, 1994)




AFFORDABLE REFRIGERATION SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install used &
new Walk in Cooler, Walk in Freezer
Kapil: 647.515.8643
kapil.afr@gmail.com


New RANGANAS JEWEL HOUSE
நியூ ரங்கனாஸ் நகைமாடம்
NEW RANGANAS JEWEL HOUSE
SINCE 1996
கனடா வரலாற்றில்
எங்கும் கண்டிடாத
சேவை
சிங்கப்பூர், டுபாய் நகைகள்
மிகவும் மலிவான விலையில்
Singapore, Dubai Jewellery
for Lowest Price
1%
முதல் தங்க
நகை
அடைகு
சேவை
Markham & Steeles
(Yellow Building)
திருமணத்துக்கான தாலிக்கொடி
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ள கனடாவில்
நம்பிங்கை நாணயம் கைராசி
ஒரே இடம் நியூ ரங்கனாஸ்
Tel: 647.702.2159
647.947.2864
New RANGANAS JEWELLERY
647-947-2864
நியு ரங்கனாஸ் நகைமாடம்
6055 Steeles Ave., E. Unit C102, Scarborough ON M1X 0A7
www.newranganasjewelhouse.com kprranga@hotmail.com


MORTGAGE
Residential/Commercial/Industrial
& Investment Properies
SUBRA MORTGAGES INC.
1st, 2nd & 3rd Mortgages
Purchase
Refinance
Renewal
Switches
Equity Line of Credit
Pre-Approvals
Self-Employed
Multi Rental Properties
New Immigrants
Mortgage In Any Situations
WE DEAL WITH ALL BANKS
LOAN
LINE OF CREDIT
MORTGAGE ALLIANCE
Independently Owned & Operated
Lic. No: M15001465, Brokerage No: 10530
Corp Off: 2005 Sheppard Ave E, Suite 200
North York, ON M2J 5B4
NESAN
416-908-5656
www.subra.com or www.nesan.ca
email:mortgage@subram.com
Office: 1585 Markham Rd, Unit 406, Scarborough ON M1B 2W1
Off: 416-660-5656/Fax: 647-351-3099/ Toll: 1-844-878-2721




# திருமலை – மூதூர் கடற்கரைச்சேனைப் படுகொலை 08, 09, 10. நவம்பர் 1985

1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எட்டாம், ஒன்பதாம், பத்தாம் திகதிகளில் கறடபடையினர், விமானப் படையினர், இராணுவத்தினர் கூட்டாக இணைந்து மூதூர் கடற்கரைச்சேனைப் பகுதி மீது தாக்குதல் நடத்தினார்கள். இத்தாக்குதலில் தரை வழியாற் சென்ற இராணுவத்தினரால் ஆலயங்களில் தஞ்சமடைந்திருந்த பொதுமக்கள் மோசமாகத் தாக்கப்பட்டார்கள். வீடுகளிலிருந்த பலர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார்கள். உயிரிழந்தவர்களின் உடல்களை இராணுவத்தினர் வீடுகளுடன் சேர்த்து எரியூட்டினர். ஆலயங்களிற் தங்கியிருந்த எழுபதிற்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்து அழைத்துச் சென்றனர். இவர்கள் இதுவரை திரும்பி வரவில்லை. மூன்று நாள் தாக்குதலில் இருபதிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். பலர். காயமடைந்திருந்தனர். நூறிற்கும் மேற்பட்ட வீடுகள் எரிக்கப்பட்டன.

# தம்பலகாமம் படுகொலை 12.11.1985

1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பன்னிரண்டாம் திகதி திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமத்தில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஒன்பது தமிழர்கள் சுடப்பட்டனர். தம்பலகாமத்தில் இதே இடத்தில் நவம்பர் மாதம் இருபத்தாறாம் திகதி (1985) அன்று இராணுவத்தினர் மூன்று விவசாயிகளைச் சுட்டனர். பின்னர் அவர்கள் எரியூட்டப்பட்டனர்.

தம்பலகாமம் கோயிலடியில் நடந்த வேறொரு சம்பவதில் ஐந்து தமிழர்கள் கடையினுள் வைத்து உயிருடன் எரிக்கப்பட்டனர். இதில் குபேந்திரன், நவரட்ணம் என்போர் உயிரிழந்தனர். மிகுதி மூவரும் எரிகாயத்துடன் மீட்கப்பட்டனர்.

# கந்தளாய் படுகொலை 09.11.1985

கந்தளாய்ப் பிள்ளையார் கோயிலடியில் வசித்த திரு. மயில்வாகனம் என்பவரது வீட்டிற்கு 09.11.1985 அன்றிரவு ஆயுதம் தரித்த சிங்கள இராணுவ படைகள் சென்று வீட்டிலிருந்த ஆறு பேரையும் ஆயுத முனையில் கடத்திச் சென்றார்கள். பின்னர் இவர்களின் உயிரற்ற உடல்கள் அல்லை வீதியில் நான்காம் கட்டைப் பகுதியில் மிகவும் மோசமான நிலையிற் காணப்பட்டன. கடத்திச் செல்லப்பட்ட ஆறு பேரில் மயில்வாகனத்தின் இரண்டு மகள்களும் அடங்குவர். இவர்கள் இரண்டு பேரின் பிரேத பரி சோதனையின் படி இவர்கள் மோசமான முறையில் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்ட பின்னரே படுகொலை செய்யப்பட்டடுள்ளார்கள் என்பது தெரியவந்தது.



# மூளாய் வைத்தியசாலைப் படுகொலை 05.11.1987






மூளாய்க் கிராமம், யாழ். மாவட்டத்தில் வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேசசெயலர் பிரிவினுள் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு மருத்துவ வசதியினை வழங்கும் இடமாக மூளாய் வைத்தியசாலை அமைந்துள்ளது.

பெரும் இன்னல்களுக்கும், பெரும் மருத்துவ நெருக்கடிகளுக்கும் மத்தியில் வாழ்ந்த மூளாய்க் கிராமத்து மக்கள், 1987 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி சிகிச்சைக்காக மூளாய் வைத்தியசாலையில் இருந்தபோது இந்திய இராணுவத்தினரின் பீரங்கித் தாக்குதலிற்குள்ளாகினர். ஐந்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்தார்கள். மருத்துவமனையும் சேதமடைந்தது.

05.11.1987 அன்று மூளாய் வைத்தியசாலைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்

1. நாகர் மகேந்திரன் (44)
2. கந்தையா மகாதேவன் (48)
3. கந்தசாமி சிறீதரன் (18)
4. ஐயாத்துரை பேரின்பநாயகம் (58)
5. யோசேப் யோகராாசா (35)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# நெடுங்கேணிச் சந்திப் படுகொலை 11.11.1987

வவுனியா மாவட்டத்தின் வடக்கே அமைந்துள்ள வவுனியா வடக்குப் பிரதேசசெயலர் பிரிவின் பிரதான நகரமாக நெடுங்கேணி உள்ளது. இங்க வாழ்கின்ற மக்கள் பெரும் பாலானோர் விவசாயத்தையும் கூலித்தொழிலையுமே பிரதான தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் விடுதலைப்புலிகளிற் கும் இந்திய இராணுவத்திற்கும் இடையில் மோதல் தொடங்கிய பின் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள ளியவளை, தண்ணீரூற்றுப் போன் ற பிரதேசங்களில் இந்திய இராணு வத்தின் இராணுவ நடவடிக்கை நடைபெற்ற போது, அக்கிராமங் களைச் சேர்ந்த மக்கள் பெருமள வானோர் இடம்பெயர்ந்து நெடுங் கேணியிலும் தஞ்சம் புகுந்தனர். இவ்வாறு தஞ்சமடைந்த மக்கள் பாடசாலைகள், கோயில்கள், பொது இடங்கள் என்பவற்றில் தங்கினார் கள். மக்கள் செறிவாகத் தங்கியி ருந்த கட்டிடங்கள் மீது இந்திய இராணுவத்தின் உலங்குவானூர் திகள் நடத்திய றொக்கற் தாக்குத லில் பதினைந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததுடன், இருபத்தைந்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

**நெடுங்கேணி, மாறாஇலுப் பையைச் சேர்ந்த ட. தவமணி சம்பவம் பற்றி விபரிக்கையில்:**

“என்னுடைய மகள் நந்தினிக்கும் சுகயீனம் என்ற காரணத்தால் நெடுங்கேணி வைத்தியசாலையில் தங்கி நின்று சிகிச்சை பெறவேண்டி வந்தது. அதனால் நானும் அங்கு நின்றிருந்தேன். அன்றைய நாள் மாலை 05 மணியிருக்கும் இந்திய இராணுவத்தின் எம்.ஐ.ரக உலங்கு வானூர்தி ஒன்று வைத்தியசாலை யைச் சுற்றி வந்தது. அங்கு கூடி நின்ற மக்கள் அனைவரும் வைத் தியசாலை என்பதால், குண்டு போட மாட்டார்கள் என்ற எண்ணத்தில் வைத்தியசாலைக்குள் ஓடி வந்தார் கள். அதை அவதானித்த உலங் குவானூர்தி வைத்தியசாலையின் முன்பக்கத்தில் குண்டுகளை வீசி யது. இதனால் குண்டுச் சன்னங்கள் எங்கும் பட்டு கண்ணாடி யன்னல் கள் அனைத்தும் நொருங்கி வீழ்ந் தது. அந்த நேரந்தான் எனக்குத் தலையிற் காயம் பட்டது. இதன் போது காயமடைந்தவர்கள் விழ ஏனையோர் கலவரப்பட்டு ஓடினார் கள். மகளைக் கூட்டிக்கொண்டு பின்புறமாக ஓடலாமென எத்தனித்த போது மகளின் காலால் இரத்தம் வழிவதை அவதானித்தேன். அத் துடன் மகளும் மயக்கமுற்று வீழ்ந் துவிட்டார். பின்னர் துணைக்கு எவரும் இல்லாத நிலையில் கை யில் அகப்பட்ட துணியால் நானே மகளின் காலுக்குக் கட்டுப்போட்டது டன், எனது காயத்திற்கும் கட்டுப் போட்டேன். வைத்தியசாலையி லிருந்த மருத்துவர்கள் அனை வரும் பாதுகாப்புத் தேடி ஓடிவிட் டதால் மருந்து கட்டக்கூட ஒருவரும் இருக்கவில்லை. இதனால் தனியார் மருத்துவமனை வைத்தியரின் உதவியுடன் இரவு 10:00 மணி யளவில் எங்களுக்கு மருந்து கட்டப் பட்டது. அதன்பின்னர் அடுத்தநாள் ஊரடங்குச் சட்டம் போடப்பட் டிருந்ததால், வாகனங்கள் எதுவும் இருக்கவில்லை. பின்னர் பயணி கள் பேருந்து ஒன்றின் மூலமாக வவுனியா மருத்துவமனையிற் சேர்க்கப்பட்டோம். அதன் பின்னர் மூன்று மாதங்கள் தங்கிச் சிகிச்சை பெற்றோம். தற்போது கூட எனது தலையில் குண்டுச் சன்னம் உள்ள தால் பெரியளவில் ஒருவித வேலை யும் செய்யமுடியாதுள்ளது. அதே போன்று தான் மகளின் நிலையும் உள்ளது. மேற்படி சம்பவத்தின் போது நெடுங்கேணி வைத்திய சாலையில் நின்றிருந்த பதினைத்து பேர் இறந்தனர், இருபத்தைந்து பேர் காயமடைந்ததாகக் கேள்விப்பட் டோம்.”

**இச்சம்பவம் தொடர்பாக முள் ளியவளையைச் சேர்ந்த சிவ ராசா யோகரத்தினம் தெரிவிக் கையில்:**

“1987 ஆம்ஆண்டு இந்திய இராணு வம் தண்ணீரூற்று முள்ளிய வளைப் பிரதேசத்தில் தாக்குதல் களை மேற்கொண்ட நேரத்தில் அங்கிருந்த மக்கள் பீதி காரணமாக இடம் பெயர்ந்துகொண்டிருந்தார் கள். அந்த நேரம் எமது கிராம சேவையாளராக இரந்த சிதம்பரப் பிள்ளைக்கு உதவியாளராகக் கடமையாற்றிக்கொண்டிருந்தேன். இந்தவேளை இடம்பெயர்ந்த மக் களுக்கு எங்களால் முடிந்த வாகன உதவிகளைச் செய்து நெடுங் கேணிக்கு கொண்டுசென்று பாட சாலைகளிலும் ஆலயங்களிலும் தங்க வைத்து நிவாரணப் பணிகள் செய்துகொண்டிருந்தோம். அன் றைய நாள் மாலை 5:00 மணி யிருக்கும் இந்திய இராணுவத்தின் முதலைக் கெலி என்றழைக்கப்படும் எம். ஐ. 24 ரக உலங்குவானூர்தி வானத்திற் சுற்றிக்கொண்டிருந்தது. இதனாற் பயமடைந்த நாங்கள் பாதுகாப்புத் தேடி ஒளிந்துகொண் டோம். அந்த நேரம் நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணி மனைக்கு முன்னால் முதலாவது குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. அதன்போது இடம்பெயர்ந்த மக்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்காக அகப்பை வாங்க வந்த எமது பகுதி இலங்கை போக்கு வரத்துக் கழக பேருந்துச் சாரதியான பொன்னம்பலம் இராமநாதன் என் பவர் அவ்விடத்திலேயே கொல்லப் பட்டார். நெடுங்கேணி உதவி அர சாங்க அதிபர் கரியாலயத்தில் வேலை செய்த மகாதேவன் என்பவரின் மகன் மகேந்திரன் ஒரு உழவு இயந்திரத்தில் வந்துகொண் டிருந்தார். அவரும் அவ்விடத்தி லேயே மரணமானார். அதே போன்று குளவிசுட்டானைச் சேர்ந்த உதவி அரசாங்க அதிபர் கரியா லயத்தில் வேலைசெய்யும் சிவராசா என்பவரின் சகோதரன் தம்பி ஐயா அண்ணை என்பவரும் இடம் பெயர்ந்த மக்களை வாகனத்தில் ஏற்றியிறக்க உதவிபுரிந்த பாரவூர் திச் சாரதி துரைச்சாமி என்பவரும் அவ்விடத்திலேயே கொல லப்பட்டார்கள். அதன்பின்னர் இரண்டாவது தாக்குதல் இடம் பெயர்ந்து வந்து நெடுங்கேணி மகாவித்தியாலயத் தில் தஞ்சமடைந்திருந்த மக்கள் மீது நடத்தப்பட்டது. இதன் போது பல பொதுமக்கள் உடல் சிதறிய நிலை யில் இறந் ததைக் காணக்கூடியதாக இருந்தது. அதன்பின்னர் இறந்தவர்கள் காயமடைந் தவர்களென அனைவருக்கும் நெடுங்கேணிப் பகுதியில் தனியார் வைத்தியசாலை நடத்தி வந்த வைத்தியர் ஜெய நாதன் மற்றும் வைத்தியர் கஜேந் திரா என்பவர்களுடன் அரச வைத் திய அதிகாரியும் இணைந்து சிகிச்சை செய்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியாவிற்கும் இறந்தவர்களை வீடுகளிற்கும் அனுப்பி வைத்தோம். இச்சம்பவம் நடந்து பல வருடங்கள் கடந்த நிலையிலும், அதனை நினைக்கும்போது அனைத்துச் சம்பவங்களும் நேற்றைய தினம் நடந்ததுபோல் கண்முன்னே வருமளவிற்கு அந்த நிகழ்ச்சி எனது மனதில் மாறாவடுவாகவுள்ளது.”







**11.11.1987 அன்று நெடுங் கேணிச் சந்திப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:**

1. கந்தையா சிறிதரன் (22)
2. கதிர்காமு கார்த்திகேசு (44)
3. தம்பையா நற்குணம் (31)
4. மகாதேவன் மகேந்திரன் (31
5. முகமதுசரீபு றகீம் (26)
6. முத்தையா துரைராசா (64)
7. அப்துல்காதர் முகமது லிமாஸ் (24)
8. பொன்னம்பலம் இராம நாதன் (-)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடிய வில்லை.



# யாழ். குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீதான சுப்பசொனிக் விமானக் குண்டு வீச்சு 13.11.1996







குருநகர்க் கிராமம் யாழ்ப்பாண நகரத்திலிருந்து தெற்குப் புறமாக இரண்டு மைல் தூரத்தில் கடற்கரையோரமாக அமைந்துள்ளது. குருநகர்ப் பகுதியில் 1861 ஆம் ஆண்டு அடிக்கல் நட்டப்பட்டு 1881 ஆம் ஆண்டு புனித யாகப்பர் ஆலயம் அமைக்கப்பட்டது. இவ்வாலயச் சூழலில் 1973 ஆம் ஆண்டு இறந்த "அருட்திரு யோசவ் றேயை" அவர்கள் ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்ட நினைவுக்கல்லும் உள்ளது.

13.11.1993 அன்று சனிக்கிழமை காலை 7:20 மணிக்கு அவ்வூர் மக்கள் இறைவழிபாட்டுக்காக ஆலயத்தில் ஒன்று கூடியிருந்த நேரம் குடாநாட்டு வான்பரப்பிற்குள் பிரவேசித்த சிங்கள விமானப்படையின் சீன நாட்டுத் தயாரிப்பான "சுப்பர்சொனிக்" விமானங்கள் இரண்டு குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீது இரு குண்டுகளை வீசின. இவ்வாலயத்தில் வழிபாடு செய்து கொண்டிருந்தவர்களில் பதின்மூன்று பேர் உயிரிழக்க, இருபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததுடன், தேவலாயமும் சேதமடைந்தது.

குருநகர் புனித யாகப்பர் தேவாலயம் மீதான தாக்குதலை அரசியற் தலைவர்களோடு உலக நாடுகள் பலவும் கண்டித்திருந்தன. தேவாலயத்தின் மீதான் குண்டு வீச்சினால் மண்டபத்தினைத் தாங்கிய தூண்கள் துண்டங்களாகின. அந்தத் தூண்கள் இன்றும் யாகப்பர் சிலையின் அருகே ஞாபகச் சின்னமாக வைக்கப்பட்டுள்ளன. புனித யாகப்பர் ஆலயத்தில் உயிர் நீத்த மக்களின் நினைவாக குருநகர் மக்களால் ஆலயப் படிக்கட்டில் "நீதிக்கான நினைவாலயம்" என்னும் நினைவுச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

**13.11.1996 அன்று புதின யாகப்பர் தேவாலயத்தில் படுகொலையில் கொல்லப்பட்டடோர் விபரம்:**

1. குரூஸ் அக்கினேஸ் (60)
2. கபிரியஸ் அன்ரன் (48)
3. அன்ரன் புஸ்பலீலா (41)
4. அன்ரன் அஞ்சலா (40)
5. அக்கினேஸ் குருசுப்பிள்ளை (80)
6. ஆரோக்கியநாதர் சில்வன் சஜீவன் (18)
7. ஜோன்லூத்து சேவியர் (45)



8. தோமஸ் பெனடிற் (55)
9. மேரி ஜெயசீலி தாசியஸ் (50)
10. மேரிசிந்துயா மதுரநாயகம் (2.5)
11. மேரிவெண்ணிலா அந்தோனிப்பிள்ளை (27)
12. சிங்கராயர் ஜானி கனோஜி (08)
13. சிங்கராசா யூஜின் காமலிற்றா (15)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# பாலிநகர் படுகொலை 03.11.1999

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேசசெயலர் பிரிவில் வவுனிக்குளத்தினை அண்மித்த பகுதியிற் பாலிநகர்க் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்கள் விவசாயம் மற்றும் வியாபாரத் தொழில்களில் ஈடுபட்டுவந்தனர். பாலிநகரைப் பொறுத்தவரை அது 1999 ஆம்ஆண்டு காலப்பகுதிகளில் அதிகளவு மக்கள் தொகையை கொண்டிருந்தது. அம்மக்களில் பெரும்பாலனோர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், மாங்குளம் போன்ற பல்வேறு பகுதிகளிலுமிருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்து வந்தவர்களாவர். பாலிநகர்ச் சந்தி இக்காலப் பகுதியில் சிறு நகரப் பண்பு கொண்டதாகவும், அதிக மக்கள் செறிவைக் கொண்டதாகவும் காணப்பட்டது.

03.11.1999 அன்று பாலிநகர் மக்கள் தமக்கு நடக்கவிருக்கும் அவலத்தை அறியாதவர்களாக தமது வழமையான செயற்பாடு களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார் கள். அன்று காலை பாலிநகர்ச் சந்தியில் மக்கள் தமது பல்வேறு பட்ட தேவைகளுக்காகக் கூடிநின்ற போது, காலை 11:30 மணியளவில் சிங்கள விமானப்படையின் “கிபிர்” வமானங்கள் குண்டுத்தாக்குதல்களை நடத்தின.

பாலிநகர்ச் சந்தி யில் விமானம் குண்டத்தாக்குதலை மேற்கொண்டு விட்டது என்பதை அறிந்த மக்கள், தமது உறவினர் களைத் தேடித் தாக்குதல் நடந்த இடத்துக்கு ஓடிச் சென்று கொண்டிருந்தபோது அம் மக்கள் மீதும் “கிபிர்” விமானங்கள் மீண்டும் தாக்குதலை நடத்தின. அன்றைய விமானத் தாக்குதலில் ஆறு பொதுமக்கள் உடல் சிதறி உயிரிழந்ததுடன், எட்டுப் பேர் காயமடைந்தனர்.

**03.11.1999 அன்று பாலிநகர் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:**

1. பெருமாள் சுரேஸ்குமார் (18)
2. வீரையா துரைராசா (55)
3. தாமோதரம்பிள்ளை கிருஸ்ணராசா (60)
4. வைத்திலிங்கம் சுதாகர் (17)
5. கிருஸ்ணராசா ஜெயசீலன் (-)
6. குமாரவேலு புண்ணியலிங்கம் (42)

குறிப்பு:- இச்சம்பவத்திற் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# கிளிநொச்சி மருத்துவமனை அருகாமைப் படுகொலை 02.11.2006



கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வளாகத்தை அண்மித்த பகுதிகளில் சிறீலங்கா விமானப் படைக்குச் சொந்தமான கிபிர் விமானங்கள் 2006 நவம்பர் 02 ஆம் நாள் பிற்பகல் 2 மணியளவில் நான்கு தடவைகள் குண்டத் தாக்குதல்களை மேற்கொண்டன. அதன்போது 16 குண்டகள் வீசப்பட்டன. இவற்றில் 15 குண்டுகள் வெடித்துள்ளன. இதன்போது பொது வைத்தியசாலைக்கு அருகிலிருந்த ஐவரும் உயிரிழந்துள்ளனர். உயிரிழுந்தவர்களில் இருவர் பாடசாலை மாணவர்கள். குண்டு வீச்சுத் தாக்குதல் காரணமாக உயிரிழந்தவர்களின் வீடு முழுமையாகச் சிதைவடைந்ததுடன் மேலும் கால்நடைகள் பலவும் பலியாகிய தோடு பயன்தரு மரங்கள் பலவும் அழிவடைந்தன.

அத்தோடு கிளிநொச்சி மாவட்டப் பொதுமருத்துவமனை வளாகத்தில் மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் வைத்தியசாலை பலத்த சேதமடைந்தது. இங்கு வைத்தியசாலை ஊழியர்கள் மூவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த மூன்று நோயாளர்களும் காயமடைந்துள்ளனர். விமானக் குண்டுச் சன்னங்கள் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக் கட்டடத்தின் நோயாளர் விடுதிகளையும் தாக்கியுள்ளன. வைத்தியசாலையின் கர்ப்பிணிப் பெண்களுக்கான பிரசவ விடுதி மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் என்பவற்றை குண்டுச் சன்னங்கள் தாக்கியுள்ளன. அதனால் அவற்றின் கூரைப் பகுதிகள் மிக மோசமாகச் சேதடைந்துள்ளன. இதேவேளை சத்திர சிகிச்சைக் கூடம் உட்பட வைத்தியசாலையின் பல்வேறு பகுதிகளிலும் கண்ணாடிகள் நொருங்கியுள்ளன.

இத்தாக்குதலையடுத்து வைத்தியசாலை விடுதிகளிற் தங்கிநின்று சிகிச்சைபெற்றுவந்த 300 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள், வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சைக்கென வந்த 700 இற்கும் மேற்பட்ட நோயாளர்களும் வைத்தியசாலை வளாகத்தை விட்டுச் சிதறி ஓடினர். நடக்கமுடியாத நோயாளரை உறவினர்கள் வந்து கூட்டிச்சென்றனர். இத்தாக்குதலையடுத்து வைத்தியசாலையின் செயற்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்தன.

இத்தாக்குதலின் காரணமாக பாடசாலை மாணவர்கள், மக்கள் என்ப் பலரும் பெரும் அச்சத்துடன் வீதிகளிற் சிதறி ஓடினர். கிளிநொச்சி நகரப் பகுதி உட்பட கிளிநொச்சிப் பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் வாழ்கின்ற மக்களும் பாடசாலை மாணவர்களும் பெரும் அச்சமடைந்து வீதிகளிற் சிதறி ஓடினர். இதன் காரணமாக ஏ-09 நெடுஞ்சாலை மற்றும் உள் வீதிகள் அனைத்திலும் சன நெருக்கடி அதிகரித்திருந்தது. தாக்குதல் நடைபெற்ற இடத்தையும் இறந்தவர்களின் உடல்களையும் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரும் நேரிற் சென்று பார்வையிட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக சிறீலங்காவிற்கு நிதி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் (ஐரோப்பிய ஒன்றியம், ஐப்பான், நோர்வே மற்றும் அமெரிக்கா) தூதுவர்கள் தமது கவலையினை வெளியிட்டுள்ளனர்.

**இதில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரம் வருமாறு:**

1. முருகேசு சண்முகரத்தினம் (56)
2. சண்முகரத்தினம் சசி (20)
3. சண்முகரத்தினம் கிரிசாந் (18)
4. முருகேசு மார்க்கண்டு (62)
5. இரத்தினம் சரஸ்வதி (-)
















JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


ARASAN RAJADURAI
Real Estate & Developments
Sale Representative
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
realtorarasan@gmail.com
ARANDTEAM.CA
RE/MAX
HALLMARK FIRST GROUP REALTY
RAISING THE BAR
1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA


The ESTATE BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


WEXFORD
WELLNESS CARE INC.
We treat all car accident injuries!
★ Massage Therapy
★ Physiotherapy
★ Orthopaedic
★ Acupuncture
★ Chiropractic
★ Orthotic
We deal directly with Insurance Companies, Extended health Care Corporate Insurance, ODSP WSIB, Motor Vihicle Accident (MVA)
Tel: 647-349-5120
Fax: 647-349-5121
Serve Two Location
Unit 301-240 Alton Towers Cir, Scarborough ON M1V 3Z3
2900 Markham Rd Unit F11, Scarborough ON M1X 1E6
(Majestic City, Colombo Rd)

# ஜெனிவாத் தீர்மானமும் தமிழ்நாடும்!

15.11.2022




மற்றொரு ஜெனிவா தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தீர்மானத்துக்கு ஆதரவாகவும் எதிராகவும் வாக்களித்த நாடுகள் மற்றும் நடுநிலை வகித்த நாடுகள் போன்றவற்றை தொகுத்து பார்த்தால் ஒரு விடயம் தெளிவாக தெரியும். ஆதரித்த நாடுகள் தமிழர்களுக்காக அதை ஆதரித்தன என்பதை விடவும் தங்களுடைய பூகோள அரசியல் நோக்கு நிலைகளில் இருந்து தீர்மானத்தை அணுகியுள்ளன என்பது. இரண்டாவதாக தீர்மானத்தை எதிர்த்த நாடுகளை எடுத்துப் பார்த்தால் அவை பெருமளவுக்கு அமெரிக்க எதிர்ப்பு காரணமாக ஜெனிவா தீர்மானத்தை எதிர்த்திருக்கின்றன என்பது. எனவே தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்த நாடுகள் தமிழர்களுக்கு எதிராக வாக்களித்தன என்பதைவிடவும் அமெரிக்காவுக்கு எதிராக வாக்களித்தன என்பதே அதிகம் பொருத்தமான விளக்கம். மூன்றாவதாக நடுநிலை வகித்த நாடுகள். இந்நாடுகள் இலங்கை அரசாங்கத்தோடு தமக்குள்ள உறவை பகை நிலைக்குத் தள்ள விரும்பவில்லை. அல்லது அமெரிக்காவின் மேலாண்மையை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. அல்லது தமிழ் மக்களை கையாளக்கூடிய தூரத்தில் வைத்திருக்க வேண்டும் என்று கருதும் நாடுகள்.

இந்தியா நடுநிலை வகித்திருக்கிறது. கடந்த ஆண்டும் இந்தியா நடுநிலை வகித்தது. இதுவரையிலுமான கடந்த பத்தாண்டுகால ஜெனிவா தீர்மானங்களில் இந்தியா இரண்டு தடவைகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்திருக்கிறது. இம்முறை ஜெனிவாவில் இந்தியாவை தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு தூண்டும் நோக்கத்தோடு தமிழகத்தில் உள்ள சில செயற்பாட்டாளர்கள் முயற்சித்தார்கள். யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு ஓர் அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையானது இலங்கை அரசாங்கத்தை பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்த வேண்டும் என்று கேட்டிருந்தது. இந்தியா ஐநாவில் அக்கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என்றும் கேட்டிருந்தது. இதுபோன்ற கோரிக்கைகளை முன்வைத்து தமிழகத்தில் உள்ள செயற்பாட்டாளர்கள் சிலர் அங்குள்ள ஈழத் தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பு என்ற கட்டமைப்புக்கூடாக இந்திய மத்திய அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கலாமா என்று முயன்றிருக்கிறார்கள்.

ஆனால் தமிழகத்தில் உள்ள ஈழ உணர்வாளர்களில் முக்கியமான சிலர்கூட அந்த விடயத்தில் அதிகம் அக்கறை காட்டவில்லை என்று தெரிகிறது. புலம்பெயர்ந்த தமிழர்களோடு அதிகம் உறவைப் பேணும் சீமானின் கட்சியும் அதில் அக்கறை காட்டவில்லை. மேலும் பெரிய திராவிடக் கட்சிகளை அணுகிய பொழுது குறிப்பாக திமுக அந்த விடயத்தில் அக்கறை காட்டவில்லை. ஈழப் பிரச்சினையில் தலையிட்டு கையைச் சுட்டுக் கொள்ள வேண்டாம் என்று திமுகவின் தலைமை தன் கட்சி ஆட்களுக்கு அறிவுறுத்தியிருப்பதாகத் தெரிகிறது. இவ்வாறு ஜெனிவா தீர்மானத்தை முன்வைத்து தமிழகத்தில் உள்ள கட்சிகளை ஒருங்கிணைக்க முடியாமல் போனமைக்கு பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன.




முதலாவது காரணம், திமுக இந்த விடயத்தில் தலையிடுவதில்லை என்ற முடிவோடு காணப்படுகிறது. நெருக்கடியான காலத்தில் நிவாரணம் வழங்குவதற்கும் அப்பால் ஈழப்பிரச்சினையில் தலையிட திமுக தயங்குகிறது. அதனால் திமுக ஆதரவு நிலைப்பாட்டை கொண்ட ஈழ உணர்வாளர்கள் ஜெனிவாவை முன்வைத்துப் போராடத் தயாரில்லை.

இரண்டாவது காரணம் திராவிடம் எதிர் தமிழ் என்ற ஒரு முரண் நிலை ருவிற்றரிலும் கிளப் ஹவுஸ்சிலும் தீவிரமடைந்து வருகிறது. இதில் சீமானின் நாம் தமிழர் கட்சிக்கும் பங்குண்டு. இந்த முரண்பாடுகள் காரணமாக மேற்படி சமூகவலைத்தளங்களில் திமுக ஆதரவாளர்களும் புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒரு பகுதியினரும் மோசமாக மோதிக் கொள்கிறார்கள். இம் மோதல்களில் அனேகமாக அரசியல் நாகரீகம் பின்பற்றப்படுவதில்லை.

மூன்றாவது காரணம், சீமானின் நாம் தமிழர் கட்சி ஈழத்தமிழர் பிரச்சினைக்கு ஏகபோக உரித்தை கொண்டாட முற்படுகிறது. இதனாலும் ஏனைய கட்சிகள் அந்தப் பக்கம் வரத் தயங்குகின்றன. புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உள்ள சீமானுக்கு ஆதரவான தரப்புக்களில் அநேகமானவை ஜெனிவாவை, ஜெனிவா தீர்மானங்களை பிரயோசனமற்றவை என்று கருதுகின்றன. அவற்றின் செல்வாக்குக்கு உட்பட்டு சீமானும் ஜெனிவாவை குறித்து அறிக்கை விடாமல் இருந்திருக்கலாம். மேலும், சீமான் தன் அரசியல் எதிரிகளைத் தாக்கும் பொழுது ஈழப் பிரச்சினையை ஒரு கேடயமாக பயன்படுத்துகின்றார். அதனால் அவருக்கு விழும் அடிகள் ஈழப் பிரச்சினையின் மீதும் விழுகின்றன.

நாலாவது காரணம், தமிழகத்தில் பாரதிய ஜனதா தன் கால்களை பலமாக ஊன்ற முயற்சிக்கின்றது. ஈழப்பிரச்சினையை அவர்கள் திமுகவுக்கு எதிராகவும் பயன்படுத்துகிறார்கள். தவிர திராவிடக் கட்சிகளை ஒதுக்கிவிட்டு ஈழப் பிரச்சினையை தம் கையில் எடுக்க அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

ஐந்தாவது காரணம், புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்புகளில் சிலவும் தாயகத்தில் உள்ள மிகச் சில தரப்புகளும் இந்துத்துவா ராஜதந்திரம் ஒன்றை கையில் எடுக்க முயற்சிக்கின்றன. அதன்படி தமிழக பாரதிய ஜனதாக்கட்சியின் முக்கியஸ்தர்களான திருமதி. வானதி சீனிவாசன், அண்ணாமலை போன்றோரை அணுகுவதன்மூலம் டெல்லியை நெருங்கலாம் என்று அவர்கள் சிந்திக்கிறார்கள். இதுவும் திராவிடக் கட்சிகளை ஒதுங்கி நிற்க வைக்கிறது.

மேற்கண்ட காரணங்களை தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரியவரும். தமிழகத்தின் கட்சி அரசியலுக்குள்

ஈழத் தமிழர்களின் விவகாரம் சிக்கிவிட்டது. இது தொடர்பாக உரையாடிய ஒரு தமிழகச் செயற்பாட்டாளர் பின்வரும் தொனிப் படச் சொன்னார் “ஈழப்பிரச்சினையை தேர்தலுக்காகப் பயன் படுத்தும் ஒரு வழமைக்குப் பதிலாக தேர்தலை ஈழப் பிரச் சினைக்காக கையாளும் ஒரு வளர்ச்சி தமிழகத்தில் இன்று வரை ஏற்படவில்லை. நீங்கள் ஈழத் தமிழர்கள் இந்தியாவை கையாள்வதற்குரிய ஒரு வெளியுறவு தரிசனத்தையும் கட் டமைப்பையும் கொண்டிருக்க வேண்டும் என்று கூறுகிறீர்கள். அதற்கு முதலில் தமிழகத்தை கையாள்வதற்குரிய ஒரு வெளி யுறவு கொள்கை அவசியம்” என்று.

இவ்வாறான ஒரு அரசியல் சூழலில் ஜெனிவாத் தீர்மானத்தில் மத்திய அரசின் நிலைப்பாட்டை விமர்சித்து வைகோ ஒரு அறிக்கை விட்டார். பாட்டாளி மக்கள்கட்சியின் அன்புமணி ராமதாஸ் ஒரு அறிக்கை விட்டார். தமிழக சட்டமன்ற உறுப் பினரும், தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவருமாகிய வேல்முருகன் ஓர் அறிக்கை விட்டார். அவ்வளவுதான் நடந்தது. ஆதற்குமப்பால் ஜெனிவாவில் இந்திய மத்திய அரசின் நிலைப் பாடு தொடர்பில் தமிழ்நாட்டிலிருந்து பலமான எதிர்ப்புக் காட்டப் படவில்லை

அதேசமயம் தமிழகத்தில் உள்ள சில செயற்பாட்டாளர்கள் ஈழத் தமிழர்கள் மத்தியில் உள்ள சிவில் சமூகங்களை நெருங்கி ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட 13 நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிவில் சமூகங் களும் இணைந்து இந்திய மத்திய அரசாங்கத்தை நோக்கி ஒரு கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என்பதே அது. அதாவது ஜெனிவா தீர்மானத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை மாற்றும் விதத்தில் இலங்கைத்தீவில் உள்ள தமிழ் நாடாளு மன்ற உறுப்பினர்கள் 13 பேரும் சிவில் சமூகங்களும் இணைந்து இந்திய மத்திய அரசாங்கத்தை நோக்கி ஒரு வேண் டுகோளை விடுக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த் தார்கள்.

ஆனால் தமிழ்க் கட்சிகளும் அதற்குத் தயாராக இருக்கவில்லை. சிவில் சமூகங்களும் உடன்படவில்லை. அதற்கு அவர்கள் வலிமையான ஒரு காரணத்தை முன்வைத்தார்கள். அது என்னவெனில், ஏற்கனவே கடந்த ஆண்டு ஆறு கட்சிகள் இந்தியாவை நோக்கி ஒரு கூட்டுக் கோரிக்கையை முன்வைத் திருக்கின்றன. இக்கூட்டுக் கோரிக்கையை தயாரிக்கும்பொழுது தமிழரசுக் கட்சி அதில் முதலில் இணையவில்லை. அக்கட்சி அந்த முயற்சிகளில் இணைந்து செயல்பட்ட தொடங்கியபின் கோரிக்கையின் வடிவம் மாறியது. எனினும் மேற்படி கூட்டுக் கோரிக்கையானது சாராம்சத்தில் மாகாண சபையை கடக் கவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இரண்டு ஆர்ப்பாட்டங்களை ஒழுங்குபடுத் தியது. இதில் யாழ்ப்பாணத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் முடிவில் கிட்டுப் பூங்காவில் ஒரு பிரகடனம் வெளியிடப்பட்டது.

இவ்வாறு பலத்த எதிர்ப்புகளின் மத்தியில் ஆறு கட்சிகளும் ஒரு கூட்டுக் கோரிக்கையை இந்தியப் பிரதமரை நோக்கி முன் வைத்தன. ஆனால் இன்றுவரை அந்த கோரிக்கைக்கு இந்திய மத்திய அரசாங்கம் பதில் கூறவில்லை. கடந்த ஆண்டு இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கொழும்புக்கு வந்திருந்தார். இதன்போது அவர் கூட்டமைப்பை சந்தித்தார். டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்தார். ஆனால் ஆறு கட்சிகளையும் ஒன்றாகச் சந்திக்கவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில், மீண்டும் ஒரு தடவை இந்தியாவை நோக்கி ஒரு கோரிக் கையை முன்வைப்பதற்கு தமிழ்க் கட்சிகளும் தயாரில்லை குடிமக்கள் சமூகங்களும் தயாரில்லை.

ஆக மொத்தம் ஜெனிவா கூட்டத்தொடரை முன்னிட்டு இந்திய மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்தோடு ஈழத் தமிழர்கள் மத்தியிலிருந்தும் தமிழகத் திலிருந்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்படவில்லை.

அவ்வாறு ஈழத்தமிழர்களும் தமிழகமும் இணைந்து இந்திய மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துவதால் மத்திய அரசாங் கத்தின் நிலைப்பாட்டில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தலாமா இல்லையா என்ற விவாதம் ஒருபுறம் இருக்க, இந்திய மத்திய அரசாங்கத்தை கையாளும் விடயத்தில், தமிழக ஈழத் தரப்புகள் ஒன்றிணைந்து செயல்படுவதில் உள்ள சிக்கல்களையும் ஏமாற் றகரமான இடைவெளிகளையும் மேற்படி முயற்சிகள் நமக்கு உணர்த்துகின்றன.

தமிழகம் கொந்தளித்தால் இந்திய மத்திய அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க முடியும் என்ற ஓர் எடுகோளின் அடிப்படையில் மூத்த அரசறிவியலாளர் திருநாவுக்கரசு உபாயம் ஒன்றை முன்வைத்தார். அது நாலாங்கட்ட ஈழப்போரின்போது 2006 இல் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் பத் திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. சென்னையில் திறவுகோல் என்ற தலைப்பில் எழுதப்பட்ட அக்கட்டுரையில், சென்னை-டில்லி-வொசிங்டன் ஆகிய மூன்றும் ஒரு கோட்டில் வரும்போது தமிழர்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்று கூறப்படுகிறது. ஆனால் கடந்த ஜெனிவா கூட்டத்தொடரை முன்னிட்டு சில செயற்பாட்டாளர்கள் தன்னார்வமாக முன்னெடுத்த நகர்வுகள் வெற்றி பெறாதது எதைக் காட்டுகிறது? தமிழகத்துக்கும் ஈழத் துக்கும் இடையிலான பிணைப்பு ஒரு பேர பலமாக மாற்றப் படவில்லை என்பதையா ?

நன்றி: நிலாந்தன்

# இந்தித் திணிப்பு; காமராசர் கண்ட தீர்வு!

## பழ. நெடுமாறன்

அக்டோபர் 16, 2022



1963ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட இந்திய ஆட்சி மொழிச் சட்டத்தின் கீழ் 1976ஆம் ஆண்டில் ஆட்சி மொழிக்கான நாடாளுமன்றக் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் மக்களவை உறுப்பினர்கள் 20 பேரும், மாநிலங்களவை உறுப்பினர்கள் 10 பேரும் நியமிக் கப்பட்டு ஆட்சிமொழி நடவடிக்கைகளில் இந்தியை பயன்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்து, குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரை செய்யவேண்டும். ஐந்தாண்டுகளுக்கொரு முறை ஆட் சிமொழிக்கான நாடாளுமன்றக் குழு திருத்தியமைக் கப்படும். அதன்படி 2019ஆம் ஆண்டில் உள்துறை அமைச்சர் அமித்சா தலைமையில் ஆட்சிமொழிக்குழு அமைக்கப்பட்டது. இக்குழு குடியரசுத் தலைவரிடம் அளித்த அறிக்கையில் நூற்றுக்கும் மேற்பட்ட பரிந் துரைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் முதன் மையான பரிந்துரைகள் கீழ்வருமாறு:

1. நாட்டில் உள்ள இந்தி பேசும் மாநிலங்களில் அமைந் திருக்கும் இந்திய தொழில்நுட்ப கல்வி நிலையங்கள் (ஐ.ஐ.டி.), அகில இந்திய மருத்துவக் கல்விக்கான நிலையங்கள் (எய்ம்ஸ்), ஒன்றிய அரசின் தொழில் நுட்பக் கல்விக்கான நிலையங்கள், நவோதய வித் யாலயா கல்வி நிறுவனங்கள், ஒன்றிய அரசின் பல்கலைக்கழகங்கள், கேந்திரியா வித்யாலயா கல்வி நிறுவனங்கள் ஆகியவற் றில் பயிற் றுமொழியாக இந் தி இருக்கவேண்டும்.

2.இந்தியாவின் ஆட்சிமொழியாக இந்தி விளங்க வேண்டுமென்றால், பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிலையங்கள், தொழில்நுட்பக் கல்வி மற்றும் மருத்துவ கல்வி நிலையங்களில் இந்தி பயிற்று மொழியாக ஆக்கப்படவேண்டும். இல்லையேல் இந் தியாவின் பொது மொழியாக இந்தி விளங்க முடியாது.

3.பீகார், சத்தீசுகர், உத்தரகாண்ட், சார்கண்ட், அரி யானா, இமாச்சலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், இராசசுத்தான், உத்திரப் பிரதேசம், தில்லி மாநிலம் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகள் ஆகியவற்றில் நூற்றுக்கு நூறு சதவீதம் இந்தி மொழியின் பயன்பாடு இருக்க வேண்டும்.

4. இந்திய அரசின் பணிகளுக்கான தேர்வுகளில் கட்டாய ஆங்கில மொழி வினாத்தாள் இருப்பதைக் கைவிட வேண்டும்.

5.இந்தி பேசும் மாநிலங்களில் பணியாற்றும் ஒன்றிய அரசின் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் இந்தியைப் பயன்படுத்தாவிட்டால், அவர்களுக்கு எச்சரிக்கைவிட வேண்டும். அதற்குப் பிறகும் அவர்கள் இந்தியைப் புறக்கணித்தால் அது குறித்து அவர்களின் ஆண்டு செயல்திறன் மதிப்பீட்டு அறிக்கையில் குறிக்க வேண்டும்.

6.ஒன்றிய அரசு அலுவலகங்கள், அமைச்சர்களின் துறைகள் ஆகியவற்றின் கடிதங்கள், மின்னஞ்சல்கள் போன்றவை இந்தியில் இருக்கவேண்டும்.

7.இந்திய அரசின் சார்பில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக் கான அழைப்பிதழ்கள், அங்கு ஆற்றப்படும் உரைகள் இந்திமொழியில் மட்டுமே இருக்க வேண்டும்.

8.உலக நாடுகளில் இருக்கக்கூடிய இந்திய தூதுவர் அலுவலகங்களில் இந்தி மொழியின் பயன்பாடு குறித்து முறையான அறிக்கைகள் அரசுக்கு அனுப்பப்பட வேண்டும்.

9.இந்தி பேசும் மாநிலங்களில் உயர்நீதிமன்றங்களின் தீர்ப்புகளை அவசியமானால் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தரவேண்டும்.

10.ஐ.நா. பேரவையின் அலுவல் மொழிகளில் ஒன்றாக இந்தி ஆக்கப்படவேண்டும்.

அமித்சா குழு வெளியிட்டிருக்கும் இந்த அறிக்கை, இந்தி பேசாத மாநிலங்களில் குறிப்பாக, தமிழ்நாட்டில் பெரும் கொந்தளிப்பை உருவாக்கியிருக்கிறது. அதன் விளை வாக இன்னொரு மொழிப் போர் உருவாகும் நிலை ஏற்பட்டிருப்பதைத் தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர் களும் மற்றும் பல தலைவர்களும் சுட்டிக்காட் டியுள்ளனர்.

1950ஆம் ஆண்டில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் செயல்படுத்தப்பட்டது. அச்சட்டத்தில் குறிப்பிட்டிருந்தபடி 15 ஆண்டுகள் கழித்து 1965ஆம் ஆண்டில் இந்தியா வின் ஆட்சிமொழியாக இந்தியை ஆக்குவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்படவேண்டும் என்பதற் கிணங்க, அப்போதைய இந்திய அரசு வெளியிட்ட ஆணையின் விளைவாக தமிழ்நாட்டில் இந்திக்கு எதிரான மாணவர்களின் போராட்டம் வெடித்தது. அதே நிலை இப்போது அமித்சா குழு விடுத்த அறிக்கையின் விளைவாக ஏற்பட்டுள்ளது.

இந்திய அரசியல் சட்டத்தின் 8ஆவது அட்டவணையில் தமிழ் உள்பட 22 மொழிகள் இந்தியாவின் தேசிய மொழிகளாகவும், சம உரிமை கொண்டவைகளாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 22 மொழிகளில் ஒன் றான இந்தி மொழியை ஆட்சிமொழியாக்க முயல்வது பிறமொழிகளைப் புறக்கணித்து ஒதுக்கும் முயற் சியாகும்.

இந்தியின் ஆதரவாளர்கள் குறிப்பிடுவதைப் போல இந்தி பெரும்பான்மையினர் பேசும் மொழி அல்லவே அல்ல. பீகாரி, மைதிலி, போஜ்புரி, அரியான்வி, இராசசுத்தானி, மார்வாரி போன்ற பல்வேறு வட்டார மொழிகளையும் இந்தியின் கணக்கில் சேர்த்துக் கொண்டு இந்தியாவில் இந்தி பேசுவோரின் எண் ணிக்கை கூட்டிக் காட்டப்படுகிறது.

தமிழ் உள்பட பல மொழிகள் மிகத் தொன்மை வாய்ந் தவை இலக்கிய வளம் நிறைந்தவை. இம்மொழி களைப் புறக்கணித்துவிட்டு மிகப் பிற்காலத்தில் தோன் றிய இந்திமொழியை ஆட்சிமொழியாக்க முனைவது இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்குப் பெரும் கேட்டினை விளைவிப்பதாகும்.

இந்தி வெறியர்களின் நோக்கம் இந்தியை ஆதிக்க மொழியாக்குவது அல்ல. சமற்கிருதத்தையே ஆட்சி மொழியாக்குவதற்கான திட்டத்தின் முதல் கட்டம்தான் இந்தித் திணிப்பாகும். இதை மூடி மறைக்க முயலு கிறார்கள்.

1965ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் வரலாறு கண்டறி யாத வகையில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வெடித்து எழுந்தபோது மாணவர்களின் மன உணர்வுகளை புரிந்துகொண்ட பெருந்தலைவர் காமராசர் அவர்கள், அப்போது அகில இந்திய காங்கிரசுத் தலைவராக வீற் றிருந்தார். தலைமையமைச்சராக இருந்த நேருவின் மறைவிற்குப் பின்னர் முதலில் லால்பகதூரையும், அதற்குப் பின்னர் இந்திராகாந்தியையும் நாட்டின்

# இந்தித் திணிப்பு; காமராசர் கண்ட தீர்வு!

தலைமையமைச்சராகப் பதவியேற்க வைத்த அவரது திறமையை உலகமே பாராட்டியது. அத்தகைய பெருமைக்குரிய பெருந்தலைவர் காமராசர் அவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தினால் ஏற்பட்ட நெருக்கடி யான சூழ்நிலையில் அதை கையாள்வதற்கு உரிய வழிமுறைகளையும், இந்திய அரசியல் சட்டம் ஏற்றுக் கொண்ட 22 மொழிகளின் மதிப்பினை நிலை நிறுத்தும் வகையிலும், எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்பதைக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரலாறு இன்றைய இளைஞர்களுக்குத் தெளிவை ஊட்டும் என நம்புகிறேன்.

1965ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் இந்திக்கு எதிராக மாணவர்கள் நடத்திய போதராட்டம் எரிமலை பொங்கி வெடித்தது போல் அமைந்தது. இதன் எதிரொலி இந் தியா முழுவதும் பரவியது. இந்திய அரசு இதைக் கண்டு அச்சமடைந்தது. ஆளுங் கட்சியான காங்கிரசுக் கட்சியிலும் கடும் கருத்து வேறுபாடுகள் மூண்டெழுந்தன.

அகில இந்தியக் காங்கிரசுத் தலைவர் காமராசர் அவர்களைக் குத்தூசி குருசாமி அவர்களின் தலைமையில் மோகன் குமாரமங்கலம், பேராசிரியர் மு.வரத ராசனார், சோ. இலட்சுமிரதன் பாரதி, செங்கல் வராயன், திருமதி. அனந்தநாயகி, திருமதி. இலட்சுமி பாரதி ஆகியோர் அடங்கிய தூதுக்குழு சந்தித்துப் பேசியது.

இந்திக்கு எதிரான தமிழக மாணவர்களின் போராட்டத்தின் நியாயத்தையும் அதன் விளைவாக தமிழக மக்களின் கொந்தளிப்பையும் குறித்து இத்தூதுக் குழுவினர் காமராசரிடம் விரிவாக எடுத்துரைத்தனர்.

“காங்கிரசு செயற்குழுவில் இப்பிரச்சினைக் குறித்து முடிவெடுத்து அனைத்து மாநிலங்களின் இசைவைப் பெறும் வரை ஆங்கிலமும் ஆட்சிமொழியாகத் தொடர்ந்து இருப்பதற்குச் சட்டப்பூர்வமான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதாகவும், மாநிலத்தில் தமிழ் ஆட்சிமொழியாகவும் இதர துறைகளிலும் உரிய இடத் தைப் பெறுவதற்கு ஆவன செய்வதாகவும்” அத்தூதுக் குழுவினரிடம் காமராசர் உறுதி கூறினார்.

1965ஆம் ஆண்டு சனவரி 31ஆம் நாள் அன்று பெங்களூரில் காங்கிரசுத் தலைவர் காமராசர் தலைமை யில் கருநாடக முதலமைச்சர் எஸ். நிஜலிங்கப்பா, வங் காள காங்கிரசுத் தலைவர் அதுல்யா கோஷ், ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த மூத்த ஒன்றிய அமைச்சர் சஞ் சீவி ரெட்டி ஆகியோர் கூடிப் பேசி வெளியிட்ட அறிக்கை யில் “இந்தி பேசாத மக்கள் மீது இந்தியைத் திணிக்க இந்தி ஆதரவாளர்கள் முயற்சி செய்வது நாட்டின் ஒற் றுமைக்கே உலை வைத்துவிடும்” என எச்சரித்தனர்.

உடனடியாக ஒன்றிய மூத்த அமைச்சர்களில் ஒருவ ரான மொரார்ஜி தேசாய் விடுத்த எதிர் அறிக்கையில் “தமிழ்நாட்டில் உள்ள காங்கிரசுத் தலைவர்கள் இந் தியை எதிர்க்காமல் இருக்கும்படி மக்களை ஒப்புக் கொள்ள வைக்கவேண்டும். 1950ஆம் ஆண்டு இந் திய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்த உடனேயே இந்தி இந்தியாவின் ஆட்சிமொழியாக ஆக்கப்பட்டிருக்க வேண்டும்” என இந்திக்கு ஆதரவாக அறிக்கை வெளியிட்டார். தலைமையமைச்சர் கனவில் இருந்த மொரார்ஜி தேசாய் இந்தி பேசும் மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக இவ்வாறு அறிக்கை வெளியிட்டார்.

அத்துடன் அவர் நிற்கவில்லை. இந்தி பேசும் மாநிலங்களைச் சேர்ந்த 106 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட விண்ணப்பம் ஒன்றினைக் காங் கிரசுத் தலைவர் காமராசரிடம் அளிக்க ஏற்பாடு செய் தார். “ஆட்சிமொழிச் சட்டத்தில் எத்தகைய திருத்தத் தையும் கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண் டாம்” என அவ்விண்ணப்பத்தில் வலியுறுத்தப்பட்டது.

தலைமையமைச்சர் லால்பகதூர் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தார். அவர் உள்ளூர மொரார்ஜி தேசாய் போன்ற இந்தி ஆதரவாளர்களின் பக்கமே இருந்தாலும், இந்திக்கு எதிரான எதிர்ப்புக் குரலைப் புறக்கணிக்க அவரால் முடியவில்லை. இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒன்றிய அமைச்சர்களான சி. சுப்பிரமணியம், ஓ.வி. அளகேசன் ஆகியோர் பதவி விலகுவதாக அறிவித்தனர். ஆனால் அவ்வாறு அவர்கள் பதவி விலகியிருக்கக் கூடாது என்று காமராசர் கருதினார். பதவி விலகி விட்டு தமிழகத் திற்குத் திரும்பி வந்த அவர்கள் இருவரும் தலைவரைச் சந்தித்தபோது அவர்கள் செய்தது சரியில்லை என்று கூறிக் கடிந்துகொண்டார். அவர்கள் இருவரும் உடனடி யாக தங்களின் பதவி விலகல் கடிதங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள்.

இந்தியை எதிர்த்துத் தமிழக மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டபோது பதைப்புணர்ச்சியுடன் இந்திராகாந்தி தமிழகத்துக்கு ஓடோடி வந்தார். அவரது பொறுப்பிலிருந்த அமைச்சகம் அனுப்பிய சுற்றறிக்கையே தமிழகத்தில் ஏற்பட்ட கிளர்ச்சிகளுக்கு உடனடிக் காரணமாக அமைந்தது என்று கேள்விப்பட்டபோது அவர் மிகவும் வருத்தப்பட்டார். ஆகவே, தமிழகத்துக்கு வந்து நிலைமையினை விளக்கிச் சொல்லி கிளர்ச்சி செய்யும் மாணவர்களை அமைதிப்படுத்துவது தன் னுடைய கடமை என்று அவர் கருதினார். இந்திய ஒருமைப்பாட்டை வலுப்படுத்த இந்தி பொது மொழியாக இருக்க வேண்டுமே தவிர, பொது மொழியாக அது இருப்பதால் இந்திய ஒருமைப்பாடு சீர்குலையுமென் றால் மொழிப் பிரச்சனையை மறுபரிசீலனை செய்வது அவசியம் என்று அவர் கருத்துத் தெரிவித்தார். கோவை பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய இந்திரா காந்தி, “நாடாளுமன்றத்தில் தமிழ்தான் இணைப்பு மொழியாக இருக்கவேண்டும் என்றால் நான் உள்ள படியே மிகவும் மகிழ்ச்சியடைவேன்” என்றார். காமராசரும் சரி, இந்திராகாந்தியும் சரி மொழிப் பிரச்சனை யில் தலைமையமைச்சராக இருந்த லால்பகதூர் அவர்களுடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார்கள் என்பது உண்மை.

தலைமையமைச்சர் லால்பகதூர் அகில இந்திய வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துப் பேசியதில் தமிழ்நாட்டில் நடைபெற்ற துயரகரமான நிகழ்ச்சிகளைக் கண்டு தான் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்திருப்பதாகவும், நேருவின் வாக்குறுதி பற்றிய தவறான கருத்துகளைப் போக்க விரும்புவதாகவும் நேருவின் வாக்குறுதியின்படி மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் ஆட்சிமொழியாகத் தொடர்ந்து இருக்கும் என்று கூறிவிட்டு கீழ்க்காணும் ஐந்து வாக்குறுதிகளை அளித்தார்.

1. ஒவ்வொரு மாநிலமும் தனது மாநில மொழியிலோ அல்லது ஆங்கிலத்திலோ ஆட்சி நிர்வாகத்தை நடத்திக் கொள்ள முழுமையாக உரிமை உண்டு.

2. ஒரு மாநில அரசு மற்றொரு அரசுடன் தொடர்பு கொள்ள ஆங்கிலத்தைப் பயன்படுத்தலாம். அல்லது வேறு மொழியைப் பயன்படுத்தினால் அதற்குரிய ஆங் கில மொழிபெயர்ப்பையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

3. இந்தி பேசாத மாநிலங்கள் ஒன்றிய அரசுடன் தொடர்புகொள்ளும்போது ஆங்கிலத்தைப் பயன்படுத்த முழு உரிமை உண்டு. இந்தி பேசாத மாநிலங்களின் ஒப்புதலின்றி இந்த ஏற்பாடு மாற்றப்பட மாட்டாது.

4. ஒன்றிய அரசின் அலுவல் மொழியாக ஆங்கிலமும் தொடர்ந்து பயன்படுத்தப்படும்.

5. இந்திய அரசுப் பதவிகளுக்கான தேர்வுகள் இந்தியில் மட்டுமே நடத்தப்படும் என்பதற்குப் பதில் ஆங்கிலத் திலும் நடத்தப்படும்.

தலைமையமைச்சரின் இந்தப் பேச்சு இந்தி எதிர்ப்பாளர்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டினாலும் காலங் கடந்து அவர் அளித்த இந்த வாக்குறுதிகள் பயனளிக்க வில்லை தமிழ்நாட்டில் காங்கிரசு கட்சியின் மதிப்பை வெகுவாகக் குறைத்துவிட்டது.

இந்த நிலைமையில் மாணவர்களின் நியாயமான உணர்வுகளைப் புரிந்துகொண்ட தலைவர் காமராசர், அவர்களின் அச்சத்தைப் போக்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அகில இந்தியக் காங்கிரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் மொழிப் பிரச்சனை குறித்து மனம் திறந்த விவாதத்திற்கு ஏற்பாடு செய்தார். 1965ஆம் ஆண்டில் சூன் மாதத்தில் புதுதில்லியில் கூடிய காங்கிரசுச் செயற்குழு மொழிப் பிரச்சினை குறித்து இரண்டு நாட்கள் விவாதித்தது. மொழிப் பிரச்சினைக்காகச் சிறப்பாக இச்செயற்குழு கூட்டப்பட்டு விவாதம் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இக்கூட்டத்தில் காங்கிரசு மாநில முதலமைச்சர்கள் அனைவரும் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர். தீவிரமான வாதப் பிரதிவாதங்களுக்குப் பிறகு தலைவர் காமராசர் கூறிய யோசனையைச் செயற்குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. மொழிப் பிரச்சினையால் நாடு பிளவுபட்டுப் போகாதபடி சிறந்த தொரு தீர்வினைச் செயற்குழு வகுத்தது.

ஆங்கிலத்திற்கும் இந்திக்கும் இடையே தான் போட்டியுள்ளது. ஆங்கிலத்தின் இடத்திலிருந்து அதை அகற்றிவிட்டு அந்த இடத்தில் இந்தியை அமர வைக்க சிலர் விரும்புகிறார்கள். இதன் விளைவாக மாநில மொழிகள் பின்னோக்கித் தள்ளப்படும் என்ற அச்சத் தின் காரணமாகத்தான் இந்தி எதிர்ப்புப் போராட்டம் மூண்டது என்பதை உணர்ந்த தலைவர் காமராசர் “ஆங்கிலம் அகற்றப்படும் இடங்களில் எல்லாம் மாநில மொழிகள் விரைவில் அமர்த்தப்பட வேண்டும். மாநிலங்களில் அந்தந்த மொழிகளே ஆட்சிமொழிகள் ஆவதை விரைவுபடுத்த வேண்டும். இந்தி பேசும் மாநிலங்களில் இந்தி ஆட்சிமொழியாக ஆக்கப்பட்டு அது வளமாக்கப்படவேண்டும். அதற்குப் பிறகே இணைப்பு மொழியாக அதைப் பயன்படுத்துவதைக் குறித்து ஆராயவேண்டும். இந்தியாவில் உள்ள அனைத்து தேசிய மொழிகளும் வளம்பெறச் செய்யும் திட்டம் ஒன்றினை ஒன்றிய அரசு வகுத்துச் செயல் படுத்த வேண்டும். ஒன்றிய அரசு தேர்வுகளை அவரவர்கள் தாய்மொழியில் எழுதுவதற்கு ஏற்ப அனைத்துத் தேசிய மொழிகளையும் ஒன்றிய அரசு தேர்வு மொழிகளாக ஆக்கவேண்டும்” என தலைவர் காமராசர் கூறிய யோசனைகளைச் செயற்குழுவினர் ஏற்றுக்கொண்டு இந்த அடிப்படையில் ஒரு தீர்மானத் தையும் நிறைவேற்றினர். மத்திய அரசுத் தேர்வுகளை இந்தியில் நடத்தினால் இந்தி பேசும் பகுதி மாணவர் களே பெரிதும் பயனடைவார்கள். இந்தி பேசாத பகுதி மாணவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்ற அச்சம் இத்தீர்மானத்தின் மூலம் நீக்கப்பட்டது. இந்திக் குச் சமமான தகுதி பிற மாநில மொழிகளுக்கும் கிடைக்க இத்தீர்மானம் வழி வகுத்தது.

இந்தியின் தீவிர ஆதரவாளர்களான தலைமை யமைச்சர் லால்பகதூர், உள்துறை அமைச்சர் நந்தா உள்பட அனைவரும் இத்தீர்மானத்தை ஏற்றுக் கொண்டனர். இந்தி ஆதரவாளர்களும் இந்தி எதிர்ப் பாளர்களும் ஒப்புக்கொள்ளக்கூடிய வகையில் மொழிப் பிரச்சினைக்குக் காமராசர் தீர்வு கண்ட விதத்தை அனைவருமே பாராட்டினார்கள். பதினைந்து தேசிய மொழிகளிலும் தேர்வு எழுதும் திட்டத்திற்கு முதலில் எதிர்ப்பு தெரிவித்த மொரார்ஜி தேசாய், டாக்டர் இராம் சுபாக்சிங் போன்றவர்கள் கூட காமராசரின் விளக்கத் திற்குப் பிறகு இதை ஏற்றுக் கொண்டனர். காங்கிரசுத் தலைவர் காமராசர் கூறிய யோசனைகளை ஏற்று அதற்கிணங்க செயற்குழு நிறைவேற்றிய இந்தத் தீர்மானத்தை அனைத்து மாநிலங்களிலும் உள்ள ஏழை எளிய மக்கள் உற்சாகத்துடன் வரவேற்றார்கள். ஆனால் ஆங்கிலம் கற்ற வர்க்கத்தினரும் அதிகாரி களும் இதைக்கண்டு எரிச்சல் அடைந்தார்கள். தலை முறை தலைமுறையாக ஆங்கிலத்தைப் பயின்று அதன் பயனாக அரசுப் பதவிகளை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள கூட்டத்தினர் சொல்லொணாத ஆத்திரம் அடைந்தனர். எல்லா மாநில மொழிகளிலும் அரசுத் தேர்வுகள் எழுதுவதற்கு அனுமதிப்பதன் மூலம் ஆங் கிலம் அகற்றப்பட்டு தங்களின் ஏகபோக ஆதிக்கம் தகர்க்கப்படும் என்ற அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டது. இதன் காரணமாகத்தான் அவர்கள் காமராசரின் யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

இதையொட்டி தமிழகம் முழுவதும் நடைபெற்ற பல் வேறு பொதுக் கூட்டங்களில் பெருந் தலைவர் காமராசர் உரையாற்றும்போது பின்கண்ட கருத்துகளை வலியுறுத்தினார்.

“தலைமுறை தலைமுறையாக ஆங்கிலம் பயின்று வருகிறவர்கள் நிருவாகத் துறையில் தங்களுக்கு இருந்துவரும் ஏகபோகத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும், நிருவாகத்தில் பாமர மக்கள் பங்குபெறு வதைத் தடுப்பதற்காகவும்தான் ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள்.

பரம்பரைப் பரம்பரையாகப் பணக்காரர்களாக இருந்தவர்களும், பதவி அனுபவிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தவர்களும்தான் ஆங்கிலமே நீடிக்க வேண்டும் என்று ஒரு போராட்டமே நடத்தினார்கள். இந்தி எதிர்ப்பு என்ற பெயரால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டமானது சோசலிசத்தை எதிர்க்கிறவர்கள் கண்டுபிடித்த ஒரு வழி யாகும்.

ஐ.ஏ.எஸ். தேர்வை இந்தியில் எழுதினால் இந்தித் தாய் மொழிக்காரனுக்குத்தான் சலுகை உண்டாகிவிடும் என்று சொல்லுகிறார்கள். தில்லி செயலகத்தில் செயலா ளராக இருப்பவன் இந்தி வந்தால் தனக்குக் கஷ்ட மாச்சே என்று நினைக்கிறான். அத்தோடு கல்லூரியில் படிக்கிற அவன் பிள்ளைக்கும், ஆங்கிலவழிப் பள் ளியில் படிக்கிற அவன் பேரனுக்கும் இந்தி வந்தால் வேலை கிடைக்காதே என்று நினைத்துக் கொள் கிறான்.

அதற்காகத்தான் நான் கேட்கிறேன், என் தாய்மொழி தமிழ் ஐ.ஏ.எஸ் தேர்வை என் மொழியிலும் நடத்து என்று கேட்கிறேன். அதுமட்டுமல்ல் நமது மாநில அரசு நடத்துகிற தேர்வு எல்லாமே தமிழில் நடத்தனும் என் கிறேன். நான் முதல் மந்திரியாய் இருந்தபோது தமிழை ஆட்சிமொழி ஆக்கினோம். ஆனால் அரசு தலைமைச் செயலகத்தில் இருக்கிறவங்க தமிழை அங்கே நுழைய விடுகிறார்களா? தில்லியிலே இருக்கிற மாதிரியே இங்கேயும் ஆங்கிலம் படித்தவர்கள் தமிழை நுழைய விடமாட்டேன் என்கிறார்கள். நான் என் தாய் மொழியிலே இந்தப் தேர்வையெல்லாம் நடக்கணும் என்கிறேன் இது தப்பா?

இதைச் சொல்லும்போதுதான் பரம்பரையாய் பண ஆதிக்கம் படைத்தவர்களும் உத்தியோக ஆதிக்கம் படைத்தவர்களும், இருந்த ஆதிக்கம் பறி போகுதே என்று எதிர்ப்புக் கூச்சல் போடுகிறார்கள்.”







சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# வரியைக்கட்டு அல்லது வரிசையில் நில்!

அக்டோபர் 22, 2022

கொழும்பில் உள்ள முன்னணி ஆங்கில வாரப்பத்திரிகை ஒன்றின் ஊடகவியலாளர் என்னிடம் கேட்டார்..." யாழ்ப்பாணத்தில் ஓட்டோ மாபியாக்களை யார் கட்டுப்படுத்துவது?" என்று. அண்மையில் அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்த பொழுது சிறிய தூரத்துக்கு அதிக தொகை பணத்தை அவர்கள் கேட்டதாகவும் அவர் முறையிட்டார். ஆனால் கொழும்பில் குறுந்தூரங்களுக்கு ஆகக் குறைந்தது 120 ரூபாய்களும், அதற்கு மேற்பட்ட தூரங்களுக்கு மீற்றர் கணக்கின்படி காசு அளவிடப்படுவதாகவும் அவர் சொன்னார்." யாழ்ப்பாணத்தில் முச்சக்கர வண்டிகளில் ஏன் மீற்றரைப் பொருத்தக் கூடாது?" என்றும் கேட்டார். அதுமட்டுமல்ல "பிக்மி" போன்ற நிறுவனங்கள் யாழ்ப்பாணத்திற்கு வர முயற்சித்த போதும் அதனை முச்சக்கர வண்டி ஓட்டுநர் சங்கம் போன்றன வரவேற்கவில்லை என்ற ஒரு தகவல் தனக்குக் கிடைத்ததாகவும் அவர் சொன்னார்." பிக்மி போன்ற நிறுவனங்களை யாழ்ப்பாணத்துக்குள்




அனுமதித்தால் அது மக்களின் பயணச்சுமையை குறைக்கும் அல்லவா ?" என்றும் கேட்டார்.

அவர் கூறுவதில் உண்மை உண்டு. திருநெல்வேலியில் இருந்து யாழ் நகரப் பகுதிக்கு செல்வதற்கு முன்பு முகம் தெரிந்த ஓட்டக் காரர்கள் 200 ரூபாயும் முகம் தெரியாதவர்கள் 250 ரூபாயும் எடுத்தார்கள். ஆனால் இப்பொழுது 600 ரூபாய்க்குமேல் கேட்கிறார்கள்." பெட்ரோல் விலை இறங்கிவிட்டது ஏன் கட்டணத்தைக் குறைக்க கூடாது?" என்று கேட்டால்," பெட்ரோல் விலை மட்டும்தானே இறங்கியிருக்கிறது? ஏனைய பொருட்களின் விலை இறங்கவில்லையே ?"என்று கூறுகிறார்கள்.

சிறிய ஆனால் கவர்ச்சியான "செமி கொஸ்மோபொலிற்றன்" நகரமாகிய யாழ்ப்பாணம் புலப்பெயர்ச்சி காரணமாகவும் இடப்பெயர்ச்சி காரணமாகவும் அதன் சனப்பொலிவை இழந்துவிட்டாலும்கூட, இப்பொழுதும் அதன் தெருக்களில் ஜனங்கள் நிறைந்து வழிந்து கொண்டே இருக்கிறார்கள். இதனால் முச்சக்கர வண்டிகளுக்கான தேவை அதிகம் உண்டு. ஆனால் முச்சக்கர வண்டிக்காரர்கள் பெட்ரோல் விலை உயரும்பொழுது உயர்த்திய கட்டணத்தை இறக்கத் தயாரில்லை. யாழ்ப்பாணத்து ஊடகவியலாளர் ஒருவரும் சொன்னார், அண்மையில் தான் கொழும்புக்குச் சென்ற பொழுது அங்கே ஒரு குறுந்தூர ஓட்டோப் பயணத்தின் பின் எவ்வளவு கட்டணம் என்று கேட்டபொழுது அந்த ஓட்டோச் சாரதி தன்னிடம் 100 ரூபாய் கேட்டார் என்றும், தனக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது என்றும். தலைநகரில் ஓட்டோக் கட்டணங்கள் குறையத் தொடங்கிவிட்டன. ஆனால் யாழ்ப்பாணத்தில் ஏன் குறையவில்லை? யார் அதைக் குறையவிடாமல் தடுப்பது? பிக்மி போன்ற சேவைகளை யாழ்ப்பாணத்துக்கு வரவிடாமல் தடுப்பது யார்? ஓட்டோ உரிமையாளர்கள் மீற்றர் பூட்ட மறுப்பது ஏன்? அதைத் தட்டிக் கேட்பது யார்?

ரணில் விக்கிரமசிங்க ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் பொருளாதார நெருக்கடியின் விளைவுகளை ஒப்பீட்டளவில் கட்டுப்படுத்தி வருகிறார். குறிப்பாக எரிபொருள், எரிவாயு விநியோகம் ஒப்பீட்டளவில் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டது. மண்ணெண்ணெய் விநியோகமும் ஒப்பீட்டளவில் சீராகி வருகிறது. அதனால் கடல் படுதிரவியங்களின் விலை படிப்படியாக இறங்கி வருகிறது. கோழி இறைச்சியின் விலை அண்மையில் சடுதியாக குறைந்தது. ஆனால் செய்திகளில் பொருட்களின் விலைகள் குறைக்கப்படுமளவுக்கு நடைமுறையில் விலைகளைக் குறைப்பதற்கு வியாபாரிகள் தயாரில்லை. இலங்கை போன்ற நாடுகளில் ஏறிய விலைகள் பொதுவாக இறங்குவது குறைவு என்று பொருளியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். அதை அவர்கள் "கீழ்நோக்கிய இறுக்கம்" என்று வர்ணிக்கிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்க ஒருபுறம் விலைகளைப் படிப்படியாகக் குறைக்கிறார். இன்னொருபுறம் வரிகளை கூட்டத் தொடங்கியிருக்கிறார். அது மட்டுமல்ல, புதிதாக வரிகளையும் விதிக்க தொடங்கியிருக்கிறார். வரிசைகளில் நிற்பதை தடுப்பதென்றால் வரிகளைக் கட்டுங்கள் என்று அவர் அண்மையில் நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போது கூறினார். மேலும் பொருளாதார நெருக்கடிகளுக்கு அடிப்படைக் காரணம் 2019-ல் ராஜபக்சக்கள் செய்த வரிக்குறைப்பே என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். வரியைக் குறைத்தபடியால் நாட்டின் வருமானம் குறைந்ததுதான் பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என்று கூறும் அவர் அதனால் புதிய வரிகளை விதிக்க வேண்டியிருக்கிறது என்றும் கூறுகிறார்.

2019இல் கோட்டாபய ஆட்சி பொறுப்பை ஏற்றதும் வரிகளை குறைத்தமைதான் பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என்று ரணில் விக்கிரமசிங்க மட்டும் கூறவில்லை. ஏற்கனவே பொருளியல் நிபுணர்கள் அதைக் கூறிவருகிறார்கள். மிகக்குறிப்பாக கொழும்பை மையமாகக் கொண்டியங்கும் "வெரிற்றே ரிசேர்ச் இன்ஸ்ரிரியூட்" எனப்படும் நிறுவனம் இதுதொடர்பில் தொடர்ச்சியாகக் கருத்து தெரிவித்து வருகிறது.

வெரிற்றே ரிசேர்ச் இன்ஸ்ரிரியூட் கூறுவது உண்மைதான். ஆனால் அது ஒரு பகுதி உண்மை மட்டுமே. வரிக் குறைப்பை ராஜபக்சக்கள் ஏழைகளுக்காக செய்யவில்லை. அதையவர்கள் பணக்காரர்களைத் திருப்திப்படுத்தவே செய்தார்கள் என்பது முதலாவது விடயம். இரண்டாவது விடயம், வரிக்குறைப்பு மட்டும்தான் பொருளாதார நெருக்கடியை தோற்றுவித்தது என்பது முழுமையான விளக்கம் அல்ல. வரிக்குறைப்பு பல காரணங்களில் ஒன்று என்பதே சரி.

பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணம் இனப்பிரச்சினைதான். இனப்பிரச்சினை காரணமாக நாடு அதன் முதலீட்டு தகுதியை இழந்து விட்டது. 2009க்கு பின்னரும் அந்த தகுதியை மீளப் பெற முடியவில்லை. ஏனென்றால் அந்த யுத்த வெற்றி நியாயமான வழிகளில் பெறப்படவில்லை. அது நாட்டின் ஒரு பகுதி மக்களை பூச்சி புழுக்களைப் போல கொன்றொழித்துப் பெறப்பட்ட ஒரு வெற்றி. தமிழ்மக்கள் குற்றம் சாட்டுவதுபோல இனப்படுகொலை மூலம் பெறப்பட்ட ஒரு வெற்றி.எனவே இனப்படுகொலையை அரசியல் வெற்றியாக மாற்ற முடியவில்லை. அதன் விளைவாகத்தான் தமிழர்கள் நீதி கேட்டு உலக சமூகத்தின் கதவுகளைத் தட்டத்தொடங்கினார்கள். அதுவும் நாட்டின் முதலீட்டுக் கவர்ச்சியை குறைத்துவிட்டது. 2009க்கு பின்னரும் முதலீட்டாளர்கள் நாட்டை நோக்கி வரத் தயங்குகிறார்கள். எனவே இனப் பிரச்சினைதான் பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணம். வரிக் குறைப்பு, ஈஸ்டர் குண்டு வெடிப்பு, பெருந் தொற்று நோய், உக்ரைன் யுத்தம் போன்றன உப காரணங்கள்தான்.

நாட்டின் பொதுத்துறை ஊதியத்தில் சுமார் 50% படைத்தரப்புக்கு வழங்கப்படுகிறது என்றும், உலகில் 100 பேர்களுக்கு எத்தனை படைவீரர்கள் என்ற விகிதத்தில் இலங்கை பத்தாவது இடத்தில் உள்ளது என்றும் நிஷான் டி மெல்-வெரிற்றே ரிசேர்ச் இன்ஸ்ரிரியூட்டின் பணிப்பாளர் கூறுகிறார். இலங்கைத் தீவின் பாதுகாப்பு செல வினம் நாட்டின் கல்வி மற்றும் சுகாதாரச் செலவினங்கள் இரண்டையும் கூட்டிவரும் தொகையைவிட அதிகமாக இருப்பதும் பொருளாதார சீரழிவுக்கு ஒரு காரணம் என்று நிஷான் கூறுகிறார்.

எனினும், ரணில் விக்ரமசிங்கவின் வரவு செலவுத் திட்டத்திலும் பாதுகாப்புச் செலவினம் குறைக்கப்படவில்லை. மாறாக ராஜபக்சவின் வரிக்குறைப்பை ஒரு பிரதான காரணமாகக் காட்டி அதன்மூலம் அவர் புதிதாக வரிகளை நியாயப்படுத்த முயல்கிறார். அதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால் நடுத்தரவர்க்கம், கீழ் நடுத்தர வர்க்கத்தின் மடியில் அவர் கைவைக்கப் போகின்றார். ஏனென்றால் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவர் இயங்க வேண்டியுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை 22ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதும் ஐ.எம்.எப்.ஐத் திருப்திப்படுத்தும்.

2019 இல் நடந்த வரிக்குறைப்பு தொடர்பாக நிசான் டி மெல் ஒரு விடயத்தை கடந்த ஒகஸ்ட் மாதம் சுட்டிக்காட்டியிருந்தார். அந்த வரிக்குறைப்பு உரிய ஆய்வுகளின் பின் முன்னெடுக்கப்படவில்லை. இனிமேலும் வரியை கூட்டும் பொழுது அதற்குரிய ஆய்வுகள் செய்யப்படாவிட்டால் ஏற்கனவே விட்ட தவறை திரும்பவும் விடுவதாக அது அமையும் என்று அவர் எச்சரித்திருந்தார்.

புதிய வரிகளின்மூலம் ரணில் பொருளாதார நெருக்கடியின் விளைவுகளை மேலோட்டமாகத் தணிக்கக் கூடும். நெருக்கடியின் மூலகாரணத்தை நீக்க அவரால் முடியாது. ஏனென்றால் அவர் தாமரை மொட்டின் கைதியாக காணப்படும் ஒரு ஜனாதிபதி. அடுத்த மார்ச் மாத மளவில் நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் அவருக்கு கிடைத்துவிடும். அப்பொழுது அவர் தாமரை மொட்டுக்கட்சியில் தங்கியிருப்பதில் இருந்து ஒப்பீட்டளவில் விடுபடலாம். ஆனாலும் தனது சொந்தக் கட்சியை அவர் கட்டியெழுப்ப வேண்டியிருக்கிறது. அவர் ஒற்றை யானையாக நாடாளுமன்றத்தில் நிற்கிறார். சஜித்தை உடைத்து யானைகளை தன்வசப்படுத்த வேண்டும். அதற்கு கிடைத்திருக்கும் அரை ஆட்சிக்காலம் போதுமா? எனவே இனப்பிரச்சினையை தீர்ப்பது என்றெல்லாம் அவர் ரிஸ்க் எடுப்பாரா என்பது சந்தேகம்தான்.

முன்னாள் சமாதானத் தூதுவரான எரிச் சூல் ஹெய்ம்மை அவர் நாட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறார். சூல் ஹெய்ம் ஜனாதிபதிக்குரிய காலநிலை ஆலோசகர் என்று கூறப்பட்டாலும், ஐ.எம்.எப்ஐ திருப்திப்படுத்த அரசாங்கம் இனப்பிரச்சினையை தீர்க்கமுயற்சிப்பது போன்ற ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்ப திட்டமிடுகிறதா என்ற சந்தேகங்களும் உண்டு. சூல் ஹெய்ம் கொழும்புக்கு வந்த காலகட்டத்தில் தனது ருவிற்றர் பக்கத்தில் பின்வருமாறு பதிவிட்டிருந்தார்..." மிக விரைவான வழி எப்பொழுதும் நேரான கோடாக இருப்பதில்லை".அதில் அவர் பிரசுரித்துள்ள சிறு காணொளியின்படி வளைந்த கோடே விரைவானது என்று காட்டப்படுகிறது. அந்த வளைந்த பாதை எது?

ரணில் விக்கிரமசிங்கவிற்கு இது ஏறக்குறைய கடைசி ஓவர். மிஞ்சிப் போனால் இன்னுமொரு ஓவர் இருக்கலாம். அவருக்கு வயதாகிவிட்டது. தன்னுடைய கடைசிக் காலத்தில் முழு நாட்டையும் பலப்படுத்துவதா? அல்லது தனது சொந்தக் கட்சியான யு.என்.பியை பலப்படுத்துவதா? என்று அவர் முடிவெடுக்க வேண்டும். அவர் பதவியேற்ற அறையின் பின்னணிச் சுவரில் மூன்று ஒளிப்படங்களைத் தொங்கவிட்டிருந்தார். டி.எஸ்.சேனநாயக, டட்லி சேனநாயக, ஜெயவர்த்தன ஆகிய மூவரின் ஒளிப்படங்களுமே



அவை.இதன்மூலம் அவர் என்ன கூற வருகிறார்? அவருடைய அண்மைக்கால நடவடிக்கைகளில் அவர் பெருமளவுக்கு ஜெயவர்த்தனாவை பின்பற்றுவது போல தோன்றுகிறார்.

எனவே அவருக்கு முன்னால் இரண்டு தெரிவுகள்தான் உண்டு.முதலாவது தெரிவு அன்ரன் பாலசிங்கத்தை தீர்க்கதரிசி என்று நிரூபிப்பது.இரண்டாவது தெரிவு தான் ஒரு தீர்க்கதரிசி என்று நிரூபிப்பது.அன்ரன் பாலசிங்கத்தை தீர்க்கதரிசியாக நிரூபிப்பது என்றால் ஜெயவர்த்தனவின் வழியில் தொடர்ந்து போக வேண்டும். யூ.என்.பியைப் பலப்படுத்த வேண்டும். அல்லது, தன்னுடைய கடைசி ஓவரை நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்து, நாட்டின் சமாதானத்துக்கு அர்ப்பணித்து உழைப்பாராக இருந்தால், அதற்காக சிங்கள பௌத்த பெருந்தேசியவாதக் கட்டமைப்பை எதிர்த்து ரிஸ்க் எடுப்பாராக இருந்தால் நாடு அவரை ஒரு தீர்க்கதரிசி என்று போற்றும். இல்லையென்றால் நரி என்று தூற்றும்

நன்றி: நிலாந்தன்

# மாவீரர் நினைவாக...



வாழ்க்கையை
விடுதலைப் போரினாலும்
மரணத்தை அஞ்சாத தியாகத்தாலும்
கடைசி வரைக்கும்
கனப்படுத்தி
பூமி கனக்கப்
புதைந்த புலிகளே!

காலத்தின் செவிகளில்
உமது கர்ச்சனை...
யுகங்களின் நெற்றியில்
உமது திருப்பெயர்...

நாளைய தமிழினப்
பிஞ்சு முகங்கள்
முகர்ந்து பார்க்கும்
ஒவ்வொரு பூவிலும்
உங்களின் உயிரின்
வாசம் கமழும்...

நாளைய விடியலை
ஈழத்தில் எழுத
நீளும் கதிர்கள்
நிச்சயம் உமது
உயிரின் சூடும்
ஒன்றியிருக்கும்.

காலியான சயனைட் குப்பிகளும்
கனன்று கிடக்கும் தோள் துப்பாக்கிகளும்
இன்னும் உலராத இளைய ரத்தமும்
அனைத்திலும் மேலாய்
உம் வாழ்வும் மரணமும்
விடுதலை வரித்த
அடையாளங்களாய்
வரலாற்று வரிகளில்
கனத்துக் கிடக்கும்
ரத்த சாட்சிகளே
வீரவணக்கம்.

# செஞ்சோலை! சிறுவர் இல்லத்தின் வரலாறு



செஞ்சோலை! சோலை என்பது சுகந்தம் தரும் பூங்கா. ஆயிரம் பூக்களின் அழகு சுமந்த தோட்டம். நாசியில் அவற்றின் வாசனையை நுகர்வது போன்ற உணர்வைத் தோற்றுவிக்கும் சொல். ஒருவகையில் செஞ்சோலையும் மனங்கமழும் மலர்ச் சோலைதான். ஏனெனில் சின்னப்பூக்கள் பலவற்றின் பெரிய வீடு அது. கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளங்கள் வாழும் இல்லம்.

சிறகசைத்துப் பறந்து வானத்தை வலம் வரும் சிட்டுக் குருவிகளின் வளாகம். உறவுகளைத் தொலைத்த பிஞ்சு நெஞ்சங்களினை உள்ளன்போடு அரவணைக்கும் அன்னையகம். செஞ்சோலை எனும் வீடு எப்படித் தோற்றம் கண்டது என்பதனை நாம் சற்றுத் திரும்பிப் பார்த்தே ஆகவேண்டும். போர் நடக்கும் எந்தவொரு தேசத்திலும் சாத்தியமாக்கப்படாத மனிதாபிமானச் செயற்பாட்டைத் தழிழீழத்திற்தான் நாம் காணலாம்.

தமிழீழம் எனும் தமிழர் தாயக பூமி முழுமையான விடுதலையைக் காண்கின்ற வேளையில் அங்கே ஆதரவற்றர்கள், இயலாமையில் வாழ்பவர்கள், ஏழைகள், கைவிடப்பட்ட முதியோர்கள் கையேந்தி நிற்பவர்கள் என்று யாருமே இருக்கக் கூடாது. போரினால் ஏற்படும் நிரந்தரமான தாக்கங்களுள் மக்கள் நசுங்கிப் போக இடமளிக்கக்கூடாது. மாறாக எல்லா வகையிலும்தலை சிறந்த நாடாக, இந்த உலகிற்கே முன் மாதிரியான ஒரு நாடாக தமிழீழம் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் மிகமிக உறுதியாக இருந்தார்.

மண்வளம், மக்களின் வாழ்க்கை முறைமை வாழ்வாதாரம்,





கல்வி, கலை பண்பாடு எல்லாவற்றிலும் அதிக அக்கறை செலுத்தினார். ஒரு புறம் மண்மீட்பிற்கான விடுதலைப் போரை நடாத்திக் கொண்டு மறுபுறம் தமிழீழத்தின் எதிர்காலத்தைச் சிறப்பான முறையிற் கட்டியெழுப்பும் பணிகளைச் செவ்வனே செய்து மேற்கொண்டிருந்தார் தலைவர் அவர்கள். அந்த வகையில் உருவான சோலைகள் கல்விக் கூடங்கள் ஏராளம்.

செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச்சோலை, அன்புச் சோலை, வெற்றிமனை, லெப். கேணல் நவம் அறிவுக்கூடம் போன்றவை அவற்றில் சில. யுத்தத்தினாலும் சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும் தாய்தந்தையரை இழந்து தவிக்கும் பெண்குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்டதே செஞ்சோலைச் சிறுவரில்லம். ஆண் குழந்தைகளைக் காத்து வளர்த்தது காந்தரூபன் அறிவுச்சோலை. ஆதரவற்ற முதியோர்களுக்காக அன்புச்சோலையும், போர் அனர்த்தத்தினால் மனநிலை பாதிக்கப்பட்ட பெண்களுக்காக வெற்றிமனையும், யுத்தகளங்களிலும், விமானக்குண்டுத் தாக்குதல்களிலும் அங்கங்களை இழந்தவர்களுக்காக லெப். கேணல் நவம் அறிவுக்கூடமும் உருவாக்கப்பட்டன.

**"சீர்பல ஏந்திநம் சிந்தையில் நிறைந்திடும் செந்தமிழீழத்தின் செஞ்சோலை வேரிடையூறிய நீரென எங்களின் வீடெனவாகிய செஞ்சோலை"**

இவை செஞ்சோலைச் சிறுவரில்லத்தின் கீதத்திலிருந்து சில வரிகள். 1991ம் ஆண்டு யூலை மாதம் 10ம் திகதி 15 மாணவிகளுடன் செஞ்சோலை மகளிர் பாடசாலை ஆரம்பமானது. தலைவர் அவர்கள் இந்த நாளினைத் தேர்ந்தெடுத்து செஞ்சோலையின் பாடசாலையை ஆரம்பிக்க ஒரு காத்திரமான காரணமிருக்கிறது.

1990ம் ஆண்டு இதே நாளில் வல்வெட்டித்துறைக் கடற்பரப்பில் வீரகாவியம் படைத்த கடற்கரும்புலிகள் மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலினஸ் என்னும் மாவீரர்களைப் பற்றி நாம் அறிந்திருக்கின்றோம். இவர்களில் மேஜர் காந்தரூபன் அவர்கள் தன் இலக்கு நோக்கி விரையுமுன் தலைவர் அவர்களிடம் பகிர்ந்து கொண்ட தனது ஆசை , தாய் தந்தையரைப் பிரிந்து, இழந்து வாழும் குழந்தைகளுக்கு ஓர் இல்லத்தை அமைத்து அவர்களை நல்ல மனிதர்களாக உருவாக்க வேண்டுமென்பது தான்.

தலைவர் அவர்களின் எண்ணக்கருக்களில் ஒன்று மேஜர் காந்தரூபனின் கனவாக மலர்ந்தபோது செஞ்சோலை மகளிர் பாடசாலை தோற்றம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் சிறிய இடம் ஒன்றில் பாடசாலையின் செயற்பாடுகள் ஆரம்பமாகி நடந்து கொண்டிருந்த போது மாணவியர் தொகை அதிகரிக்க ஆரம்பித்தது.

எனவே செஞ்சோலைப் பெண் குழந்தைகளுக்காக வேண்டி யாழ் சண்டிலிப்பாயில் ஓர் சிறப்பான இல்லம் நிர்மாணிக்கப்பட்டு ஐப்பசி 22ம் நாள் தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களால் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. அப்போது 23 பிள்ளைகள் கொண்ட பூஞ்சோலையாகத் திகழ்ந்த செஞ்சோலை, காலப்போக்கில் நூற்றுக்கு மேற்பட்ட குழந்தைகளைக் கொண்ட இல்லமாக விளங்கியது.

"எனது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு இளம் பரம்பரை தோற்றங்கொள்ள வேண்டும். ஆற்றல் மிகுந்தவர்களாக, அறிவு ஜீவிகளாக, தேசப்பற்றாளர்களாக, போர்க்கலையில் வல்லுனர்களாக, நேர்மையும் கண்ணியமும் மிக்கவர்களாக ஒரு புதிய புரட்சிகரமான பரம்பரை தோன்றவேண்டும். இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக, நிர்வாகிகளாக, ஆட்சியாளர்களாக உருப்பெற வேண்டும். "

என்ற தனது சிந்தைக்குச் செயல்வடிவம் தந்தார் தலைவர். அதன்வழி அவரின் நேரடிக் கண்காணிப்பில், பாதுகாப்பில் வளர்க்கப்பட்டனர் குழந்தைகள். கைக் -குழந்தைகள் முதல் 18 வயது வரையான பெண் பிள்ளைகள் தங்கள் எதிர்காலம் நோக்கி நடக்கிறார்கள். பல்வேறு சூழலிருந்து இவர்கள் வந்திருந்தாலும் ஒரே குடும்பமாக செஞ்சோலைக் குடும்பத்தில் இணைந்துள்ளார்கள். முன்பள்ளி, ஆரம்பப்பள்ளி, உயர்



பாடசாலை போன்ற கல்வி முறைக்கேற்ப கல்வியறிவுயூட்டப்பட்டது.

கலைகள் பலவும் அவரவர் விருப்பத்திற்கும் திறமைக்கும் ஏற்ப கற்பிக்கப்பட்டது. விளையாட்டுக்கள் பல்வேறு கைவினைத் திறன்கள் வெளிக்களச் செயற்பாடுகள் போன்றவற்றையும் விரும்பி மேற்கொண்டனர் செஞ்சோலை மாணவியர். நல்லொழுக்கம், நல்மனப்பாங்கு, நற்பண்புகள், ஆளுமைத்திறன், துணிச்சல் முற்போக்குச் சிந்தனை போன்றவற்றை மேம்படுத்துவதற்கு ஏதுவான சிறப்பான பாடத்திட்டங்களும் செயற்படுத்தப்பட்டன.

இந்த சமயம் போர்ச்சூழலால் செஞ்சோலை இடம்பெயர வேண்டிய நிர்ப்பந்தங்கள் அடிக்கடி நிகழ்ந்தன. இலங்கை அரசபடை பலாலியிலிருந்து முன்னகர்வுகளை மேற்கொண்டு தாக்குதலை உக்கிரப்படுத்திய வேளை மக்களோடு மக்களாக சண்டிலிப்பாயிலிருந்து நகர்ந்து மானிப்பாய், கோப்பாய் போன்ற இடங்களில் தற்காலிகமாக சிறிது காலம் இயங்கி வந்தது. பின்பு 1993, 1994, 1995ம் ஆண்டுக் காலப்பகுதியில் அரியாலையிலும் மட்டுவில்லிலும் செஞ்சோலை தன் செயற்பாடுகளை



நிரந்தரமாக்கிக் கொண்டாலும் அதுவும் நீடிக்கவில்லை. 1995ம் ஆண்டு பிற்பகுதியில் மீண்டும் இலங்கை இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை காரணமாக செஞ்சோலை கிளிநொச்சியிலுள்ள திருவையாறு என்னுமிடத்திற்கு இடம் பெயர்ந்தது. தொடர்ந்து மல்லாவியில்











வடகாடு முல்லைத்தீவு வள்ளிபுனம், இரணைப்பாலை மீண்டும் வள்ளிபுனம் கிளிநொச்சி என ஓடி ஓடிக் களைத்தாலும் மாணவியரின் கல்விச் செயற்பாடுகள் அங்கும் தொடர்ந்தன.

இது இவ்வாறிருக்க மனதுக்கு நெகிழ்வான ஒரு முக்கியமான விடயத்தினை நான் இங்கே பதிவு செய்தே ஆகவேண்டும் என்று விரும்புகிறேன். செஞ்சொலை மகளிர் இல்லம் ஆரம்பித்த நாளில் இருந்து அதன் வளர்ச்சியிலும் சிறப்பான பல செயற்பாடுகளிலும் மிக முக்கிய பங்காற்றியவர் “தமிழீழத்தின் முதற் பெண்மணி” திருமதி மதிவதனி பிரபாகரன் அவர்கள். தாய்க்கு தாயாக நின்று செஞ்சோலைக் குழந்தைகளின் மனதை வென்றவர்.

குழந்தை வளர்ப்புப் பற்றிய பல அறிவுரைகளை வழங்கி, செஞ்சோலையில் பணியாற்றிய அனைவரையும் புடம்போட்டவர். பருவவயதுப் பிள்ளைகளுக்கு வாழ்க்கை என்றால் என்ன, தழிழீழ பெண்கள் எப்படி வாழவேண்டும் என்பதனைக் கற்பித்தவர். அவர் குழந்தைகளோடு குழந்தைகளாக மாறி, குதூகலித்து மகிழும் தருணங்கள் மனதுக்கு நெகிழ்வானவை. செஞ்சோலைச் சிறார்களால் “மாமி” என்று அன்பு ததும்ப உரிமையோடு அழைக்கப்பட்டவர் அண்ணி மதிவதனி அவர்கள்.

தலைவர் தன் துணைவியார் குழந்தைகளோடு கூடி செஞ்சோலை அறிவுச்சோலைச் சிறார்களிடம் வருகை தந்து, தைப்பொங்கல் முதல் நத்தார் தினம்வரை எல்லாத் திருநாட்களையும் சிறப்பிப்பார். எப்பொழுதும் அக்குழந்தைகளின் நல்வாழ்வுபற்றிய ஆக்கபூர்வமான யோசனைகளைப் பகிர்ந்து கொண்டு தலைவர் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட அண்ணியின் பங்கு மகத்தானது. செஞ்சோலை, அறிவுச்சோலை குழந்தைகள் உரிமையோடு உறவாடும் குடும்பமாக தலைவர் அவர்களின் குடும்பம் திகழ்ந்தது என்றால் மிகையாகாது.









2006ம் ஆண்டுக் காலப்பகுதியில் விமானத்தாக்குதலுக்கு இலக்கானது வள்ளிபுனம் செஞ்சோலை வளாகம். அங்கு கற்கை நெறிக்காகக் கூடியிருந்த செஞ்சோலை மாணவியர் பலரை நாம் இழந்தோம் அன்று. 2009ல் வன்னியை இராணுவம் வல்வளைப்புச் செய்தபோது அந்தக் கோரமான நேரங்கள் செஞ்சோலைப் பிள்ளைகளையும் கடுமையாகத் தாக்கிற்று. பல குழந்தைகள் காயம் பட்டனர். சில குழந்தைகள் உயிரை விட்டனர். மீதிக் குழந்தைகள் செஞ்சோலைப் பணியாளர்கள் சிலரால்க் காப்பாற்றப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்தாலும் இன்று செஞ்சோலை என்று எம்மால் பெயர் சொல்ல முடியாத நிலமையில் வெவ்வேறு இல்லங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

“இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்.“

இது தலைவர் அவர்களின் உள்ளக்கிடக்கை பேரவா என்று கூடச் சொல்லலாம்.ஆனால் இது நிறைவேறுமா என்பது வினாவாக இருந்தாலும், தாய்தந்தையரை இழந்து வாழும் குழந்தைகளின், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக்கும் உயரிய பணி உலகெங்கும் பரந்துவாழும் எங்கள் தமிழ் உறவுகளிடமே கையளிக்கப்பட்டுள்ளது. இது காலத்தின் கட்டளை. தலைவரையும் தாய்மண்ணையும் நேசிக்கும் ஒவ்வொரு தமிழரின் தலையாய கடமையும் இதுவே என்பதை உணர்ந்து செயற்படுவோமாக.






“சோலையிலே பாடும் செஞ்சோலையிலே பாடும் பூங்குயில் கீதங்கள் கேட்கிறதா. புயல் தாங்கிடும் கீதங்கள் கேட்கிறதா?”

நன்றி: கலைமகள்

# சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள் Children's homes, a few nursing homes

இலங்கையில் யுத்தம் ஓய்ந்து ஒரு சாகாப்தகாலம் கடந்து விட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் பல பராமரிப்பு இல்லங்கள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவை சிறுவர், மூத்தோர், சிறப்புத் தேவையுள்ளோர் இல்லங்கள் என வகைப்படும். இவை அனைத்தும் பொது மக்களின், பொது அமைப்புக்களின் நன்கொடைகளிலேயே தங்கியுள்ளன. தற்போதைய கோவிட்19 காலத்தில் நன்கொடைகள் குறைந்துள்ள இவ்வேளையில் எம்மாலான சிறு உதவிகளையேனும் இவ்வில்லங்களுக்கு வழங்கி இந்த இக்கட்டான காலத்தை கடக்க அனைவரும் உதவவேண்டுகின்றோம்

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

“இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்.“



**Amman Women & Child Development Center**
Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai 4 67 490 4955

**Hermans Girls Home**
Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai 97 76 058 5344

**Jesus Lives Girls Home**
Main St., Kalmuanai - Amparai 01 94 67 492 1161

**Methodist Girls Home**
Wesly School Rd, Kalmuanai - Amparai 94 67 222 9182

**RKM Sharatha Girls Home**
Girls Vidyalaya Rd, Karaithivu Amparai 05 94 67 222 3600

**Seephe Divi Child Delelopment Centre**
Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai 94 67 226 1144

**Sri Indasara Child Development Centre**
DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai 94 27 562 2919

**St. Maryís Boys Home**
Yard Rd, Kalmunai - Amparai 01 94 71 354 5782

**Swami Vipuilanantha Boys Children Development Centre**
Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai 94 67 227 7514

**Canaan Harvest Childrenís Home**
No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla 94 77 229 2022

**Up Country Children Home**
19/6, Badulupitiya Rd - Badulla 94 55 222 3335

**Arutpani Girls Home**
Beach Rd, Navakkuda - Batticaloa 94 77 6849

**Assisi Boys Home**
Main Rd, Kurukulmadam - Batticaloa 94 65 225 0313

**Benthel Boys Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

**Benthel Girlís Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

**Bethel Girls Children Home**
Vipulanada Rd, Valichenai - Batticaloa 94 77 515 3078

**Eravur Children Care Home**
Meerakerny Rd, Eravur - Batticaloa 94 77 996 6345

**Good Shepherd Children Home**
Post Office Rd, Valaichenai - Batticaloa 94 65 225 7400

**Hari Boys Home**
New Kalmuani Rd - Batticaloa 94 65 222 3653

**Jeevananthan Girls Home**
Main Rd, Pudukuduirippu - Batticaloa 94 65 365 0438

**Kattankudy Boys Home**
Kattankudy 01 - Batticaloa 94 65 224 5308

**London Sivan Kovil Girls Home**
Main Rd, Settipalayam - Batticaloa 94 65 205 6336

**Managayarkarasi Girls Home**
Maruthadi Rd - Batticaloa 94 65 205 7310

**Manikkavasagar Boys Home**
Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa 94 77 191 3037

**Methodist Girls Home**
Bar Rd, Kotamunai - Batticaloa 94 65 222 5402

**Miyani Boys Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 459 0298

**Miyani Girls Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 792 6410

**Pariyowan Boys Home**
Trinco Rd, Santhurukondan - Batticaloa 94 05 222 2524

**Ramakrishana Boys Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

**Ramakrirushana Girls Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

**Sakthi Girls Home**
Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa 94 65 225 0745

**Shakthi Girls Home**
Arasadi Thervu, Kokaticholai - Batticaloa 94 65 364 2290

**Shanthi Bawan Girls Home**
Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa 94 65 222 2524

**Spaks Girls Home**
Main Rd, Periya Kallaru - Batticaloa 94 67 222 1875

**Thilahawathiyar Girls.Children Home**
Main St., Kathiraveli, Vaharai - Batticaloa 94 77 629 8461

**Thilahawathiyar Girls Home**
Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa 94 65 225 1166

**Thiruniyanasampathar Gurukulam**
Main Rd, Kaluthavalai - Batticaloa 94 65 225 0277

**Trust Village Womens Development Center**
Savukady Rd, Mayilampavelhi - Batticaloa 94 76 789 7573

**Vidhyajothi Boys Home**
Central Rd - Batticaloa 94 77 481 6576

**Vipulanantha Children Home**

Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101
**Vivehanada Children Home**
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442
**Yoga Suwami Saiva Girls Children Home**
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420
**St.Joseph Elders Home**
Trinco Rd- Batticaloa 94 71 851 1951
**Swami Vipulananthar Elder Home**
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202
**Ozanam Centre**
Sathurukondan - Batticaloa 94 65 365 8636
**Uthayam Association of Visually Handicapped**
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707

**Elim Boys Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824
**Elim Girls Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962
**Forth Sq Girls Child Development Center**
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109
**Hindu Board Boys Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304
**Hindu Board Girls Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082
**Holy Family Girls Child Development Center**
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270
**Karunai Girls Child Development Center**
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334
**Karunalayam Annai Krishnabai Girls C. D. C.**
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873
**Karunalayam Boys Children Development Center**
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002
**Salvation Army Girls Child Development Center**
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696
**SOS Village Child Development Center**
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711
**Sri Pramanatha Girls Child Development Center**
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004
**Thurkkapuram Girl Child Development Center**
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894
**Valluvar Girlsí Child Development Center**
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513
**Mother Teresa Elder Home Amithi Illam**
Kondavil - Jaffna 94 21 223 0302
**Sivapoomi Elders Home**
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230
**Sivapoomi School ForChildren with Special Needs**
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894
**Vaalvagham-Home for the Vissually Handicapped**
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331

**Aruvucholai Boys Child Development Center**
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313
**Aropanam Boys Child Development Center**
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088
**Gandhi Nilaya Chidren Home & Training Centre** - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461
**Holy Family Girls Child Development Center**
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115
**Karuna Nilayam Girls Child Development Center**
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836
**Mahadeva Saiva Boy Child Development Center**
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121
**Mahadeva Saiva Girls Child Development Center** (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119
**Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)**
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118
**Sencholai Boysí Child Development Center**
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308
**Sencholai Girlí Child Development Center**
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504
**Thangamma Elders Home** -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619
**Trist Children Home**
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694
**Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home**
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162
**Association. to Empowerthe Special Needs Children**
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776
**Killinochchi Special Needs Newtwork**
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536

**Annai Girlsí Child Development Center**
Uppukulam - Mannar 94 23 222 2483
**Anpu Sakotharar Boys Child Development Center**
Keeri - Mannar 94 77 534 4427
**Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center**
Pesalai - Mannar 94 23 205 0095
**Sivanarul Boys Child Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998
**Sivanarul Girls Children Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804
**Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory**
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545

**Saradha Mission Child Development Center**
Kirigalpotta - Matale 94 66 205 1721
**St. Francis Child Development Center**
Vihaara Rd - Matale 94 77 438 4851

**Anpu Boysí Child Development Center**
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502
**Barathy GirlChild Development Center**
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234
**Ladani Girls Child Development Center**
Silawaththai - Mullaitivu 94 77 422 8853
**Nallayan Girls Child Development Center**
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034
**Pari Girlsí Child Development Center**
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034
**Iniya Vazhvu Illam**
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949

**Happy Home Child Development Center**
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174
**Maranatha Child Development Center**
Hatton - Nuwara Eliya 94 51 222 2489
**Rainbow Child Development Center**
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680
**Shalom Child Development Center**
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222

**Annai Saratha Children Home**
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506
**Anpu Illam**
167, Central Rd - Trincomalee 94 26 222 1214
**Four Square**
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170
**Grace Girls**
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644
**Hasanath Boys**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
**Hasanath Girls**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
**My Fatherís House Boys Children Homes**
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861
**Rawlathul Athfal**
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438
**Rewathe Child Development Center**
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328
**Sivayogasamayam Swami Gangadaranatha Children Home**
64 Main St. - Trincomalee 94 26 222 2049
**Sri Sanmuga Boys** 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234
**Sri Sanmuga Girls** 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521
**Thapovanam Boys**
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
**Thapovanam Girls** Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
**Deva Anpu Children Home**
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859
**Hindu Anpakam Children Home**
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683
**Salvatorian Girls Home**
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577
**Sri Ahilandeswary Children Home** Kovilkulam - Vavuniya 94 24 222 1685
**Mother Teresa Elder Home** Pampaimadu -Vavuniya 94 24 205 4494
**Sivan Elders Home**
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827
**Thanagamma Eleders**
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766

# காந்தரூபன் அறிவுச்சோலை

ஆறு வயதுக் குழந்தை. அருகே அவனது மூன்று வயதான தம்பி இருவரும் நிமிர்ந்து மலர்களாய்த் தெரிந்தனர்!

அனாதைகள் என எண்ணி இங்கு பரிவு கொள்ள இருந்த என் உள்ளம் தலை குனிந்தது. ஓர் உறுதிப்பாடு என் உள்ளத்தில் எழுவதை உணர்ந்தேன்.

நாங்கள் நெடுநாள் எண்ணிப்பழகிய "அனாதை" இல்லமோ அதன் பரிணாம வழி வந்த சிறுவர் பராமரிப்பு நிலையமோ அல்லது தரும சிந்தனையுடன் நடாத்தப்படும் சில சிறுவர் கூடத்தின் சாயலோ இங்கு தென்படவில்லை.

அச்சமோ ஏக்கமோ தெரியாத அறிவுச்சோலையில் நின்றேன்! அது குழந்தைகளின் சூழல். வாழத் தொடங்கிவிட்ட சிறுவர்களின் கூழல்.

நான் நின்ற இடம் –

தலைவர் பிரபாகரன் அவர்களால் இம்மாதம் (03.11.1993) ஆரம்பிக்கப்பட்ட "காந்தரூபன் அறிவுச்சோலை."

"இவர்கள் தமிழன்னையின் குழந்தைகள். இந்தக் குழந்தைகளை நான் அனாதைகளாகக் கருதவில்லை.

வளரப்போகும் இவர்கள், எதிர்காலத்தில் எமது தேசத்தின் சிற்பிகளாகத் திகழ்வார்கள் என்பது திண்ணம்"

தலைவரின் இந்த உறுதி வார்த்தைகள் ஏற்கெனவே "செஞ்சோலை" என, பெண் குழந்தைகள் தளிர் விட்டு உயரும் வளர் நிலமாக உருவாகிவருவது தெரிந்ததே.




இதன் அடுத்த கட்டமாக அமைந்துள்ளது இந்த "அறிவுச்சோலை." இதின் தென் தமிழீழத்தின் ஆண் குழந்தைகள் உட்பட இவ்வருடத்துள் முந்நூறு பிள்ளைகள் வந்து சேர்வர் என, இந்த அறிவுச்சோலையின் பெறுப்பாளர் திரு. ரமேஸ் கூறினார்.



ஒரு குழந்தையை இவர் அழைத்தபோது அது ஓடிவந்து இவரது மடியில் அமர்ந்துகொண்டது; சற்றுத் தூரத்தே இன்னொருகுழந்தை இதனுடன் போட்டிக்கு நின்றது.

"இவர்கள் வேண்டுவது அன்பின் அரவணைப்பே" என அந்தப் பொறுப்பாளர் - இளைஞர் விளங்கப்படுத்தினர்.

"இவனை சிரித்த முகத்தோடு தான் நான் தூக்கிவந்தேன். எதுவும் அறியாது சிரித்துக் கொண்டிருந்தான் இக்குழந்தை" என, மேலும் தம் நெஞ்சத்தைத்திறந்து கூறிக்கொண்டிருந்தார். குழந்தை வேறொரு பாதுகாப்பு இடத்திலிருந்து இங்கு சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை உணரமுடிந்தது.

குழந்தைகள் எத்தகைய ஆபத்தான, துயரமான நிலைகளிலிருந்தெல்லாம் மீட்க்கப்பட்டிருக்கின்றன என்பதை வினவியபோது, அவற்றை மிகச் சுருக்கமாக தேவையான அளவுமட்டும் கூறினார். குழந்தைகளுக்கு இவை கூறப்படுவதே இல்லையாம். அதற்குப் பதிலாக இந்தத் துயரக் கோவைகள் இப் புதிய சூழலில் மெதுவாக மறக்கவைக்கப்படுகின்றன. இது நாம் நன்கு உணரவேண்டிய உளவியல் உயர்வுகளில் ஒன்று.

இது தரும் ஆக்கத்தை இங்கு பள்ளிக்குச் சென்றுகொண்டிருந்த பிள்ளைகளின் மலர்ந்த முகத்திலிருந்து புரியமுடிந்தது. இப்பிஞ்சுகளுக்கு நடந்த துயர நிகழ்வுகளை இவ்வேளை, எம்முள் நாம் எடைபோட்டுப் பார்ப்போமா?

ஏழாலையில் வெடித்த எதிரியின் எறிகணை ஒன்று, அன்றிரவு பெற்றோர் இருவரையும் பலிகொள்ளத் தவறவில்லை இந்தக் கொடுமைக்குத் தப்பிய குழந்தைகள் இருவர் இந்த அறிவுச்சோலை இல்லத்தில் வளர்வதைக் காண்கின்றோம்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் இன்னொரு தந்தை இலங்கை இராணுவத்தினரால் சுடப்பட்டார். நலிந்த தாயும் சிறிது காலத்துள் இறந்தாள். குழந்தை அனாதையா? இல்லை – இங்கு தாய்போலப் பார்ப்போரிடையே குழந்தை நன்கு வாழ்கிறது.

இதே இடத்தில் இன்னொரு தந்தை போராட்டத்தில் பங்களித்தற்காக தேசத் துரோகிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவரது ஒன்பது வயதுப் பாலகள் இன்று அறிவுச்சோலையின் பாடசாலையில் கல்வி பயின்றுவருகின்றான்.

பருத்தித்துறையிலிருந்த வேறொரு பெண்பிள்ளை செஞ்சோலையில் பயில்கின்றாள். இவளின் 13 வயதான அண்ணன் இங்கு அறிவுச்சோலையில் ஆண்டு 8 படிக்கின்றான். இவர்களுக்கு நடந்தது என்ன? தந்தை வேலைக்குப் போகும் வேளையில் இலங்கை இராணுவத்தினரால் சுடப்பட்டார். தாய் விமானக் குண்டுவீச்சுக்குப் பலியானாள். ஆயினும் இந்த எதிரியின் செயல் எம்மை அழித்துவிடப் போவதில்லை. எம் விடுதலைக்கு இவை உரமாவதே உண்மை!

எதிரியின் கொடுமையிலிருந்து விடுபடுவது மட்டும் போதாது. ஏனைய சமூதாய நலிவுகளிலிருந்தும் நாம் விடுபடவேண்டும். பலம்பெறவேண்டும்.

ஏதோ காரணத்தால் தந்தை, தாய் இருவரும் இன்னொரு ஊரில் நஞ்சுண்டு இறந்ததை அறிகிறோம். அவர்களது மைந்தன் இன்று இங்கு புதுவாழ்வில் வளர்கிறான்.

இங்கு ஆண்டு மூன்றளவில் படிக்கும் இனனொரு மாணவன். இடைக்காலத்தில் தெருக்கரையில் பாடித்திரிந்து பணம் தேடும் நிலையில் இருந்தானாம். எம் காவல்துறையினரோ எவரோ கண்டெடுத்து கைமாறியபின் இன்று இவன் இந்த அறிவுச்சோலையின் புதுவாழ்வில் மலர்கிறான்.

இங்கு பாலகர்கள் அடித்து ஏசி எழுப்பப்படுவத்தில்லை! இவர்களுக்கெனத் தம்மை அர்ப்பணித்து வாழும் தாய்மார் உள். உணவு ஊட்டப்படவேண்டிய குழந்தைகளை இவர்கள் கவனிக்கின்றனர். இவர்களோடு ஆசியரியர்களும் பலர் உள்ர். பொறுப்பாளருடன் ஏனைய தொண்டர்கள், பணியாளர்களின் பங்களிப்பு இங்கெழும் ஏராளமான வேலைகளைச் சமன் செய்து, மேலும் அக்கவளர்ச்சிக்கு இட்டுச் செல்கிறது.

வளரும் பிள்ளைகளுக்கு உடல் நலன் முக்கியம்; உணவு முக்கியம். இங்குள்ள பிள்ளைகள் ஒவ்வொரு வருக்கும் நாள்தோறும் பால்கொடுபடுகிறது. அதுபோல முட்டையும் கொடுபடுகிறது. இவை ஏனைய நல்லுணவுடன்கூடிய சத்துணவாகக் கொடுபடுகின்றன. காலையில் குளிப்பு, பின்னர் காலை உணவு. அதன்பின்னர் பாலர் வகுப்பிலிருந்து ஆண்டு எட்டுவரை பாடசாலை. நண்பகல்



உணவின் பின் ஒய்வு, உறக்கம். மாலையில் விளையாட்டு, விரும்பிய உடலுழைப்பு, தேகப்பியாசம். இரவு, தகுந்த வழிகாட்டலின் கீழ் பிள்ளைகள் சுயமாகப் படிக்கவிடப் படுகிறார்கள். இது சுய வளர்ச்சியை ஊக்குவிக்கும் அறிவுச்சோலை அல்லவா!

பள்ளிக்கூடம் செல்லும் பிள்ளைகளுக்கு இரவு உணவின் பின் பல்துலக்கல், தூக்கம், தன் கோப்பையைத் தானே கழுவுதல் முதலிய நெறிகளும் இங்கு பயிற்றப்படுகின்றன. தன் தன் வேலையதைத் தானே செய்தல் என்ற பயிற்சியே இதன் நோக்கம்.

இவ்விதமாக இயங்கும் காந்தரூபன் அறிவுச் சோலையானது வருங்கால வளர்ச்சிக்கு ஏற்ற விசால இடத்திலேயே அமைந்துள்ளது. அகன்ற மாந்தோப்பு அழகு செய்கிறது எட்டு "இல்லங்கள்" காணப்படுகின்றன. இதைவிட நீண்ட பாடசாலைக் கட்டடமும் காட்சி தருகின்றது. குழந்தைகளின் - விளையாட்டுப் பிள்ளைகளின் - குரலொலி உயிரூட்டுகின்றன. இதுதான் காந்தரூபன் அறிவுச சோலை!



THE EELANAATHAM

Peoples Daily

03 - 11 - 1993

# அனாதைச் சிறுவர்கள் என எவருமில்லை!

# இவர்கள் தமிழன்னையின் புதல்வர்கள்!

## காந்தரூபன் அறிவுச்சோலை திறப்பு விழாவில் தலைவர் பிரபாகரன்

**சரி, யார் இந்த காந்தரூபன்?**




அவன் ஒரு கரும்புலி. வடகடலில் கொடுமை செய்த பகைவனின் கப்பலுடன் மோதிச் சங்கமமான கரும்புலிகளில் ஒருவனே இந்தக் காந்தரூபன்! இவன் எவருமறியா அனாதையாய் வல்வெட்டித்துறைக் கரையில் நின்ற போது, திரு. யோகராஜா என்பவரால் கூட்டிச் செல்லப்பட்டான். பல வருடங்களின் பின் பிறந்த தனது முதல் பிள்ளையை இவர், தனது இரண்டாவது மகனாகவே கருதினார். காந்தரூபனையே மூத்த மகனாகக் கொண்டிருந்தார்.

நாட்கள் ஓடின, காநரூபன் ஒரு விடுதலைப் புலியானான். மணலாற்றுக் காட்டில் தலைவரது நேரடித் தொடர்புக்கும் பாசத்திற்கும் உள்ளாகும் பெரும் பேறையும் பெற்றான். காந்தரூபன் தன்னைக் கரும்புலி வரிசையில் இணைத்துக் கொள்ளுமாறு தலைவரவர்களை வேண்டினான். அத்துடன் தலைவரிடம் பணிவும் பாசமும் பொருந்திட இன்னொன்றையும் கேட்டான் –



காந்தருபன் அறிவுச்சோலை திறப்பு விழாவில் மழலைகளுடன் தமிழீழத் தேசியத் தலைவர்

"அண்ணை... நான் எம் இனத்திற்காகப்போய் விடுவேன். நான் "அனாதை" யாய் இருந் தவன். அனாதைகளின் மனத்து வேதனைகளை - அல்லல்களை - உணர்ந் தவன். இப்படியான வேதனைகளையும் கஷ் டங்களையும் அனுபவிக்காது தடுக்க நீங்கள் தான் அவர்களுக்கு ஒரு வழி சமைத்துக் கொடுங்கோ."

இந்த இறுதி வேண்டுகோள் தலைவரின் உள்ளத்தில் ஆழமாய்ப்பதிந்தது. ஏற்கெனவே தலைவரிடம் இருந்த இப்படியான சிந்தனைக்கு இது மேலும் உறுதி கொடுத்தது.

இத் தீர்மானம் செயலாகியது; காந்தரூபன் அறிவுச்சோலையை -இதோ - எம் கண்முன் காண்கிறோம்!

தனிக்குடும்ப உறவுகளைக் கடந்த பரந்த சூழலில் இக் குழந்தைகள் வாழ்கின்றனர்.

அறிவாளர்களை - துணிவாளர்களை - மண் பற்றும் மக்கள் பற்றும் கொண்ட பணியாளர்களை இது நிச்சயம் உருவாக்கும்.
தலைவர் கூறியுள்ளதைப் போல எதிர் காலத்தில் எமது தேசத்தின் சிற்பிகளாக இவர்கள் திகழ்வர்கள் என்ற ஒரு புதிய வரலாறு இங்கு உருவாகி வளர்கிறது; செயலாகிறது.

- பெருவழுதி — விடுதலைப்புலிகள் 11.1993



Call today to Save energy
Broken Glass...? (Door & window)
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
● Replacement (Door & Windows)
● Custom Door & Windows
● Front Door & Patio Door
● Garden Door
● Door & Windows Re-Caulking (Important)
● Painting Doors & Windows
● Basement Separate Entrance Door
● Home Painting
● Spotlights installation
● California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




வங்கிக் கடன்
தொல்லைகளிலிருந்து
விடுதலை
NEW LIFE FRESH START
PAST DUE NOTICE
• கடன் 80% குறைய நடவடிக்கை
Reduce your debts upto 80%
• கடனுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts
• கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புக்கள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்
Stop collection calls, legal action & garnishments
• உங்கள் சொத்துக்கள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP)
• மாதாந்த ரீதியில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors
• வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out bankruptcy
வங்குரோத்து சட்டங்களில் மாற்றங்கள். மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.
NEW Changes from Bankruptcy Act. Call me for Details.
Suren Sornalingam
Certified Insolvency Counsellor
DSC DEBT SOLUTION CANADA
55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON
M1P 4X4
Tel: 647-274-2832
Fax: 647-794-1991
web: www.debtsolutioncanada.ca
digi Media




அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203




Nickon
Photo & Video
Digital Album
நிக்கொன்
போட்டோ & வீடியோ
டிஜிட்டல் அல்பம்
உங்கள் குடும்ப மற்றும்
சமூக நிகழ்வுகளை நினைவில்
நிறுத்தி, நிழற்படமாக்கிட...
Call: Vijay
416.554.8899
Facebook ID:
Nickon Studio



# தமிழீழ உட்கட்டுமானம்

## STRUCTURES OF THAMILEELAM



**சுயநிறைவான தன்னில்தானே தங்கிநிற்கும் பொருளாதார வாழ்வுடைய சமூகமாக எமது சமூகம் உருவாகவேண்டும் என்பதே, எனது விரும்பம்: மக்கள் தம்மைத்தாமே ஆளும் உரியையுடைய சனநாயக ஆட்சி முறையையே நான் விரும்புகின்றேன். இந்தப் புதிய சமூகத்தில், உழைக்கும் மக்கள் மத்தியில் பொருளாதார சமத்துவம் நிலவ வேண்டும்.**

**தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வெளியீடு**

## 2.0. நீர்ப்பாசன அபிவிருத்திக்குரிய சிபார்சுகள்:

வட தமிழீழத்திலுள்ள மேற்பரப்பு நீர்வளம் கணிசமானஅளவு அபிவிருத்திக்கு உட்படுத்தப்படாததாற் பொருளாதார ரீதியாக முழுப்பயன்பாட்டைப் பெறக்கூடிய வகையில் இத்திட்டங்களை மீள்பரிசீலனை செய்து இத்திட்டங்களுக்குப் புத்துயிர் அளித்தற்கு ஏற்ற நடவடிக்கை எடுத்தல்.

2.1. தற்பொழுது நடைமுறையில் உள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவற்றினையும் இனங்கண்டு ஒவ்வொரு ஆற்றுப்படுக்கை ரீதியாக அவற்றின் தரவுகள், அங்கங்களின் தற்போதைய நிலை, திட்டங்களின் பாதுகாப்பு முதலியவற்றை ஆவணப்படுத்துதல்.

2.2. இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள குறைபாடுகள் அவற்றிற்கான காரணங்கள் ஆகியவற்றையும் இத்திட்டங்களின் மூலம் பொருளாதார ரீதியாக ஏற்படும் பயன்கள் என்பவற்றையும் ஆராய்தல்.

2.3. கிடைக்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் இத்திட்டங்களின் புனரமைப்பு, திருத்தக்கூடிய நீர்வளத்தைத் தேக்குதல் என்பவற்றைத் தீர்மானித்தல்.

2.4. பொருளாதார ரீதியாக இத்திட்டங்கள் பயனளிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்தல்.

2.5. இத்திட்டங்களை மீள்பரிசீலனை செய்யும்பொழுதும் அவற்றின் அடிப்படையிற் புனரமைத்தல், திருத்தம் முதலியவற்றை மேற்கொள்ளும் பொழுது பராமரிப்பிலும் நடைமுறைப்படுத்தலிலும், இத்திட்டங்களாற் பயனடைவோரை முக்கிய பங்காளராக்கி அவர்களுக்கு மேற்கூறியவற்றின் தகவல்களையும் நிதி ஒதுக்கீடு முதலியவற்றையும் அறியச் செய்தல். இம்முறையால் அவர்கள் இத்திட்டத்தில் நடைமுறைப்படுத்தும் முறைகளையும் பலாபலன்களையும் அறிவதுடன், இத்திட்டங்களில் இவர்கள் இணைந்து செயற்படவும் ஊக்குவிக்கவும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் உத்தியோகத்தர்களும் இதனாற் பயனடைவோரின் தேவைகளிற் கூடிய கவனம் செலுத்த வைத்தல்.

2.6. ஒரு நீர்ப்பாசனத் திட்டத்தில் முக்கிய அங்கங்களான பிரதான அணைக்கட்டு, வாய்க்கால் போன்றவற்றின் நிர்மாணங்கள் மண்ணினால் அமைவதால் இவற்றை நிர்மாணிக்கும் பொழுது தகுந்த தரக்கட்டுப்பாடும் பயன்தரும் பராமரிப்பும் நடைமுறையும் கடைப்பிடிக்காவிடில் இவை பழுதடையக் கூடிய சாத்தியம் அதிகமென்பது அனுபவம். எனவே ஒரு குறிப்பிட்ட பிரசேத்திற்கு நிர்மாண வேலைகள் தொடர்பான தரக்கட்டுப்பாட்டு நிலையம் ஒன்றை அமைத்தல்.

## 3.0. நீர்ப்பாசன நீர் முகாமைத்துவம்

ஒரு நீர்ப்பாசனத் திட்டத்தில் நீர் முகாமைத்துவமே அத்திட்டத்தின் பயன்தரும் செயற்பாட்டையும் பொருளாதர வளர்ச்சிகளையும் தீர்மானிப்பதால் இது உயிர்நாடியாக விளங்குகின்றது. எனினும் தமிழீழத்திலுள்ள நீர்ப்பாசனத்திட்டங்களில் நீர் முகாமைத்துவம் சரிவரச்செயற்படுவதில்லை போல் தோன்றுகிறது.

### 3.1. காரணங்கள்:

3.1.1. சிதைவடைந்த நிலையிலுள்ள வாய்க்கால்களின் மூலம் கட்டுப்பாடான முறையில் நீர் விநியோகத்தையும், நீர் விரயக்கட்டுப்பாட்டையும் செயற்படுத்துவது கடினம்.

3.1.2. திட்டமிடாத முறையில் நிறைபயனற்ற பற்றாக் குறையான பராமரித்தல் முறையைக் கையாளுதல்.

3.1.3. நீர்முகாமைத்துவத்திற் பேணப்படும் நவீன முறைகளைத் தமிழீழத்திற் கடந்த காலங்களிற் செயற்படுத்தாமை.

3.1.4. பாவனை மட்டத்திற் செயற்படுவோரும் நீர் முகாமைத்துவத்தில் நிறைவான நவீன தொழில் நுட்பச் செயல்முறைகளைப் பயிற்றுவிக்காமையால் ஒரு குறிப்பிட்ட பரப்பளவிற்கேற்ற விநியோகத்தையும் வாய்க்காலில் ஓடம் நீரின் அளவையும் கணித்தல் கடினம்.

3.1.5. நீர்ப்பாசனத் திட்டங்களில் வாய்க்கால்கள் குறிப்பிட்ட மட்டங்களுக்குத் தீர்மானிக்கப்பட்ட போதிலும் இவ்வாய்க்கால்களினால் பயன்பெறும் வயல்களிற் பல, வாய்க்கால்களின் அமைப்பிற்கு ஏற்ப மட்டுப்படுத்தப்படவில்லை. பல தசாப்தங்களாக இவ்வயல்கள் இந்தநிலையிலேயே இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

### 3.2. சிபார்சுகள் (பரிந்துரைகள்):

3.2.1. நீர்ப்பாசனத் திட்டங்களில் உள்ள நீர் விநியோக அமைப்புக்களை இனங்கண்டு அவை விநியோகிக்க வேண்டிய நீரின் அளவிற்கு ஏற்பத் திருத்தியோ, புனரமைத்தோ நவீன தொழில் நுட்ப முறையிற் செப்பனிடுதல்.

3.2.2. தற்பொழுது நடைமுறையிலுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களிற் காணப்படும் கட்டமைப்புக்களை (Regulators, Sluices, Drops, etc.) நவீன கட்டமைப்புக்களாக மாற்றுவதன் மூலம் கூடிய நீர் விநியோகக் கட்டுப்பாடும், பிரமாண அளவீடும், நீர்விரயக்கட்டுப்பாடும் பேண உதவும்.

3.2.3. நீர்ப்பாசனத்திட்டங்களில் உள்ள வடிகால் அமைப்புக்களை மீள் ஆய்வு செய்து அவை சிறந்த முறையிற் செயற்படவும், வடிகாலிற் கிடைக்கும் நீரை மீளப் பாவனை செய்வதற்கு பரிசீலித்தலும்.

3.2.4. நீர்ப்பாசனத் திட்டங்களில் மண்வாய்க்கால்களிற் பாயும் நீரிணை மண் உறிஞ்சுவதாற் கணிசமான விரயம் ஏற்படுவதுண்டு. இதனைத் தவிர்ப்பதற்கு வாய்க்கால்களில் கொங்க்ரீட் படை அமைப்புக்களோ, வேறுநீர் உட்புகாப் படை அமைப்புக்களோ அமைக்கப்படுதல். இது பிற இடங்களில் நடைமுறையில் உள்ளது. எமது பிரதேசத்தில் அநேகமான நீர்ப்பாசனத் திட்டங்களிற் காலபோகப் பயிர்ச்செய்கைக் காலங்களில் மட்டும் மண் வாய்க்கால்களில் தொடர்ச்சியாக நீர் பாய்வதாலும் வருடத்திற் கூடிய காலம் நீரற்றுக் காண்பதாலம் வரட்சியாலும் வேறு தாக்கங்களாலும் பாதிப்படையும். இதனால் மேற்குறிப்பிட்ட அமைப்பு முறைகளை மண்வாய்க்கால்கள் அனைத்திலும் செயற்படுத்துவதற்குச் செலவிடும் தொகை, இத்திட்டங்களிற் பொருளாதாரப் பெறுபேறுகளை நோக்கும் பொழுது கூடியதாக அமையும். ஆயினும் பிரதான நீர்ப்பாசனத் திட்டங்கிளல் முக்கிய வாய்க்கால்களிலும் அவதானிக்கக்கூடிய அளவு நீர்க்கசிவு ஏற்படும் பகுதிகளிலும் காங்க்ரீட் படை அமைப்புமுறையைப் பரிசீலிக்கலாம்.

3.2.5. நீர்ப்பாசனத் திட்டங்களில் நீர்ப்பாசனத்திற்குக் கடினமான, மேட்டு நிலங்கள் மிகவும் தாழ்ந்த பகுதிகள் மற்றும் உற்பத்தி விளைவு கிட்டாத பகுதிகளையும் இனங்கண்டு அவற்றை நீர்ப்பாசனப் பதிவேட்டில் இருந்து நீக்கவோ அன்றேல் இப்பகுதியை மாற்றுப் பயிர்ச் செய்கைக்கோ நடவடிக்கை எடுத்தல். இது தவிர இத்திட்டங்களில் நிலப்பயன்பாடு பற்றி மண்வள இரசாயனப் பரிசோதனைகள் மூலமும் புதிய இனப் பயிர்வகை நடுகை பற்றிய ஆராய்வு மூலமும் அறிந்து ஏற்ற நடவடிக்கை எடுத்தல்.

3.2.6. எல்லாப் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களிலும் நீர் முகாமைத்துவம், பராமரிப்பு நடைமுறை என்பவற்றை நீர் வகிப்பதற்கு ஒரு திட்ட முகாமைத்துவக் குழுமை உருவாக்குதல் திட்ட முகாமைத் துவம், நீர் முகாமைத்துவம், விவசாயம் போன்றவற்றில் பயிற்றப்பட்ட அதிகாரி ஒருவரைத்திட்ட முகாமையாளராகவும், தலைவராகவும் கொண்டு இதனை உருவாக்குதல். இக்குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக தொழில் நுட்ப உத்தியோகத்தவர்கள், மேற்பார்வையாளர்கள், நீர்பாய்ச்சுவோர் என்போர் நீர்முகாமைத்துவம் நீர்ப்பாசனம் பயிற்றப்பட்டோராகவும் இருத்தல் பிற அங்கத்தவர்களாக நீர்ப்பாசனத் திட்டத்தின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள விவசாயக் குழுக்களில் பிரதிநித்துவப்படுத்தும் பிரதிநிதிகளையும் அடக்கவேண்டும்.

3.2.7. இத்திட்ட முகாமைத்துவக் குழு, படவரைபு (Diagramatic Record) பதிவுகள் மூலம் திட்டத்தின் அமைவு, நீர்விநியோக அமைப்பு முறைகள் என்பற்றைச் செயற்பாட்டு மட்டத்தில் விளக்கமளிக்கக் கூடியதாக நீர் முகாமைத்துவ நடைமுறைக்கு வழிகாட்டும் தரவுகளைச் சுட்டிக்காட்டுவதாய்த் தயாரித்தல் வேண்டும். இத் திட்டங்களிற் காலத்துக்குக் காலம் கிடைக்கப் பெறும் நீர்வளத்தைக் கொண்டு பயிர்ச்செய்கைக் குரிய பரப்பளவு, பயிர்ச்செய்கைக்குரிய திகதிகள், பயிரினம் என்பவற்றை இக்குழுவால் தீர்மானிக்கப்படும். மேலும் இக்குழு பராமரிப்பிற்கும் நீர் முகாமைத்துவத்திற்கும் ஏற்ற அட்டவணைகளைத் தயாரித்தல். பராமரிப்பிற்கும், நீர்முகாமைத்துவத்திற்கும் பயனள்ள முறையில் நிதியைப் பயன்படுத்துதல். நீர்ப்பாசன அமைய வரி தண்டம் முதலியவற்றை வசூலித்தல் என்பவற்றிற்கும் சட்டங்களுக்கு பொறுப்பாக இருக்க வேண்டும்.

3.2.8. கிராமிய நீர்ப்பாசனத்திட்டங்களைப் பொறுத்தமட்டில் இதன் முகாமைத்துவக் குழுவின் தலைவராகப் பராமரிப்பிலும், நீர்முகாமைத்துவத்திலும் அனுபவம் மிக்க விவசாயிகளின் பிரதிநிதிகளும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்க ஒரு தொழில் நுட்ப உத்தியோகத்தரும் உள்ளடக்கப்படுவர்.

## 4.0. புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள்:

புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை ஆரம்பிக்குமுன் வட தமிழீழ ஆற்றுப்படுக்கைகளில் உள்ள நீர்ப்பாசனத் திட்டங்களின் செயற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு மேலும் இவ் ஆற்றுப் படுக்கைகளில் அபிவிருத்தி செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதா என்பதை அறியமுடியும்.

இவ் ஆற்றுப்படுக்கைகளில் மேலும் அபிவிருத்தி செய்யக்கூடிய அளவிற்கு நீர்வளம் கிடைக்கும் சாத்தியம் இருப்பின் தற்பொழுதுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களை விருத்தி செய்வதற்கும் புதிய திட்டங்களை ஏற்படுத்துவதற்கும் ஆராயலாம்.

இதன் அடிப்படையில் வட தமிழீழ ஆற்றுப்படுக்கைகளிற் கடல்புகு நீர்ப் பிரமாணத்தின் அளவை அவதானிக்கும் பொழுது பறங்கி ஆற்றிலும் அருவி ஆற்றிலும் கணிசமான நீர்வளம் விரயமாகிறது. ஆகவே, இவ்விரு ஆற்றுப்படுக்கைகளும் பாரிய புதிய நீர்ப்பாசனத் திட்டத்திற்கு அனுகூலமானது.

### 4.1. பறங்கி ஆற்று நீர்த்தேக்கம்:

இந்த ஆற்றுப்படுக்கைகளிற் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவில்லை. இக்காரணத்தில் இவ் ஆற்றுப்படுக்கைகளில் முழுமையான திட்டமிட்ட முறையில் விவசாயம், தொழில் (Industry) போன்றவற்றிற்கு அபிவிருத்தி மேற்கொள்ள முடியும். பாரிய மகாவலி அபிவிருத்தி முழுமைத்திட்டதின்படி (Master Plan) வட மத்திய மாகாண வாய்க்காலின் கீழ் இவ்வாற்றில் நீர்த்தேக்கம் அமைக்கத் திட்டம் இடப்பட்டுள்ளது. இந் நீர்த்தேக்கத்தின் அமைவு மாங்குளம் மூன்றுமுறிப்பு இரணையிலுப்பைக்குளம் வீதியில் பன்னிரண்டாவது கட்டையில் உள்ளது. ஏனவே, புதிய நீர்ப்பாசனத் திட்டத்தை இதே இடத்தில் அமைப்பது பற்றி ஆராயலாம். இந் நீர்த்தேக்கம்

மகாவலி அபிவிருத்தியின் கீழ் 6,800 ஹெக்டேயருக்கு நீர்ப்பாசனம் அளிப்பதற்குத் திட்டம் இடப்பட்டுள்ளது. ஆரம்ப நடவடிக்கையாக மேற்குறிப்பிட்ட நீர்த்தேக்கம் அமையும் இடத்தில் ஒரு நீர்த்தேக்கத்தைக் கொண்டு அமைப்பதன் மூலம் இவ்வாற்றுப்படுக்கையில் நீர்வளத்தைக் கொண்டு குறைந்தது 4000 ஹெக்டேயருக்கு அபிவிருத்தி செய்யலாம். மகாவலி அபிவிருத்தியில் இத்திட்டம் அமைகக்கப்படவுள்ள இடத்தில் இவ் ஆற்றுப்படுக்கையின் நீரேந்து பரப்பு 165 சதுர மைல் ஆகவும், அணைக்கட்டின் நீளம் 20,000 அடியாகவும், அணைக்கட்டின் கூடிய உயரம் 95 அடியாகவும், கொள்ள்ளவு 279,000 ஏக்கர் அடியாகவும் கொண்ட நீர்த்தேக்கமாகவும் அமையவுள்ளது. இவ் ஆற்றுப்படுக்கையின் வரலாற்றுப் பழமை மிக்க குடியிருப் புகளான பனங்காமம், நட்டாங்கண்டல், ஆத்திமோட்டை போன்ற கிராமங்கள் இருப்பது குிறப்பிடத்தக்கது. இதற்கு அருகாமையில் பாலி ஆற்றுப்படுக்கையில் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திட்டம் உள்ளதால் இத்திட்டப்படி அபிவிருத்தியில் ஏற்பட்ட தாக்கங்களை அனுபவ ரீதியாகப் புதிய திட்டத்திற்கு கவனத்திற்கெடுக்கலாம். கடந்த காலத்திட்டங்கள் நெற்பயிர்ச் செய்கையை கொண்டதாக இப்புதிய திட்டத்தில் அத்தியாவசிய பல்வகைப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளக்கூடிய சாத்தியக் கூறுகளை ஆராயலாம். கடந்த காலக் குடியேற்றங்கள் வருடத்தின் கணிசமான காலத்தில் வரட்சியாலும், நீர்வளப் பற்றாக்குறையாலும் பசுமையும் ஆரோக்கியமும் அற்ற சூழலில் வருமானக் குறைபாடுகளாற் பாதிப்படைந்ததை அவதானிக்க முடிகிறது. ஏனவே இப்புதிய திட்டத்தை இக்குடியேற்றத்திட்ட வாசிகள் பொருளாதார நிறைவுடன் அடிப்படை வசதிகள் யாவற்றையும் கொண்டு, பசுமை நிறைந்த சுற்றாடலில் ஆரோக்கியத்துடனும் புன்னகையுடனும் வாழ்வதற்குத் தகுந்ததாகத் திட்டமிடல் வேண்டும்.

### 4.2. அருவி ஆற்று நீர்த்தேக்கம்:

இவ்வாற்றின் தொடக்கம் சிறீலங்காவின் வட மத்திய மாகாணத்தில் ஆரம்பமாகிறது. இவ்வாற்றுப்படுக்கையின் நீரேந்து பிரதேசம் 3256 ச.கி.மீ. ஆகவும் கடல்புகு நீரின் பிரமாணம் $568X10_6$ கனமீற்றராகவும் உள்ளன. இவ் ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள தேக்கம் அணைக்கட்டு மூலம் நீர் திசை திருப்பப்பட்டு கட்டுக்கரைக் குளம் ஊடாகவும் அகத்தி முறிப்புக் குளத்தின் ஊடாகவும் மன்னார் மாவட்டத்தில் 7800 ஹெக்டேயர் நெற்பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத் தப்படுகிறது. இங்கும் மகாவலி அபிவிருத்தியின் கீழ் செட்டிக்குளத்திற்கருகில் அமைக்கப்பட உள்ள நீர்த்தேக்கம் மூலம் தற்போது நடைமுறையிலுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களும் மேலும் 4000 ஹெக்டேயருக்கும் நீர்ப்பாசன வசதி அளிக்கத் திட்டம் இடப்பட்டுள்ளது. இவ் இடத்தில் 1950 ஆம் ஆண்டுகளில் ரஷ்ய நாட்டு உதவியுடன் ஒரு நீர்த்தேக்கம் அமைக்கத் திட்டமிட்டுக் கைவிடப்பட்டது.

நீர்வள, பொறியியல் சம்பந்தமான தரவுகளைக் கொண்டு இந் நீர்த்தேக்கத்தைத் தற்போது உள்ள நடைமுறைத் திட்டங் களுடன் மேலதிகமான இடதுகரை அபிவிருத்தியை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு இத் தேக்கத்தின் அமைவைத் தீர்மானித்தல் அவசியம். இவ்விடது கரை விவசாயத்திற்கு ஏற்ற பிரதேசமாகவும் அபிவிருத்தி குறைந்த நிலையில் உள்ளது. இது சிலாபத்துறை, அரிப்புப் போன்ற பிரதான வரலாற்றுக் கிராமங் களை அடக்கியதாகவும் உள்ளது. தற்பொழுது கட்டுக்கரைக் குளத்திற்கு (Giant Tank) நீர்ப்பாய்ச்சும் தேக்கம் அணைக் கட்டின் வலதுகரை வாய்க்காற் பிரதேசத்திலும் குளத்தின் நீரேந்துப் பிரதேசம் உள்ள காட்டுப் பிரதேசம் பறவைகளின் சரணாலயமாக (Fauna &Flora) அமைந்துள்ளது. இச் சரணாலயத்திற்கு மாரிகாலத்திற் சைபீரியா, வட இந்தியா போன்ற நாடுகளில் இருந்து பறவைகள் வந்து தங்கிச் செல்கின்றன. மேலும் இப்பிரதேசத்திற்கு பாரம்பரிய முத்துக் குளத்தில் நன்னீர் மீன் பிடித்தலும், வரலாற்றுப் புகழ்பெற்ற திருக்கேதீஸ்வர ஆலயமும், அல்லிராணியின் கோட்டையும் அமைந்துள்ளதாகவும் இப்பிரசேதம் தமிழீழத்தை இந்திய உபகண்டத்துடன் இணைக்கும் பகுதியாக அமைவதாலும் இந்நீர்த்தேக்கத்தின் அபிவிருத்தி முதன்மையானது. மேற் கூறிய காரணங்களினால் ஆற்றுப்படுக்கையில் வரண்ட அபிவிருத்தியற்ற நிலையிலுமுள்ள கிராமங்களைத் திட்டமிட்ட அபிவிருத்திக்கு உட்படுத்திய பின் மிகுதியாக நீர்வளம் இருப்பின் அயல் ஆற்றுப்படுக்கையான நாயாற்றுப்படுக்கைக்கு இந்நீர்வளத்தைக் கொண்டு செல்வதற்கு ஆராயலாம்.

### 4.3. யாழ்ப்பாணக் கடனீரேரிகள் திட்டம்:

கடந்த பல தசாப்தங்களாகக் கூடிய கருத்துப் பரிமாற்றங்களை ஏற்படுத்திய முக்கிய திட்டமாக இது அமைந்தது. சென்ற காலங்களில் இத் திட்டத்தின் நிர்மாணப் பிரச்சனையாலும் நடைபெற்ற வேலைகள் பூர்த்தியற்ற நிலையில் கைவிடப் பட்டதாலும் பயனற்றுவிட்டது. தொண்டமானாறு, அரியாலை அணைகளும் (Barrage) மற்றும் மண் அணைகளும் நீர்மாணிக்கப்பட்ட நிலையில் இதர பகுதியிற் பூர்த்தி செய்யப் படாத நிலையிலும் உரிய பராமரிப்பு நடைமுறைப்படுத் தாமையாலும் இப்பாரிய திட்டம் பாழடையும் நிலையில் விடப்பட்டுது. இதனை ஆனையிறவு நீரேரியில் இருந்து தொண்டமனாறு நீரேரிக்குச் செல்லும் தொடுவாய்க்காலும் சுண்டிக்குளத்தில் அமையும் கடல்நீர்புகு நீர்த்தடுப்பு அணையும் அதிலுள்ள வால்வும் ஆரம்ப நிர்மாணத்திற்கு உட்படுத்தப்பட்டுக் கைவிடப்பட்ட நிலையில் உள்ளதை உறுதிப்படுத்துகினற்ன. இத்திட்டத்தில் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்ட உறுப்புக்கள் பராமரிப்பற்ற நிலையாற் பாரிய திருத்தங்களுக்கு உட்பட வேண்டியுள்ளன. ஒரு கடலேரி நன்னீர் திட்டத்தின் பராமரிப்பு, நடைமுறை அத்திட்டத்தின் பலாபலனை அடைய முதன்மைக் காரணியாக உள்ளது. ஒரு நடைமுறப்படுத்தப்பட்ட கடல் நன்னீர்த் திட்டத்தின் பாராமரிப்பில் ஏற்படும் குறைபாட்டினால் ஒரு முறையாவது கடல் நீர் உட்புகநேர்ந்தால் இவ் ஏரியின் ஆரம்ப உவர் நிலைக்கு இத்திட்டம் பின்னடைவு கண்டுவிடும். இத்திட்டத்தை மீளாய்வு செய்து கடந்த கால அனுபவ ரீதியாகப் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு நீர்ப்பாசன இலாகாவினால் 1976ம் ஆண்டு இத்திட்ட அபிவிருத்திக்கு வெளியிடப்பட்ட சாத்தியப்படும் அறிக்கையையும் கருத்திற் கொண்டு பின் வருவனவற்றை ஆராய்தல் வேண்டும்.

#### 4.3.1. ஆனையிறவுக் கடனீரேரி:

இக் கடலேரிக்குச் சுண்டிக்குளத்திற்கு கடலோரமாக அமைக்கப்பட்டுள்ள அணையும் அத்துடன் கூடிய வால்வும் வெற்றியளிக்கிறது. பழுதடைந்தமைக்குரிய காரணங்களை இனங்கண்டு நவீன தொழில் நுட்ப உத்திகளைக் கையாண்டு திட்டமிடுதல்.

#### 4.3.2. சுண்டிக்குளம் – தொண்டமானாறு தொடுவாய்க்கால்:

இவ்வாய்க்கால் ஆழந்த மணற்பிரதேசத்தின் ஊடாகச் செல்வ தால் நீர்மாண இடையூறுகளைத் தவிர்ப்பதற்கேற்ற தொழில் நுட்ப உத்திகளைக் கையாளுதல்.

#### 4.3.3. தொண்டமானாறுக் கடனீரேரி:

இக் கடலேரியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அணையில் (Barrage) காணப்படும் பழுதடையும் உபகரணங்களை (Gates and Regulators) நீக்கி உவர்நீர்த் தாக்கமற்ற நவீன உபகரணங் களை அமைத்துப் புனரமைத்தலும் அணைக்கட்டின் அத்திவாரத்தின் கீழ் கடல்நீர் ஊடுருவுவதைத் தவிர்த்தலும் அவசியம்.






**4.3.4. உப்பாறு கடனீரேரி:**

அரியாலையில் அமைக்கப்பட்டுள்ள அணையின் உறுப்புகளில் பழுதடைந்த உபகரணங்களை அமைத்துப் புனரமைத்தல். இவ் ஏரியில் உள்ள மண் அணைக்கட்டுக்களை அப்பிரதேசத் திலுள்ள மண்ணுக்கேற்பப் பொறியில் ரீதியில் திட்டமிடுதல்.

இக் கடனீர் ஏரிகளிற் கடற்தொழிலில் முன்பு ஈடுபட்டோர் இத் திட்டத்தினால் தங்கள் இறால், மீன் பிடிக்கும் தொழில் பாதிக் கப்படுவதால் இத்திட்டத்தின் நோக்கங்களுக்கு முரணாகச் செயற்படுவதும் உண்டு. ஆகையினால் இதனாற் பாதிக்கப படுவோரின் குறைகளை ஆராய்ந்து அவர்கள் இத்திட்டத்தினாற் பயனடையக்கூடிய வகையில் நன்னீர் மீன்வளர்ப்பு, இறால் வளர்ப்பு என்பவற்றில் இவர்களை ஈடுபடச் செய்து திட்டத்தின் பங்காளிகளாக ஆக்குதல்.

மேலும் நீர்ப்பாசனத் திணைக்களம் தயாரித்த அறிக்கையின்படி ஆனையிறவு கடனீரேரிக்குத் தென் புறத்திற் காணப்படும் ஆற்றுப்படுக்கையினாற் கிடைக்கப்பெறும் நீர்வளம் இத்திட்டத் தின் பயன்பாட்டுக்குச் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே கனகராயன் ஆறு, நெத்தலி ஆறு, பிரமந்தன் ஆறு, தேராவில் ஆறு போன்ற ஆற்றுப்படுக்கைகளின் புதிய நீர்வள அபிவிருத்திக்குத் திட்ட மிடப்படும் பொழுது இந் நன்னீர்த் திட்டத்தின் தேவையைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

**4.4. யாழ் குடாநாட்டு மேற்பரப்பு நீர்ப்பாசனம்:**

யாழ் குடாநாட்டிற் பரந்த அளவில் நூற்றுக்கணக்கான சிறிய குளங்கள் காணப்படுகின்றன. இவற்றிற் பெரும்பாலானவை இயற்கையான தாழ்நிலத்தில் அமைந்தவை. இவற்றில் சிலவற்றில் இருந்து ஏற்று நீர்ப்பாசன முறையில் முக்கியமாக உப உணவுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. இக் குளங்களில் நீர்வளம் வடகீழ்ப் பருவ மழை, சூறாவளிப்பருவ மழைமூலம் கிடைப்பதால் இப் பருவ காலங்களைத் தொடரும் சிறுகாலப் பகுதிக்கே இந் நீர்வளம் பயன்படுத்தப்படும். ஏனைய காலத்தில் இவற்றுள் அநேகமான குளங்களில் நீர் அற்றுவிடும். இக்குளங்களிற் காலத்துக்குக் காலம் சேரும் வண்டல்களை ஏரி நீர் நிலத்தின் கீழ் உள்ள கடற்பாறைகள் ஊடாக ஊடுருவாது தடுப்பதற்கு ஏற்ற குறைந்தளவு மண்படையின் மேலுள்ள வண்டல்களை நீக்குவதன் மூலம் குளத்தின் கொள்ளவைப் பராமரிக்கலாம். மேலும் இக்குளங்களில் உப்புகும், வெளி யேறும் வாய்க்கால்களையும் சிறந்த முறையிற் பராமரிப்பதன் மூலம் குளத்தின் கொள்ளளவையும் வெள்ளப்பெருக்கையும் கட்டுப்படுத்தலாம்.

யாழ் குடாநாட்டில் உள்ள ஒரே ஒரு நீரோடையான வழுக்கை ஆற்றின் குறுக்கே இடப்பட்ட அணைகளின் மூலம் பெறப்படும் நீர், பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. நிரந்தர அணை களின் பராமரிப்புக் குறைபாடுகளாலும், தற்காலிக அணைகள் உடைப்பெடுப்பதாலும் ஆற்றின் கரை சேதடைவதும், மணல் திடல்கள் உண்டாவதும், ஆற்றின் வழிமாறுவதும், அயல் விவசாய நிலங்கள் நீர் அரிப்பினாற் பாதிக்கப்படுவதும் அவ தானிக்கக் கூடியதாக உள்ளன. எனவே தெல்லிப்பளைப் பகுதியில் உற்பத்தியாகி அராலிக்கடலைச் சென்றடையும் இவ் வழுக்கை ஆற்றை வழிமுறைப்படுத்த வேண்டி அணைக் கட்டுக்களை அமைத்து இயற்கையாக அமைந்துள்ள இந் நீரோடையை நவீன முறைகளால் வளமான வாய்க்காலாய் மாற்றியமைத்தாற் சிறந்த பயன்பாட்டை அடையலாம்.

4.4.1. உவர் நீர் தடுப்புத் திட்டம்:

தமிழீழத்தின் கடனீரேரிக் கரைகளினதும், கடற்கரைப் பிரதேசங்களினதும் சில பகுதிகளில் கடல்நீர் பயன்படுத்தக்கூடிய நிலப்பரப்புக்குட் காலத்திற்குக் காலம் உட்புகும் சாத்தியக்கூறுகள் உண்டு. இவ் உட்புகுதலைத் தடுப்பதற்கு ஏற்கனவே மண் அணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ் அணைக்கட்டுகளில் மழைநீர் வெள்ளம் கடலுட் செல்வதற்கும் கடனீர் உட்புகாவண்ணம் தடுப்பதற்கும் ஏற்ற அமைப்புமுறைகள் (Plank Regulators) இவ்வணைகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. வடதமிழீழத்தில் முக்கியமாகத் தீவுப் பகுதிகளிலும் மன்னார்ப் பிரதேசத்திலும் பெரும்பான்மையாக இவ்வணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இருந்தும், இவ் வணைகள் கடந்த சிலகாலமாகத் தகுந்த பராமரிப்பு இல்லாமை யாலும் இவ்வணைகளின் அமைப்பு முறைகளில் (Plank Regulators) மரத்தினாலும் இரும்பினாலும் ஆன பகுதிகள் சேதமடைவதாலும் களவாடப்படுவதாலும் இவ்வணைகளில் அநேகமானவை செயற்பாட்டை இழந்துள்ளன. இவ் வணைகள் அமைக்கப்பட்ட பிரதேசங்களிற் பெரும் பான்மையானது நெற்பயிர்ச் செய்கை நிலங்களாகவும் ஏனையவை கால்நடை மேய்ச்சல் நிலங்களாகவும் பயன் படுத்தப்படுவதால் இத்திட்டங்கள் சிறந்த முறையில் இயங்குவது அவசியம் ஆகும். ஏனவே பின்வரும் சிபார்சுகளை இத்திட்ட அபிவிருத்திக்கு உட்படுத்தலாம்.

4.4.1.1. தற்பொழுது உள்ள திட்டங்களை இனங்கண்டு அவற் றின் அமைவிடங்களையும் தரவுகளையும் ஆவணப்படுத்தல்.

4.4.1.2. இத்திட்டங்களில் உள்ள குறைபாடுகளையும் காரணங்களையும் சேகரித்தல்.

4.4.1.3. இத்திட்டங்களாற் பெறக்கூடிய பலாபலன்களைக் கணித்தல்.

4.4.1.4. இத்திட்டங்களை மீளாய்வு செய்து திருத்தங்களையும் புனரமைத்தலையும் அபிவிருத்திகளையும் நவீன தொழில் நுட்பரீதியாகச் செயற்படுத்தல். மேலும் இவ்வணைகளின் அமைப்புக்கள் (Regulators and Gates) சிறந்த முறையிற் செயற் படாமையும், மறுபாதிப்புக்களையும் கவனத்திற் கொண்டு நவீன அமைப்புக்களை (Regulators and Gates) நிர்மாணித்தல்.

விளம்பரம்
என்பது
உங்கள்
வணிகத்தின்
ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு

437.345.4203

4.4.1.5. இப்பிரதேச மக்களுக்கு இத்திட்டங்களின் அவ சியத்தை அறியச்செய்து அவர்களையும் பங்காளிகளாக்கி ஒரு சிறந்த பராமரிப்பு முறையை உருவாக்குதல்.

4.4.1.6. இத்திட்டங்களினால் நீரைப்பெறும் நிலப்பரப்பில் உச் சப்பயன்பாட்டைப் பெறுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்.

4.4.1.7. மேலும் தமிழீழத்தில் மேற்குக் கரையோரமாகவும் கிழக்குக் கரையோரமாகவும் சில பிரதேசங்களில் உவர்நீர் உட்புகும் சாத்தியம் இருப்பதால் இப்பிரதேசங்களை இனங் கண்டு இவற்றுக்கு ஏற்ப புதிய திட்டங்களை அமைத்தல்.

தொடரும்...




# ஒட்டுக்குழுவால் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் நினைவில்!




பி.பி.சி. வானொலியின் தமிழ்-சிங்கள சேவைகளின் குடாநாட்டுச் செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் 19.10.2000 அன்று ஆக்கிரமிப்பாளர்களின் அடிவருடிகளால் அவரது இல்லத்தில் வைத்துக் கொல்லப் பட்டுள்ளார்.

பத்துவருடகாலமாக பத்திரிகைத்துறையில் பணியாற்றி சிறந்ததொரு செய்தியாளராகப் பரிணமித்த அவர், தனது பணியில் காட்டிய கடமையுணர்விற்கும் நேர்மைப் பண்பிற்கும் வெகுமதியாக, கொலைஞர்கள் அவருக்கு மரணத்தைப் பரிசளித்துள்ளனர்.

பத்திரிகையாளர் நிமலராஜன் கொல்லப்பட்ட செய்தி தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியையும் ஆழ்ந்த மனவேதனையையும் அளித்துவிட்டது.

கடந்த ஐந்து வருடங்களாக சிங்கள இராணுவத்தின் கிடுக்கிப்பிடிக்குள் சிக்கி அவலவாழ்வை அனுபவித்துவரும் யாழ்ப்பாணமக்களது துன்ப-துயரங்களையும் இந்த இராணுவ ஆட்சியை மூடிமறைக்க சிங்கள அரசு எடுக்கும் கண்துடைப்பு அரசியல் நடவடிக்கைகளையும் வெளி உலகிற்கு அம்பலப்படுத்துகின்ற அரியபணியை நிமலராஜன் ஆற்றிவந்தார்.

தமிழ் – சிங்கள மொழிகளில் நல்ல தேர்ச்சிபெற்றிருந்த அவர் பி.பி.சியின் தமிழோசை மற்றும் அதன் சிங்கள மொழி ஒலிபரப்பான சந்தேசிய உட்பட வெளிநாட்டுத் தமிழ் வானொலிகளின் யாழ்ப்பாணச் செய்தியாளராக திறம்படப் பணியாற்றி- மக்களின் அபிமானத்தையும் பெற்றிருந்தார்.

கணீரென்ற வெண்கலக்குரலில் குடாநாட்டு நிலவரங்களை செய்தியாகத் தொகுத்து நிமலராஜன் வழங்கும் விதம் அலாதியானது. அவர் வழங்கும் செய்திகள் தகவல்கள் தெளிவுடன் இருக்கும். எந்தவிதமான பூடகத்தன்மைகளும் இல்லாது வெளிப்படையாக செய்திகளைக் கொடுப்பது அவர் கடைப்பிடிக்கும் தனித்துவமான பாணி. அவர் வழங்கும் செய்திக் கண்ணோட்டங்களில் நேர்மையான விமர்சனம் இருக்கும். குடாநாட்டு மக்கள் சந்திக்கும் அவலவாழ்வை அம்பலப்படுத்தும்போது அவரது குரலில் தார்மீகக் கோபம் கொப்பளிக்கும். அதுமட்டுமல்ல அவரது செய்திகளிலும்-அரசியல் கண்ணோட்டங்களிலும்-அம்பலப்படுத்தல்களிலும் தமிழ்த்தேசிய உணர்வு மையசக்தியாகத் திகழும். மக்களின் துன்ப-துயரங்களை எடுத்துக் கூறி, அவற்றிற்குக் காரணமானவர்களை சுட்டுவிரல் நீட்டி பகிரங்கமாகவே குற்றம் சுமத்தும்போது அவரது கருத்துக்கள் மௌனமாக உள்ள குடாநாட்டு மக்களது மனச்சாட்சியின் குரலாக ஓங்கி ஒலிக்கும்.

இவை காரணமாக நிமலராஜனுக்கு தமிழ்மக்கள் மத்தியில் பேரபிமானமும் சந்தேசியவின் சிங்கள நேயர்கள் மத்தியில் பிரபலமும், படையினர் மற்றும் அடிவருடிகள் மத்தியில் வெறுப்புணர்வும் இருந்து வந்தது.

சர்வதேச வானொலிகளின் யாழ்ப்பாணச் செய்தியாளராக நிமலராஜன் பணிசெய்யத் தொடங்கும் வரை குடாநாட்டு மக்களின் துயரவாழ்க்கை வெளி உலகிற்கு சரியாகத் தெரியவரவில்லை.



யாழ்ப்பாணத்தில் இராணுவ ஆட்சிக்குப் பதிலாக சிவில் நிருவாகம் அமைக்கப்பட்டு மக்களின் வாழ்க்கை இயல்புநிலைக்குத் திரும்பிவிட்டது என்றும், தமிழ்க்கட்சிகள் அங்கே ஜனநாயகமுறையில் அரசியல் வேலைத்திட்டங்களைத் தொடங்கிவிட்டன என்றும் குடாநாடு புனரமைக்கப்பட்டு அபிவிருத்தி செயப்படுகின்றது என்றும் சிங்கள அரசு வெளியிட்ட செய்திகள் மட்டுமே வெளிவந்து கொண்டிருந்தன.

ஆனால், நிமலராஜனூடாக யாழ்ப்பாணத்தின் உண்மை நிலவரங்கள் படிப்படியாக வெளிவரத்தொடங்கின. படையினரின் அட்டூழியங்கள் அம்பலத்துக்கு வந்தன. தமிழ்க்குழுக்களின் அராஜகங்கள் வெளிக்கொணரப் பட்டன. சிங்கள அரசின் கண்துடைப்பு அரசியல் தோலுரித் துக்காட்டப்பட்டது. மக்களின் அன்றாட வாழ்வியல் அவலங்கள் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டன.

ஆனையிறவுத்தள அழிப்புடன் தென்மராட்சிப் பகுதிக்குள் சண்டை பரவியபோது அங்கிருந்த மக்களின் உயிர்ப் பாதுகாப்பிற்காக இடம் பெயர்ந்து செல்லுமாறு புலிகள் இயக்கம் வேண்டுகோள்விடுத்தது. ஆனால் படையினர் தமது பாதுகாப்பிற்காக அம்மக்களை வெளியேறவிடாது தடுத்து அவர்களுக்கு ஒரு பேரழிவினை உண்டுபண்ண முயன்றபோது அம்மக்களின் நிலையை உலகறியச் செய்விப்பதற்காக உயிராபத்தையும் பொருட்படுத்தாது நிமலராஜன் நேரடியாகவே அப்பகுதிகளுக்குச் சென்றார். அந்த மக்களுடன் உரையாடி அங்கிருந்து நிலைமைகளை வானலைகளில் பரப்பி இராணுவத் தலைமைப் பீடத்தை நெளியவைத்து-சிங்கள அரசைச் சிக்கலுக் குள்ளாக்கினார்.

இவரது செய்திகளால் உத்வேகமடைந்த உலக மனித உரிமை அமைப்புக்கள் சிங்கள அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்து மக்களின் சுதந்திரமான இடப் பெயர்வுக்கு வழிசமைத்தன.

தனி ஒருவனைக்கொண்ட படைபோல நிமலராஜன் தனித்துநின்று குடாநாட்டு நிலவரங்களை அம்பலப்படுத்தி ஆக்கிரமிப்பாளர்களுக்கும்-அவர்களது அடிவருடிகளுக்கும் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்துவந்தார்.

யாழ்ப்பாணத்தில் சாதாரண இளைஞர்களைச் சுட்டுக் கொன்றுவிட்டு, கொல்லப்பட்டவர் புலி உறுப்பினர் என படையினர் விளக்கம்சொல்லி செய்தி வெளியிடுவது வழமை. ஆனால், இராணுவத்தின் அந்தச் செய்தியையும் வானலைகளில் பரப்பி கொல்லப்பட்டவர் ஒரு மாணவர் அல்லது ஒரு அப்பாவி இளைஞன் என நிரூபணங்களையும் எடுத்துக்கூறி அது ஒரு மிலேச்சத்தனமான படுகொலை என உலகிற்கு நிமலராஜன் ஒப்புவிக்கும் விதம் அவரது செய்தி வழங்கும் பாணியின் தனிரகமானது.

இவைகாரணமாக படையினரின் எச்சரிக்கைகளுக்கும் - பயமுறுத்தல்களுக்கும் நிமலராஜன் பலதடவை உள்ளாகியிருந்தார்.

படையினரின் இரும்புப்பிடிக்குள் நடைபெறும் யாழ்ப்பாணத்தின் "ஜனநாயக அரசியலையும்" அதை நடாத்தும் தமிழ்க்குழுக்களின் அடாவடித்தனங்களையும் மிகத் தெளிவாகவே, அவர் உலகிற்கு எடுத்துக்கூறினார். அண்மையில் நடந்துமுடிந்த தேர்தல்கூத்தில் தமிழ்க்கட்சிகள் குறிப்பாக ஈ.பி.டி.பியினர் தீவகத்தை ஒரு அடிமைத்தீவாக வைத்திருக்கின்றனர். அங்குள்ள மக்களை அடிமைகள் போல தம்விருப்பப்படி ஆட்டுவிக்கின்றனர் என விமர்சனம் செய்தார். படையினரின் பாதுகாப்பில் இந்தத் துரோகிகள் நடாத்தும் கேலிக்கூத்தான அரசியலை எள்ளிநகையாடி, நிமலராஜன் செய்திகளை வெளியிட்டார்.

இதனால் தமிழ்க்குழுக்களின் குறிப்பாக ஈ.பி.டி.பியினரின் கொலை மிரட்டல்களுக்கு இவர் உள்ளானார்.

எனினும், இந்தவகை மிரட்டல்களைக்கண்டு நிமலராஜன் தனது பணியில் தடுமாறவில்லை. தனி ஒருவனைக் கொண்ட படைபோல நிமலராஜன் தனித்துநின்று குடா நாட்டு நிலவரங்களை அம்பலப்படுத்தி ஆக்கிரமிப் பாளர்களுக்கும்-அவர்களது அடிவருடிகளுக்கும் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்துவந்தார்.

யுத்தகளத்திற்கு நேரடியாகச் சென்று போர்ச்செய்திகளைத் திரட்டும் பத்திரிகையாளர்கள் ஒருவகை. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிக்குள் வசித்தபடி, ஆக்கிரமிக்கப்பட்ட மக்களுள் ஒருவராக இருந்துகொண்டே-அரசியல், இராணுவ நிலவரங்களை அம்பலபடுத்தும் பத்திரிகையாளர்கள் வேறொருவகையினர். முதல்வகைச் செய்தியாளர்களுக்குச் சாவு ஒருதடவைதான் வரும். ஆனால் அடுத்தவகைச் செய்தியாளர்கள் சாவை சதா சந்தித்தபடியே வாழ்க்கையை ஓட்டுவார்கள். நிமலராஜன் இந்தவகைச் செய்தியாளராகவே பணியாற்றினார். பலமுனைகளிலிருந்தும் சாவை சதா சந்தித்தபடியே-சாவுக்குப் பயப்படாது அவர் துணிச்சலுடன் பணியாற்றினார்.

ஒரு செய்தியாளன் என்ற நிலைக்கும் அப்பால்-குடாநாட்டுமக்களின் அவலவாழ்க்கையை துணிச்சலுடன் உலகிற்கு எடுத்துக்கூறும் ஒரு மக்கள் பிரதிநிதி போலவே நிமலராஜனின் செயற்பாட்டை தமிழ்மக்கள் கருதினர்.

அதனாலேயே, கொலைஞர்களின் குண்டுக்கு அவர் பலியானபோது குடாநாட்டு மக்கள் மட்டுமல்ல, தமிழீழ மக்கள் அனைவருமே தங்களது குரலை இழந்துவிட்டது போலத் துயரப்பட்டனர்.அவரது சாவுக்கு அஞ்சலி செலுத்தி இரங்கல் கூட்டங்களை நடாத்தினர். அவரின் உயிரைப் பறித்த கொலைஞர்களைக் கண்டனம் செய்து-தமது கோபத்தை வெளிப்படையாகக் காட்டினர்.

குடாநாட்டுச் செய்தியாளராக நிமலராஜன் பணியாற்றிய காலம் தமிழ்மக்களால் என்றும் நினைவுகூரப்படும். நிமலராஜன் என்ற செய்தியாளனும் தமிழரின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் நிலையான இடத்தைப் பெறுவார்.




காந்தள்
செண்பகம்
வாகை
சிறுத்தை
மாவீரர்
துயிலுமில்லங்கள்
தமிழீழம்
வீரவணக்க நாள்
மாவீரர் நாள் நவம்பர் 27
MAAVEERAR NAAL NOVEMBER
கொடிகாமம்
முழங்காவில்
தேவிபுரம்
வன்னிவிளாங்குளம்
கள்ளிக்காடு
எள்ளங்குளம்
விசுவமடு
முள்ளிவாய்க்கால்
ஆலங்குளம்
கல்லடி
ஆட்காட்டிவெளி
கனகபுரம்
இரட்டைவாய்க்காலையும் வலைஞர் மட கிரவல் வீதி பகுதி
கண்டலடி
தரவை
மனலாறு டடி முகாம்
ஈச்சங்குளம்
முள்ளியவளை
அளம்பில்
பெரிய பண்டிவிரிச்சான்
இறுதிப் போர்க்காலத்தில் முல்லையில் மாவீரர் துயிலுமில்லகள்:
தேவிபுரம் "ஆ" பகுதி குடியேற்ற திட்டம்
(சனவரி 20 பிற்பாடில் இருந்து பெப்ரவரி இறுதி வரை)
இரணப்பாலை பெருந்தோட்டம்
(சனவரி 20 பிற்பாடில் இருந்து பெப்ரவரி இறுதி வரை)
வலைஞர் மடம் தெற்கு களித்தரைப் பகுதி
(பெப்ரவரி இறுதியில் இருந்து மார்ச் முதலாவது கிழமை வரை)
வெள்ளா முள்ளிவாய்க்கால் கப்பல் வீதிக்கு அண்மையில் உள்ள பகுதி
(ஏப்ரல் 21– மே 12 வரை)
முள்ளிவாய்க்கால்
மே 13,14,15 அந்தந்த சூழ்நிலைக்கு ஏற்றாற்போல விதைக்கப்பட்டது.
முல்ளிவாய்க்கால்
மே 16,17,18 விதைக்கப்படவில்லை விடுபட்டன.
மனலாறு ஜீவன் முகாம்
இரணப்பாலை
மாவடி முன்மாரி
பெரியகுளம்
உடுத்துறை
தாண்டியடி
சம்பூர் ஆலங்குளம்
சாட்டி
கோப்பாய்
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் The Thirst of Thamils is the Homeland of Thamileelam
சங்கத்தமிழ்